உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 30 சனிக்கிழமை (14.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 169



# தமிழகத்தில் அ.தி.மு.க. அமோக வெற்றி!

## தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியில் நாளை முதல்வராகப் பதவியேற்கிறார் ஜெ

சென்னை, மே 14

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகளின் படி 203 தொகுதிகளை அ.தி.மு.க. கூட்டணி கைப்பற்றியுள்ளது. தி.மு.க. கூட்டணி 31 ஆசனங்களையே பெற்றது.

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா நாளை சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் மூன்றாவது தடவையாக தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்கின்றார்.

படுதோல்வியுற்ற தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்தபோதும், தமிழக ஆளுநர் சர்ஜித்சிங் பர்னாலா, ஜெயலலிதா பதவி ஏற்கும்வரை இராஜினாமா செய்யவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்தத் தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளன. தி.மு.க. அமைச்சர்கள் பலரும் இந்தத் தேர்தலில் தோல்வி கண்டுள்ளனர்.

(31ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ண பரிசளிப்பு இன்று

10 ஆவது உலகக் கிண்ண போட்டியை ஒட்டி 'உதயன்' நடத்திய போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு பரிசில்களைவழங்குவார். (ஐ)



02 பஞ்சாப் அணி வெற்றி



03 இந்திய அணிக்கு தலைவர் கம்பீர்



04 அடியோடு கவிழ்ந்தது தி.மு.க.



10 பூநகரி ம.வி.க்கு மீட்சி இல்லை



15 கண்ணீரைத் துடையுங்கள்

# மஹிந்தவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தக் கோருகிறார் ஜெயலலிதா!

### பொருளாதாரத் தடை குறித்தும் பிரஸ்தாபிப்பு

கொழும்பு, மே 14

**போர்க்குற்றவாளி எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த இந்திய அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் - என்று தமிழக முதல்வராக நாளை பதவியேற்கவிருக்கும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார்.**

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றியடைந்து நாளை 15ஆம் திகதி தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ள ஜெயலலிதா, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இரண்டு தீர்வுகளை நேற்று ஜெயா ரி.விக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஜெயா தொலைக்காட்சிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை

(31ஆம் பக்கம் பார்க்க)

### ஒரே பார்வையில் தமிழக தேர்தல் முடிவுகள்

| அ.தி.மு.க. கூட்டணி-203 | | தி.மு.க. கூட்டணி-31 | |
|---|---|---|---|
| அ.தி.மு.க. | 147 | தி.மு.க. | 23 |
| தே.மு.தி.க. | 29 | காங்கிரஸ் | 05 |
| இ.கம்யூ. | 09 | பா.ம.க. | 03 |
| ம.கம்யூ. | 09 | | |
| ஏனையவை | 09 | | |

## ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து அ.தி.மு.க. அரசுடன் பேசுவோம்

### மாவை தெரிவிப்பு

கொழும்பு, மே 14

''தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசுடன் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்தி இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வலியுறுத்துவோம்''

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகவும், அவர்களுடைய அரசியல் தீர்வு குறித்தும் ஆட்சிக்கு வந்துள்ள

(31ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மக்கள் வெடி கொளுத்தி நேற்று முழுவதும் மகிழ்ச்சி ஆரவாரம்

சென்னை,மே14

தமிழக சட்ட சபைத் தேர்தலில் பெற்ற வெற்றி, அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றியல்ல என்று கூறிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா, அந்த வெற்றி தமிழ்நாட்டு மக்களுக்கு உரியது என்று கூறினார்.

சென்னை போயஸ் தோட்டத்திலுள்ள தனது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஜெயலலிதா, இந்தத் தேர்தலில் பணபலம் நிச்சயமாகத் தோற்றுவிட்டது என்று கூறினார்.

அ.தி.மு.க. பெரும்பான்மைத் தொகுதிகளில் வெற்றி பெற்ற செய்திகள் வெளிவரத் தொடங்கியதும்(31ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சின் போது

## இரண்டாவது சபை உருவாக்கம் குறித்து அரசு-ஈ.பி.டி.பி. ஆராய்வு

கொழும்பு,மே.14

இரண்டாவது சபையை உருவாக்குவதற்கு அரசு தயாரித்துள்ள திட்ட வரைவு குறித்து அரச - ஈ.பி.டி.பி பிரதிநிதிகள் நேற்று முன்தினம் ஆராய்ந்துள்ளனர்.

அரசு - ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளுக்கு இடையில் நடந்த 2ஆம் கட்ட பேச்சுக்களின் போதே இந்த திட்ட வரைவு குறித்து ஆராயப்பட்டதாக ஈ.பி.டி.பி. தெரிவித்தது.

இது தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(31ஆம் பக்கம் பார்க்க)

### 'நாம் இலங்கையர்' அமைப்பின் ஏற்பாட்டில்

## காணாமற்போன உறவுகளைத் தேடித் தரக்கோரி திருகோணமலை நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 14

திருகோணமலை மாவட்டத்திலிருந்து காணாமற்போனவர்களின் பெற்றோர், உறவினர்கள் தமது உறவுகளைத் தேடித் தருமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாம் இலங்கையர்கள் அமைப் பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை பஸ் நிலையத்துக்கு முன்னால் நடைபெற்றது.

(31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தடித்தது பஞ்சாப்: வெளியேறியது கொச்சி

-டிலீப்-

ஐ.பி.எல்லின் 57 ஆவது ஆட்டம் நேற்று. பலம் பார்த்தன பஞ்சாப் - கொச்சி. பஞ்சாப்புக்குத் தலைமை கில்கிறிஸ்ட். மஹேல ஜெயவர்த்தன கொச்சியின் தலைவர். நாணயச் சுழற்சியில் கில்லி வெற்றி. பணித்தது கொச்சியை துடுப்பெடுத்தாட.

மஹேல - பிரன்டன் மக்கலம் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். மஹேல அடுத்தடுத்து முதலாவது ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். அமர்களமாய் ஆரம்பமானது அதிரடி. தொடர்ச்சியாக மஹேல சிறப்பாய் அதிரடி ஆட்டம். மக்கலம் ஆரம்பம் அடக்கமான ஆட்டம். 31 பந்துகளில் பூர்த்தி செய்யப்பட்டது 50 ஓட்டங்கள் இணைப்பாட்டம். முடியவில்லை அவர்கள் ஆட் டம். ஹரிஸ் வீசினார் ஏழாவது ஓவர். மக்கலம் தொடங்கினார் அதிரடி. இரண்டு சிக்ஸர்கள் அடுத்தடுத்து பறந்தது அவரது ஓவரில்.

ஆரம்ப இணைப்பு பலமான அத்திபாரம். ஒன்பதாவது ஓவரில் பிரிக்கப்பட்டது இணைப்பு. 93 ஓட்டங்கள் பகிரப்பட்டது முதலாவது விக்கெட் இணைப்பாட்டம். பிபுல் சர்மாவின் ஓவரில் வீழ்ந்தார் மக்கலம். 27 பந்துகளில் 2 பவுண்டரிகள், சிக்ஸர்கள் அடங்கலாய் 32 ஓட்டங்கள்.

நுழைந்தார் ஜடேஜா. மஹேலவின் அதிரடியும் குறை வில்லை. மறுமுனையில் புகுந்தவராலும் அதிரடிக் கணக்கு தொடக்கம். சாவ்லாவின் ஓவரில் ஜடேஜாவின் அதிரடி ஆரம் பம். அடுத்த பந்தில் ஜடேஜாவின் பிடியைக் கோட்டை விட் டது பஞ்சாப். சாவ்லா விடவில்லை ஜடேஜாவை. சரித்தார் 14 ஆவது ஓவரில். 17 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு திரும்பினார் ஜடேஜா. 56 பந்து களில் கொச்சி 100 ஓட்டங்கள் பூர்த்தி. மஹேல 30 பந்துகளில் அரைச்சதம் பூர்த்தி.

ஹொஜ் வந்தார் களத்துக்கு. 4 ஓட்டங்களுடன் வெளியேற்றம். ஷா நுழைந்தார். அதிரடிகள் உச்சக்கட்டத்தை தொட்டது. தப்பவில்லை எவரது ஓவரும். சிக்ஸர் சென்று கொண்டேயிருந்தது. கொச்சி பெற்றுக் கொண்டது 100 பந்துகளில் 150 ஓட்டங்கள். 12 பந்துகளில் பவுண்டரி, 2 சிக்ஸருடன் 23 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார் ஷா. ரன் அவுட்டில் முடிவுக்கு வந்தது ஆட்டம். மஹேல மறுமுனையில் தொடர் தாக்குதல். வீழ்ந்து கொண்டிருந்தது எல்லைக்கு வெளியில் பந்துகள்.

ஷா சரிவு. பட்டேல் நுழைவு. சந்தித்த முதல் பந்தே ஆட்டமிழப்பு. இறுதி வரை தொடர்ந்தது மஹேலவின் பயணம். இறுதிப் பந்தில் ரன் அவுட்டுடன் எட்டியது நிறைவை. 52 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 76 ஓட்டங்கள். 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கின அவரது அதிரடியில். 20 ஓவர்களில் கொச்சி பெற்றது 178 ஓட்டங்கள். பஞ்சாப்பிடம் இழந்தது 7 விக்கெட்டுக்கள்.



கார்த்திக்

வெற்றியை எட்ட விரட்டத் தொடங்கியது பஞ்சாப். கில்லியுடன் - வல்த்தாட்டி களத்துக்கு நுழைவு. இவர்களின் ஆரம்பம் அதிரடி. நிலைக்கவில்லை நீண்ட நேரத்துக்கு. கில்லியின் கணக்கு 9 ஓட்டங்களுடன் எட்டியது முடிவை. வல்த்தாட்டி 10 பந்துகளில் 17 ஓட்டங்கள்.

மார்ஷ் - டினேஸ் கார்த்திக் இணைவு மூன்றாவது விக்கெட்டுக்காக. துள்ளிக் குதித்த கொச்சியின் ஆட்டம் அடங்கியது. தொடங்கியது பஞ்சாப்பின் அதிரடி. சீறிப் பறந்தன பந்துகள். முன்னின்று தாக்கினார் கார்த்திக். கொச்சியின் தடுப்பரண் கள் சின்னாபின்னம். வெற்றியின் விளிம்புவரை கொண்டு வந்தனர். 69 பந்துகளில் பெற்றுக் கொடுத்தனர் 100 ஓட்டங்கள். கார்த்திக் 24 பந்துகளில் 50 ஓட்டங்கள் பூர்த்தி. இணைப்பாட்டம் பிரிக்க திண்டாட்டம். மூன்றாவது விக்கெட் இணைப்பு 50 பந்து களில் கடந்தது 100 ஓட்டங்கள்.

போராட்டம் தீவிரம். இறுகியது நிலவரம். இறுதியில் 111 ஓட்டங்கள் பகிரப்பட்டது மூன்றாவது விக்கெட்டுக்காக. வீழ்ந்தார் கார்த் திக். வீழ்த்தினார் ஆர்.பி.சிங். 33 பந்துகளில் 69 ஓட்டங்கள். 5 சிக்ஸர்கள், 7 பவுண்டரி கள் அடக்கம் இதில். காதலன் பிரிந்த சோகம் தாங்காமல் காதலி வீழ்வது போல் அடுத்து வீழ்ந்தார் மார்ஷ். அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்ந்ததால் வெற்றி மெல்ல கொச்சியின் பக்கம் சாய்வு. விடவில்லை டேவிட் ஹஸி - மன்டீப் சிங். இறுதி அதிரடியில் வெற்றியை தம்பக்கம் வீழ்த்தினர். வெற்றி 7 பந்து கள் மீதமிருக்கையில் 6 விக்கெட் டுக்களால் கிடைத்தது. பந்து வீச்சில் ஆர்.பி.சிங் சாய்த்தார் 4 விக்கெட் டுக்கள்.

ஆட்ட நாயகனாய் கார்த்திக் தெரிவு.



மஹேல

# பந்துவீச்சு பயிற்சியாளர் ஆஸிக்கு நியமனம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான கிரேக் மெக்டார்மெட் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது. இதேபோல் ஏற்கெனவே உதவி பயிற்சியாளராக உள்ள ஜஸ் டின் லாங்கரின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மெக்டார்மெட் 1984 முதல் 1996 வரை ஆஸ் திரேலிய அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாள ராக திகழ்ந்தவர். 71 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 291 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 138 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 203 விக் கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

முன்னதாக ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் பதவிக்கு தென்னாப்பிரிக் காவின் முன்னாள் வேகப்பந்து வீச்சா ளரான டொனால்டுக்கே அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. (15)

DLF INDIAN PREMIER LEAGUE

## அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை சூப்பர் கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 08 | 03 | 0 | 0 | + 0.314 | 16 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 11 | 07 | 03 | 0 | 1 | + 0.863 | 15 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 05 | 06 | 0 | 1 | - 0.587 | 11 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.338 | 10 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 12 | 05 | 07 | 0 | 0 | - 0.628 | 10 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.363 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 11 | 03 | 08 | 0 | 0 | - 0.177 | 06 |

## இன்றைய ஆட்டம்

- பெங்களூர் றோயல் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (மாலை 4 மணி)
- மும்பை இந்தியன்ஸ் எதிர் டெக்கன் சார்ஜஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (6 ஆட்டங்கள் 398 ஓட்டங்கள்)
- ஹஸி – சென்னை (10 ஆட்டங்கள் 393 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (11 ஆட்டங்கள் 26 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல்– மும்பை (11 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (9 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

# மேன்முறையீட்டுத் திட்டம் இந்தியா எதிர்ப்பு

அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் நடுவரின் தீர்ப்பை மேன்முறையீடு செய்யும் (டி.ஆர்.எஸ்) முறையை அறி முகம் செய்யும், ஐ.சி.சியின் முடிவுக்கு, பி.சி.சி.ஐ எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 2009 முதல் டெஸ்ட் போட்டிகளில் நடுவரின் தீர்ப்பை மறு பரிசீலனை (டி.ஆர்.எஸ்) முறை, அந்தந்த நாடுகளின் விருப்பத்துக்கு ஏற்ப நடைமுறையில் உள்ளது. இதுவரை 31 போட்டிகளில் பயன் படுத்தப்பட்ட இதில் ஒவ்வொரு இனிங்சிலும் தலா 2 முறை, மேன்முறையீடு செய்யலாம்.

இதனிடையே, டி.ஆர்.எஸ் முறையை, எதிர்வரும் காலங்களில் அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் பயன் படுத்த, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) முடிவு செய்துள்ளது. தவிர, ஒருநாள் மற்றும் 'ரி-20' போட்டிக ளிலும், டி.ஆர்.எஸ் முறையை, ஐ.சி.சி அறிமுகம் செய்ய வுள்ளது. ஆனால் இதில் தலா ஒரு முறை மட்டுமே மேன் முறையீடு செய்யலாம்.

ஐ.சி.சியின் இந்த முடிவுக்கு இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) வழக்கம் போல எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகை யில்,'நாங்கள் எப்போதுமே டி.ஆர்.எஸ் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றோம். ஐ.சி.சியின் தலைமை அதிகாரி கள் கூட்டத்தில் எங்கள் எதிர்ப்பை மீண்டும் தெரிவிப் போம் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் மிகக் கடுமையான சவால்



டெக்கான் அணிக்கு எதிரான ஆட்டம் என் வாழ்க்கையின் மிகக் கடினமான சவால் என்று முன்னாள் அணித்தலைவர் செளரவ் கங்குலி கூறினார்.

ஹைதராபாத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டெக்கான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கங்குலி 32 பந்துகளில் ஆட்ட மிழக்காமல் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்கள் எடுத்து புனேயின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார்.

அதன்பிறகு அவர் கூறியதாவது:

இந்த ஆட்டம் என் வாழ்க்கையின் கடினமான தருணமாகக் கூட இருக்கலாம். ஏனென்றால் கடந்த 5 மாதங்களாக நான் துடுப்பைத் தொடவில்லை. நான் களத்தில் இறங்கிய போது துளியும் நம்பிக்கை இல்லாமலேயே இறங்கினேன். அதேசமயம் என் மீது மிக அளவில் எதிர்பார்ப்பு இருந்தது என்றார்.

கங்குலியைப் பாராட்டிய புனேயின் பயிற்சியாளர் ஜெப் மார்ஷல் கூறுகையில், ''இந்த ஆட்டத்தில் கங்குலி சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் களம் கண்டாலும், அவர் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தார். அவர் அணிக்கு வெற்றி தேடித்தரக்கூடிய திறமையான வீரர். கிரிக்கெட்டின் மீதான அவரின் காதல் இன்னும் குறையாமல் அப்படியே உள்ளது என்றார்.

இதற்கு முந்தைய ஆட்டங்களில் கங்குலி சேர்க்கப்படாதது குறித்து மார்ஷிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:

கங்குலி மனரீதியாக போட்டிக்கு தயாராக இல்லாததினால் களம் இறக்கவில்லை. அவர் போட்டியில் களம் இறங்குவதற்கு மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் தயாராக வேண்டியிருந்தது என்றார். (15)

# கொமன்வெல்தில் ரி-20

கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியை சேர்ப்பது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் (ஐ.சி.சி) கொமன் வெல்த் சம்மேளனம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இதுகுறித்து கொமன் வெல்த் விளையாட்டு சம்மேளனத்தின் சீராய்வுக் குழு தலைவர் டங்கு இம்ரான் கூறியதாவது:


கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியை சேர்க்க விரும்புகின்றோம். அதனால் எங்களின் கோரிக்கையை ஏற்குமாறு ஐ.சி.சியிடம் உயர் மட்டக் குழு பேச்சு வார்த்தை நடத்தும். அதனை ஐ.சி.சி ஏற்கும்பட்சத்தில் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்படும். ஆனால் அது அவ்வளவு எளிதானதல்ல.

2018 ஆம் ஆண்டு கொமன் வெல்த் போட்டியை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலுமே கிரிக்கெட் போட்டி பிரபலமானது. பீச் வொலிபோல் போட்டியை சேர்க்கவும் இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது. செயின்ட் கீட்ஸில் வரும் நவம்பரில் நடைபெறவுள்ள கொமன் வெல்த் சம்மேளனத்தின் கூட்டத்தின்போது போட்டியை யார் நடத்துவது, பீச் வொலிபோல் போட்டியை சேர்ப்பது குறித்து வாக்கெடுப்புநடைபெறும் என்றார்.

முன்னதாக 1988 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்பட்டது. ஆனால் அதன்பிறகு ஐ.சி.சிக்கும், கொமன்வெல்த் சம்மேளனத்துக்கும் இடையிலான கருத்துவேறுபாடு காரணமாக கிரிக்கெட் போட்டி இடம்பெறவில்லை.

கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியை சேர்ப்பது தொடர்பாக கொமன்வெல்த் சம்மேளனம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை (பி.சி.சி.ஐ) அணுகியது.

ஆனால் அந்த கோரிக்கையை பி.சி.சி.ஐ நிராகரித்து விட்டது. (15)



# வோர்னுக்கு எதிராக குற்றம்

ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் ராஜஸ்தான் றோயல்ஸ் கிரிக்கெட் சபையின் செயலர் சஞ்சய் டக்ஸீட்டை தகாத வார்த்தைகளால் திட்டினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது குறித்து ராஜஸ்தான் றோயல் கிரிக்கெட் சபை பி.சி.சி.ஐ மற்றும் ஐ.பி.எல் கிரிக்கெட் நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: ஜெய்ப்பூரில் நடந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. அதில் பெங்களூர் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் கோபமடைந்த வோர்ன் மைதானத்தை தான் கூறியபடி செம்மைபடுத்தாமல் விட்டதால் தோல்வி அடைந்து விட்டோம் என்று சஞ்சயே திட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜஸ்தான் அணித் தலைமைக்கு நான் தயார்

2012ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் அணிக்கு தலைமை வகிக்க ஆஸ்திரேலிய வீரர் வொட்சன் விருப் பம் தெரிவித்துள் ளார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் இப்போதைய அணித்தலைவர் ஷேன் வோர்ன் இந்த ஐ.பி.எல் தொடரோடு ஓய்வு பெறுகின்றார்.

இந்த நிலையில் இது குறித்து வொட்சன் மேலும் கூறியதாவது: ஷேன் வோர்ன் ஓய்வு பெறுவதால் ராஜஸ்தான் அணிக்கு தலைமையேற்க விரும்புகின்றேன். ஆனாலும் வேறு சிலருக்கும் அணித் தலைவராகும் வாய்ப்பு இருக்கலாம். அதனால் ஒருவேளை எனக்கு அணித் தலைமை பதவி கிடைக்காமல் போகலாம்.

இந்த ஐ.பி.எல் தொடரில் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இருப்பினும் அடுத்த இரு ஆட்டங்களிலும் சிறப்பாக விளையாடி வெற்றியுடன் அணித்தலைவர் வோர்னை வழியனுப்புவோம் என்றார்.

தனது கிரிக்கட் ஆட்டத்தைப் பற்றி கூறிய அவர், இருபது ஓவர் ஆட்டத்தைப் பொறுத்தவரையில் நிலையாக ஒரே மாதிரி தொடர்ந்து விளையாட முடியாது. எல்லா ஆட்டங்களுக்கும் ஒரே மாதிரியாகவே தயாராகின்றேன். ஐ.பி.எல் தொடரில் விளையாடுவது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனாலும் நான் எதிர்பார்த்தது போல் விளையாட முடியவில்லை என்றார்.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் ஐ.பி. எல் தொடரில் தொடர் நாயகன் விருதை வென்ற வொட் சன், இந்த ஐ.பி. எல் தொடரில் இது வரை 221 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.(15)




# சொந்த மண்ணில் வெற்றியை தாரை வார்க்கமாட்டோம்

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் 18 ஓட்டங்களில் டெல்லி டெயாடெவில்ஸ் அணியை வீழ்த்தியது. முதலில் விளையாடிய சென்னை சூப்ப கிங்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 176 ஓட்டங்கள் குவித்தது.

டோனி 31 பந்துகளில் 63 ஓட்டங்களும் (5 பவுண்டரிகள், 4 சிக்சர்கள்) பத்ரி நாத் 43 பந்து களில் 55 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் விளையாடிய டெல்லி அணியால் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 158 ஓட்டங்ளே எடுக்க முடிந்தது. பதான் அதிகபட்சமாக 44 ஓட்டங்கள் (34 பந்து களில், 3 பவுண்டரிகள், 2 சிக்சர்கள்) எடுத்தார்.

அஸ்வின், பிராவோ தலா 2 விக்கெட்டுக்கள் கைப் பற்றினார்கள். சென்னை சூப்ப கிங்ஸ் பெற்ற 8 ஆவது வெற்றியாகும். 12 ஆட்டத் தில் 8 வெற்றிகள், 4 தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்றுள்ளது. ஓட்ட சராசரியில் முன்னிலை பெறுவதால் சென்னை சூப்ப கிங்ஸ் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. நேற்றைய வெற்றி மூலம் சென்னை அணி அடுத்த சுற்றுக்கான வாயப்பை பெற்றது.



மும்பை அணி 11 ஆட்டத்தில் 8 வெற்றிகள், 3 தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் உள்ளது. டெல்லி அணி 8 ஆவது தோல்வியைச் சந்தித்து போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது. ஏற்கனவே டெக்கான் அணியும் வெளியேறியது. சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் தொடர்ந்து 6 ஆவது வெற்றியை பெற்றது.

இதனால் டோனி மிகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறிய தாவது:-

உள்ளூர் மைதானத்தில் தொடர்ந்து வெற்றி பெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. அதற்காக சேப்பாக்கத்தில் நாங்கள் தோற்க மாட்டோம் என்று அர்த்தம் இல்லை. இந்த நாள் சிறப்பாக அமைந்து வெற்றி பெற்றோம். இந்த வெற்றியால் நாங்கள் அதிக நம்பிக்கை அடையவில்லை. எனது துடுப்பாட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது.

இவ்வாறு அவர் கூறினார். (15)

# இந்திய அணிக்கு கௌதம் கம்பீர் அணித் தலைவர்



மேற்கிந்திய அணியுடனான ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணிக்கு கௌதம் கம்பீர் தலைமை தாங்கவுள்ளார். இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்களான எம்.எஸ்.டோனி, சச்சின் டெண்டுல்கர், சகீர் கான் ஆகியோருக்கு இந்தப் போட்டிகளிலிருந்து ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான 16 பேர் கொண்ட இந்திய அணி நேற்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. சுரேஷ் ரெய்னா உபதலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த எஸ்.பத்ரிநாத், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த விக்கெட் காப்பாளர் விரிதிமான் சஹா, கர்நாடக வேகப்பந்து வீச்சாளர் வினய் குமார் ஆகியோரும் இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமிர் மிஷ்ரா, ரோஹித் சர்மா ஆகியோர் மீண் டும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய குழாமில் இடம்பெற்ற பியூஷ் சாவ்லா, எஸ்.ஸ்ரீசாந்த் ஆகியோர் மேற்கிந்திய சுற்றுலாவுக்கு சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக் தோள்மூட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளதால் அவர் மேற்கிந்திய சுற்றுலாவுக்கு கருத்திற்கொள்ளப்படவில்லை.

இந்திய அணி மேற்கிந்தியத் தீவில் முதலில் 20 ஓவர் போட்டியொன்றில் விளையாடவுள்ளது. ஜூன் 4 ஆம் திகதி இப்போட்டி நடைபெறும். அதன்பின் ஜூன் 6ஆம் திகதிமுதல் 5 ஒருநாள் சுற்றுப்போட்டிகளில் இரு அணிகளும் மோதவுள்ளன.

ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய குழாம் :

கௌதம் கம்பீர் (தலைவர்), சுரேஷ் ரெய்னா, பார்தீவ் பட்டேல் (விக்கெட் காப்பாளர்) வீரட் கோலி, யுவராஜ் சிங், எஸ்.பத்திரிநாத், ரோஹித் சர்மா, ஹர்பஜன் சிங், ஆர். அஸ்வின், பிரவீன் குமார், இஷாந் சர்மா, முனாவ் பட்டேல், வினய் குமார், யூசுப் பதான், அமித் மிஷ்ரா, விரீதிமன் சஹா. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியோடு கவிழ்ந்தது தி.மு.க.

எஸ்.சுரேந்திரஜித்



தமிழகத்தின் வரலாற்றில் கிட்டத் தட்ட 30 வருடங்களாக ஆளும் கட்சி ஒன்று தேர்தலில் மீண்டும் வென்ற வரலாறே கிடையாது. ஐந்து வருடங்கள் ஆட்சி செய்து முடித்திருக்கும்போது மக்களுக்கு அந்த ஆட்சிமீது அகோர வெறுப்பு ஏற்படும் வகையில் ஆளும் கட்சியின் அட்டகாசங்கள் அமைந்திருக்கும். இதனால், ஆளும் கட்சியைத் தோற்கடிக்க வென்றே பிரதான எதிர்க்கட்சிக்கு மக்கள் வாக்களிப்பர். அதே பாணியில் நேற்று வெளியான தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுகளும் அமைந்துள்ளன.

ஒரு தடவை தி.மு.க வென்றால் அடுத்த தடவை அ.தி.மு.க தான் என்பது நியதி. இதிலிருந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந் ததும் கண்மண் தெரியாமல் ஊழல் செய்வதும் அதற்கு மக்கள் தண்டனை கொடுப்பதும் என்ற நியதியைத் தமிழக அரசியல்வாதிகளால் மாற்றமுடியாது என்பது தெளிவாகும்.

ஜெயலலிதா மூன்றாவது தடவையாக முதல்வராகிறார். சென்ற இரு தடவைகள் போலன்றி காங்கிரஸ் உதவியின்றி முதல்வராவது முக்கிய வேறுபாடாகும். ஆனால், தே.தி.மு.க உதவியின்றி அவரால் வெல்லமுடியாது போயிருக்கும். கம்யூனிஸ்ட்களும் 'ஜெ'க்கு முழு ஒத்தாசை வழங்கினர் என் பதும் கவனிக்கத்தக்கது.

'ஸ்பெக்ட்ரம்' 'ஸ்பெக்ட்ரம்' என திரும்பிய இடமெங்கும் ஸ்பெக்ட்ரம் ஊழல் பேசப்பட்டது தி.மு.கவை மோசமாகத் தாக்கியுள்ளது. தி.மு.க அமைச்சர்களின் ஆணவமும், ரவுடித்தனமும் அந்தக் கட்சியை சாப்பிட்டுவிட்டது என்பதே உண்மை. உதாரணமாக திருச்சி மாவட்ட தி.மு.க அமைச்சர் நேரு, சேலம் மாவட்ட தி.மு.க அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் இருவரும் ரவுடித்தனம், கொலை, கப்பம் ஆகியவற்றுக்கு பெயர்பெற்றவர்கள். இவ்விருவரும் தத்தம் தொகுதிகளில் மண்கவ்வ நேர்ந்துள்ளது. இதுதவிர மேலும் பல அமைச்சர்களும் தோல்வி கண்டுள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் மடத்துக்குளத்தில் நெடுஞ்சாலை அமைச்சர் வெள்ளக்கோயில் சாமிநாதன், திருவொற்றியூரில் மீன்பிடி அமைச்சர் கே.பி.பி.சாமி, கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பிடியில் சுகாதார அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், தஞ்சாவூரில் அமைச்சர் உபயத்துல்லா, தோல்வியே காணாத கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அருப்புக்கோட்டையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தா.மோ.அன்பரசன் என வரிசையாக தி.மு.க அமைச்சர்கள் மரண அடி வாங்கியுள்ளனர். சென்னை எழும்பூரில் பரிதி இளம்வரிதி, தெற்கே திருச்சுழி தொகுதியில் கல்வியமைச்சர் தங்கம் தென்னரசு, வடக்கே திருவண்ணாமலை மாவட்டத்தில் உணவு அமைச்சர் எ.வா.வேலு என விரல்விட்டு எண்ணக்கூடிய தி.மு.க அமைச்சர்களே வென்றுள்ளனர்.

இதேவேளை அ.தி.மு.க அணி வென்றாலும், அ.தி.மு.க தனித்து வென்றுவிடக்கூடாது எனக் கருதிய நடு நிலைவாதிகளும் விஜயகாந்த், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட ஜெயலலிதாவின் நேசக்கட்சிகளும்கூட மனமுடைந்துவிட்டன. தனித்து பெரும்பான்மை கிடைத்தால் ஜெ என்ன ஆட்டம் போடுவார் என்பது சகலருக்கும் தெரிந்ததே. கடிவாளம் விஜயகாந்த் கையிலோ, கம்யூனிஸ்ட் கையிலோ இருந்தால் ஜெயலலிதாவை கட்டுப்பாட்டில் வைத்து தமிழகம் நல்லாட்சிபெற வழி பிறந்திருக்கும். கலைஞர் போய் 'ஜெ' வந்தது இருமலை விட்டு தும்மலைப் பிடித்த கதைதான்.

காங்கிரஸ் கட்சி தி.மு.கவின் தோளில் சவாரிசெய்யப்போய் இருந்த முப்பத்தைந்து எம்.எல்.ஏக்களில் பெரும் எண்ணிக்கையை இழந்துள்ளது. காங்கிரஸ் தனித்தோ, விஜயகாந்துடன் கூட்டணியில் போட்டியிட்டிருந்தாலோ ஓரளவு கரைசேர்ந்திருக்க முடியும். ஆனால், ஈழ விவகாரம், காங்கிரஸின் கோஷ்டி சண்டை, தி.மு.கவுடன் இருந்த முறுகல் என்பவற்றைப் பார்க்கும்போது காங்கிரஸுக்கு இந்த எண்ணிக்கை கிடைத்ததே பெரிய விடயம்தான். தி.மு.கவை நம்பி இழப்பைச் சந்தித்த கட்சிகளில் பா.ம.கவும், விடுதலைச் சிறுத்தைகளும் அடங்கும். பா.ம.க தொடர்ச்சியாக இரண்டாவது தேர்தலிலும் அடிவாங்கி உள்ளது. இனி அந்தக் கட்சி தலையெடுப்பது கடினம் என்றே தோன்றுகிறது. இந்தத் தேர்தல் தோல்வி தி.மு.க, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் என தி.மு.க அணிக் கட்சிகளுக்கு பேரதிர்ச்சிதான் என்றாலும் பா.ம.கவின் நிலை மற்றைய எல்லாக் கட்சிகளின் நிலையை விடவும் பரிதாபகரமானது. ஏற்கனவே பா.ம.க தொண்டர்கள் தே.தி.மு.கவில் ஐக்கியமாகிவந்த நிலையில் தே.தி.மு.க பாரிய சக்தியாக உருவெடுத்திருப்பது பா.ம.கவை கூண்டோடு காலியாக்கிவிடவும்கூடும்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலுவே தனது மைலாப்பூர் தொகுதியில் தோற்றுப்போயுள்ளார். ஏற்கனவே அவரது தலைமைக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு இருந்தாலும், தேர்தலில் காங்கிரஸ் கரைசேர்ந்தால் தங்கபாலுவின் தலை தப்பலாம் எனக் கருதப் பட்டது. தேர்தல் முடிவு வரை தங்கபாலு மீது நடவடிக்கை எடுப்பதை சோனியா பிற்போட்டிருந்தார். தங்கபாலுவும் தான் காமராஜரின் நகல் என்பதுபோல் தனது பதவியில் இருந்து எவரும் தன்னை நீக்கமுடியாது என அறிக்கையிட்டும் இருந்தார். இப்போது தனது தொகுதியிலேயே அவர் தோற்றுள்ளதால் அவரது பதவிக்கு மிக விரைவில் வேட்டு வைக்கப்படும் என்பது நிச்சயம். கடைசியாக நடந்த சட்டசபைத் தேர்தலிலும் தங்கபாலு போட்டியிட்டு தோற்றிருந்தார்.

விஜயகாந்தைப் பொறுத்தவரை அவர் புதிய வரலாற்றை எழுதியுள்ளார் என்பது உண்மைதான். தமிழக அரசியலில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுக்குப் பின் முத்திரை பதித்த முதல் நடிகர் அரசியல்வாதி இவர் ஆவார். எந்த தமிழக சட்டசபைத் தேர்தலிலும் ஒரு தந்திரோபாயக் கூட்டணி முடிவுகளில் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துவது வழக்கம். 1991இல் காங்கிரஸ்- அ.தி.மு.க, 1996இல் தி.மு.க-த.மா.கா, 2002இல் அ.தி.மு.க-காங்கிரஸ், 2006இல் தி.மு.க-காங்கிரஸ்-பா.ம.க என வெற்றிக் கூட்டணிகள் அமைய தந்திரோபாயக் கூட்டணிகளாக அவை இருந்தமையே காரணம். இவை யாவற்றிலும் காங்கிரஸ் கட்சி ஏதோ ஒரு வடிவத்தில் பங்குபெற்றே உள்ளது. அந்தோ பரிதாபம்... இந்தத் தடவை காங்கிரஸ் வெற்றிபெற்ற பக்கத்தில் இல்லவே இல்லை. அந்த வகையில் அந்த இடத்தை விஜயகாந்த் நிரப்பியுள்ளார். எனவே, விஜயகாந்த் கட்சியானது பா.ம.க, காங்கிரஸ் என இரு கட்சிகளின் இடத்தை ஒருங்கே கைப்பற்றிக் கொண்டுவிட்டது எனலாம்.

கனிமொழி கைது, இலங்கை விவகாரத்தில் ஐ.நா அறிக்கை என முக்கிய இரு விவகாரங்கள் தேர்தலுக்கு முன் நடந்திருந்தால் தி.மு.க அணி பூச்சியமாகவே போயிருக்கக்கூடும். இவை இரண்டும் தேர்தலுக்குப் பின்பு நடக்கட்டும் என சோனியாகாந்தியும் கலைஞரும் கால அட்டவணை போட்டுக் காத்திருந்தனர். அதன்படி நடந்ததுமே தேர்தல் முடிவுகள் தி.மு.கவைப் பந்தாடியுள்ளன.



தேர்தல் முடிவுகளில் மற்றொரு அதிசயம் தி.மு.க தோற்று ஆட்சியிழக்கும் எல்லா தடவைகளிலுமே படுதோல்வி காண்பது வழக்கம். இந்தத் தடவையும் அது தவறாது நிகழ்ந்துவிட்டது. மாறாக அ.தி.மு.கவே தோற்று ஆட்சியிழந்தாலும் கௌரவமான எதிர்க்கட்சியாக உருவெடுத்து இருந்திருக்கிறது. கடைசியாக நடந்த 2006 சட்டசபைத் தேர்தலில் முதல்வர் ஜெயலலிதாவின் அ.தி.மு.க ஆட்சியிழந்தாலும் 61 தொகுதிகளை வென்று பலமான எதிர்க்கட்சியாகத் திகழ்ந்தது. ஆனால், இந்தத் தடவை தோற்று ஆட்சியிழந்த தி.மு.க 30 இற்கும் குறைவான இடங்களையே பெற்று நலிந்துபோய்விட்டது. அ.தி.மு.கவில் தலைமை சரியில்லை, இரண்டாம் நிலைத் தலைவர்கள் நேர்மையானவர்கள். தி.மு.கவோ தலைமை அரசியல்வாதிக்குரிய சகிப்பு, பொறுமை, சாணக்கியம் என்பவற்றைக் கொண்டதாக இருப்பினும் 95 வீதமான இரண்டாம் நிலை தி.மு.க தலைவர்கள் ரவுடிகள் மட்டுமே. தி.மு.க என்பதற்குப் பதிலாக ர.மு.க (ரவுடிகள் முன்னேற்றக் கழகம்) என பெயர்மாற்றலாம் என மூத்த அரசி யல் ஆய்வாளர் ஒருவர் கிண்டலடித்துள்ளார்.

தமிழ் செம்மொழி மாநாடு, இலவச தொலைக்காட்சி, வீடு, மிக்ஸி என தலைகீழாக நின்றாலும் ஊழலற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்தும் ஆட்சியே வெற்றியின் அடிப்படை என்பதைத் தி.மு.க மிகவும் பிந்தி இப்போது உணர்ந்திருக்கும். மேலும் 1967இல் கலைஞர் முதல்வரானதைவிட இன்று பலமடங்கு தமிழ்நாட்டின் கல்வியறிவு உயர்ந்துள்ளது. வெகுஜன ஊடகங்களும் வளர்ந்துவிட்டன. மக்களின் கல்வியறிவு பெருகப்பெருக சட்டத்தின் ஆட்சி என்பதைக் குடிமக்கள் அதிகம் அதிகமாக அரசிடம் எதிர்பார்க்கவே செய்வர். இது தவிர்க்க முடியாதது. காலமாற்றத்தை உணராது அதே ரவுடித்தனம், கட்டப்பஞ்சாயத்து என தி.மு.கவினர் வளர்ந்ததற்கு கைமேல்பலன் இன்று கிடைத்துள்ளது.

இந்தியாவின் பல மாநிலங்களில் ஆட்சியில் உள்ள அரசுகள் தொடர்ந்து 2-3 தடவைகள் ஆட்சியைத் தக்கவைக்கும் போக்கு சமீபகாலமாக உருவெடுத்து வருகிறது. ஒரிசா, குஜராத், ஆந்திரா, அஸாம், மேற்கு வங்கம் என பல மாநிலங்களில் இவ்வாறு இருந்தாலும் தமிழகம் மட்டும் ஆளும் கட்சியை வீட்டுக்கு அனுப்பும் பிரியாவிடையாகவே தேர்தலைக் கருதுகின்றது. இதற்கான பழியைத் தமிழக அரசியல்வாதிகளே ஏற்கவேண்டும். எந்தளவுக்கு மக்களை இவர்கள் சுரண்டுகின் றார்கள் என்பது பாரிய ஒருதலைப்பட்சமான இத்தகைய தேர்தல் முடிவுகளில் இருந்து நன்கு உணரப்படலாம்.

*

## சென்று வா தலைவா நீயும்

முடியதும் உதிர்ந்து போக
மூப்பினுக்கு அடிமை யாகி
நடையதும் இழந்து நொந்து
நாற்காலியே தஞ்ச மென்று
ஆயிரம் பிறையைக் கண்ட
அண்ணலே கலைஞர் ஏறே!
கடிகமழ் தமிழ் அன்னை தன்னை
கட்டியே அணைத்து நீயும்
முடிவினில் மூச்சடங்கு மட்டும்
முத்தமிழினைக் காப்பேன் என்று
துறவிகள் அணியும் தூய
மஞ்சள் துண்டினை சால்வையாக்கி
செஞ் சொல்லால் மாலை கட்டி
சிறப்புறு மகுடம் சூட்டி
செய்தனை சிறந்த தொண்டு
பாலற்கு முட்டை தந்து
பள்ளியில் படிக்க வைத்தாய்
ஒரு கொத்து அரிசி தன்னை
ஒரு ரூபாய்க்கு உண்ணத் தந்து
செம்மொழி தமிழே என்று
செகத்தினிற்கு எடுத்து ரைத்து
அலைகடல் ஆற்பரித்த தென்ன
ஆர்ப்பரித்து முழக்க மிட்டு
ஒரு கோடி மக்கள் தங்கள்
உள்ளத்தினில் கோயில் கொண்டாய்
அன்பினில் அடக்கம் தன்னில்
அறிவினில் மேதையான
அறிஞராம் அண்ணா கண்ட
அற்புதத் தொண்டனே கேள்!
முடிதனை இழந்தாய் இன்று
முத்தமிழ் இரங்கி நோக்க
அலைகடற் கப்பால் உள்ளோர்
அதிர்ந்தனர் உன் தோல்வி கேட்டு
ஐயனே மக்கள் உன்னை
அதிரடியாய் அகற்றி விட்டு
அம்மைக்கு அரசு ஓச்ச
அளித்தனர் வாக்கை என்றால்
உண்மையில் உனது வீழ்ச்சி
உணர்த்திடும் உண்மை கேளாய்
குடை நிழல் இருந்து நீயும்
குஞ்சரம் ஊர்ந்த வேளை
நீதியை தூக்கி லிட்டு
நிம்மதி கண்டாய் என்றும்
இலஞ்சமும் ஊழல் தொட்டு
நிகரிலா கோடி செல்வம்
பெற்றதைக் குடும்பத்தார்க்கு
பிரித்து நீ தந்தா யென்றும்
செல்வத்தில் நின் குடும்பம்
சீரொடு திகழ வைத்தாயென்றும்
அண்டையில் ஈழம் தன்னில் மக்கள்
அழுதிடும் தமிழ்க் குரலைக் கூட
மெள்ள நீ கேட்டிடாது
மெதுவாகப் பேசினாய் என்று
மேடையில் முழக்க மிட்டார்
மெல்லவே மக்கள் கேட்டார்
போய்வா! தலைவா! என்று
பொன் முடி அகற்றி விட்டார்
சால்வையை மட்டுமல்ல
சரிவர மஞ்சள் கட்டி
போதுமினி அரசியல் என்று
புகன்றொரு பாட்டெழுதி விட்டு
கானகம் தன்னை நோக்கி
கையிலோர் பொல்லு மேந்தி
பொல்லூண்டி மண்மேல்
பல்லாண்டு நீடுழி வாழி!

-விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மத்திய அரசுக்கு எதிரான தமிழக மக்களின் தேர்தல் தீர்ப்பு

தமிழக சட்டசபைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா ஜெயராம் தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றியீட்டி ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. தேர்தலுக்குத் தேர்தல் மாறி மாறி அரச கட்டிலுக்குச் சூடேற்றி குடும்ப ஆட்சி நடத்திய கலைஞர் மு. கருணாநிதியை தமிழக மக்கள் தூக்கி வீசி விட்டனர்.

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் மாநிலத்தினை உப கண்டத்தின் ஏனைய முன்னணி மாநிலங்களின் வளர்ச்சிக்கு ஒப்பாக பொருளாதார மற்றும் அபிவிருத்தித் துறைகளில் உயர்த்துவதிலும் பின்னடைந்து செயற்பட்டதும் கருணாநிதியின் படுதோல்விக்குப் பிரதான காரணங்கள் என்று மேலெழுந்தவாரியாகக் கொள்ளலாம்.

சட்டசபைத் தேர்தலில் கருணாநிதியும் அவரது கட்சியும் மண் கவ்வியதற்கு ஈழத்தமிழர் விடயத்தில் அவர் பூண்ட இரட்டை வேடமே பிரதான காரணம் என்று சொல்லலாம்.

தமிழ் மாநிலத்தின் மிகப் பெரும் சக்தியாக விளங்கிய அவர், மத்தியில் ஆட்சி செய்யும் சோனியா காந்தியின் காங்கிரஸ் கட்சியின் ஓர் அங்கமாக விளங்கியவர். மனம் வைத்திருந்தால், இலங்கைத் தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற இன உணர்வு உள்ளவரெனில், மத்திய அரசிடம் இடித் துரைத்து ஈழத் தமிழ் மக்களின் இழப்புக்களைத் தடுக்கும் உந்து விசையாகச் செயலாற்றியிருக்க முடியும்.

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட வேளை, அதை நிறுத்துவதற்கு வழி செய்யுமாறு தமக்கிருந்த அரசியல் பலத்தையும், மத்திய அரசிடம் இருந்த செல்வாக்கையும் தக்கவாறு பயன் படுத்தாமல் ஒரு நாள் உண்ணாவிரத நாடகம் நடத்தி செப்படிவித்தை காட்டியவர் அவர்தான்.

நாடகங்களுக்கும், சினிமாப் படங்களுக்கும் கதை வசனம் எழுதிய பழக்கதோஷத்தில், உணர்ச்சிவசமான அடுக்குச்சொல் அறிக்கைகளை வெளியிட்டு தன்னைக் காத்து, மேற்படையாகத் தனது ஆட்சியைக் காப்பாற்றும், தமிழக மக்களின் அப்போதைய கொந்தளிப்பைத் தணிக்கும் தந்திரோபாயங்களைக் கையாண்டவர்.

அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வேடம் போட்டு, தமது கட்சியை - இல்லை இல்லை - குடும்ப ஆட்சியைத் தக்க வைக்க அவர் ஆற்றிய கயமைத் தனத்துக்கு கிடைத்த வெகுமதியே தேர்தல் தோல்வி. சாவு எப்போதும் வரலாம் என்ற மூப்பு நிலையில் இருக்கும் அவர், தமிழன், தமிழர் தலைவன் என்று உணர்வோடு செயற்பட்டிருந்தால், இந்தத் தோல்வியைத் தவிர்த்திருக்கக் கூடும். தமிழகத்தின் மூத்த அரசியல் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை படுகுழியில் வீழ்த்துவதிலிருந்து தடுத்திருக்கலாம்.

அவற்றின் ஒட்டு மொத்த விளைவே அவருக்கு வந்துள்ள படுதோல்வி. இந்திய மத்திய அரசு செய்த இமாலயத் தவறுக்குத் துணை நின்று, ஈழத்தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் செத்தொழியப் பார்த்துக் கொண்டிருந்தவரே தன்னை அகில உலகத் தமிழர்களின் தானைத் தலைவன் என்று சுயபட்டம் சூட்டிய மு.க.

இத்தகைய சூழமைவில், கருணாநிதிக்கு எதிரான தமிழக மக்களின் முடிவு தனக்கு எதிரான முடிவே என்று இந்திய மத்திய அரசு கொள்ள வேண்டும்; அதுவே உண்மையும் யதார்த்தமு மாகும்.

அப்பட்டமாகச் சொல்வதானால், இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக இந்திய மத்திய அரசு திரைமறைவில் நின்று செய்த கொடுமைகளுக்கு எதிராகத் தமிழகத்து மக்கள் வழங்கிய தீர்ப்பு இது. எனினும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து இலங்கை அரசுடன் பேசுவதற்குத் தயாராகிவரும் இந்திய மதிய அரசு, தமிழகத் தேர்தல் முடிவுகளை தனக்குத் தமிழக மக்கள் வழங்கிய ''செமத்தையான'' அடி என்று கருத்தில் கொள்ளும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதனை ஒரு பொருட்டாகக் கருதிக் கொள்ளாது. தான் வகுத்த வாய்ப்பாட்டின் பிரகாரமே செயற்படும் என்பது சர்வநிச்சயம்.

இதேவேளை, அமோக பெரும்பான்மையுடன் தமிழகத் தேர்தலில் வெற்றிகொண்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி ஜெயலலிதா இலங்கைத் தமிழர்களுக்கு பெரிய அளவில் உதவிக்கரம் நீட்டுவார் என்றும் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

தேர்தல் காலமானதால், அண்மையில் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையில், இலங்கை ஜனாதிபதியை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று ''போசக்கை''க்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், இலங்கைத் தமிழர் விடயத்தில் எப்போதும் அவர் ஆதரவற்ற நிலைப்பாட்டையே கடைப்பிடிப்பவர். இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது ''போர் ஒன்று நடைபெறும் வேளையில் மக்கள் கொல்லப்படுவது வழமையானதே'' என்றவர் அவர். இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு எந்த வேளையிலும் ஆதரவு தெரிவிக்காத தமிழக அரசியல் தலைவர் அவர்.

ஆகையால், தமிழகத் தேர்தல் முடிவு இலங்கைத் தமிழர்கள் தங்கள் அரசியல் இழப்புகளில் இருந்து மீள்வதற்கு ஒரு சிறிய அளவிலேனும் கை கொடுக்கும் என்று ஒரு சிறுதுளி தானும் நம்பிக்கை வைப்பதற்கான ஏதுநிலை இல்லை.

தற்காலிகமாகக் கடற்றொழிலில் முடக்கம்; இனிவரும் நாள்களில்

# இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறினால் என்ன நடவடிக்கை எடுப்பது?

## இது குறித்து ஆராய இன்று வவுனியாவில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 14

ஏப்ரல், மே மாதங்களில் வழமையாக கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து வரும் இந்திய மீனவர்கள், இனிவரும் நாள்களில் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தால் என்ன செய்வது? அவர்களைத் தடுப்பதற்கு எவ்வாறான வழிமுறையைக் கையாளலாம்?

இவை தொடர்பாக ஆராய்வதற்காக இன்று வவுனியாவில் கூடுகின்றனர் மீனவர் சங்கப்பிரதிநிதிகள்.

வவுனியாவில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தென்னிலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றுகின்றனர். கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைமையகமான நீர்கொழும்பிலுள்ள 'தேசிய மீனவர் ஒத்துழைப்பு நிலையத்தின் முக்கியஸ்தர்களும் இதில் கலந்துகொள்வர்.

ஏப்ரல் 15 ஆம் திகதி தொடக்கம் மே 30 ஆம் திகதி வரையான 45 நாள்களை கடலில் மீன் இனவிருத்திக்கான காலம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தக்காலப் பகுதியில் இந்திய மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை. இந்த நிலையில் தொழிலைத் தொடர்வதற்காக இனிவரும் நாள்களில் கடலுக்குச் செல்லத்தயாராகும் இந்திய மீனவர்கள் முன்னைய காலத்தைப் போன்று மீண்டும் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவார்கள் என்ற சந்தேகம் வடபகுதி மீனவர்களிடம் இருந்து வருகிறது.

அவ்வாறு அத்துமீறி செயற்படும் பட்சத்தில் வட பகுதி மீனவர்களின் தொழில் முற்றுமுழுதாக பாதிப்படையும் நிலை உருவாகும். அது மட்டுமின்றி எஞ்சியுள்ள கடல் வளங்களும் அள்ளிச்செல்லப்பட்டு விடும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இன்றைய கலந்துரையாடலில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு நிலையத் தலைவர் தேமான் குமார, அமைப்பாளர் அ. ஜேசுதாஸன், மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்தலைவர் ரி. தவரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (ஒ-4)

# குடிதண்ணீருக்கு பெரும்பாடுபடும் நெடுந்தீவுப் பிரதேச மக்கள்

யாழ்ப்பாணம், மே 14

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள மக்கள் குடிதண்ணீருக்கு பெரும் பாடுபடுகின்றனர்.

நெடுந்தீவு பிரதேச சபையும் - நெடுந்தீவுப் பிரதேச செயலகமும் இணைந்து குடிதண்ணீர் பிரச்சினையை இல்லாமல் செய்யத் தகுந்த நடவடிக்கையினை எடுக்கவேண்டும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் செயலாளர் சி. ரங்கராஜன் தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான சமூக மட்ட கிராமிய குடிதண்ணீர் விநியோகமும் சுகாதாரதிட்டமும் பற்றிய அறிமுகக் கூட்டத்தில் ரங்கராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

வட மாகாணப் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் சி. ரங்கராஜன் மேலும் தெரிவிக்கையில், இன்று நிலத்தடி நீர் பழுதடைகிறது, நிலத்தடி நீரோட்டம் மாறுபடுகின்றது. இதனால் நன்னீர் ஊற்றும் திசைமாறுகிறது.

இதற்கு முக்கிய காரணம் குடாநாட்டில் வீடுகள், கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்ற போது ஆழமான பகுதிக்கு அத்திவாரம் இடப்படுவதால் நீரோட்ட நிலைகள் முற்றாக மாறுபடுகிறன.

இதனை சம்பந்தப்பட்டவர்கள் ஆய்வு செய்து அறிக்கையிடவேண்டும் என்றார்.

இதில் வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி தெரிவிக்கையில் இன்றைய யுகம் மாறிவிட்டது. யாவும் இயந்திரமயமாகி விட்டன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் எமது மக்கள் கப்பியில் இழுத்து குடி தண்ணீரைப் பெற்றனர். குளிக்கவும் பயன்படுத்தினர் இது இன்று மின் மோட்டருக்குள் சென்று விட்டது.

உரல் இடித்து வேலை செய்தவர்கள் இதனையும் இயந்திரத்தில் பெறுகின்றனர்.

எனவே மனித உடல் சோம்பலாகிவிட்டது. இதனால் பல வியாதிகளும், நோய்களும் எம்மண்ணில் வியாபித்து விட்டதால் சம்பந்தப்பட்டவர்கள் விழிப்புணர்வு செய்து மீள் நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதி பிரதம செயலாளர் தி. இராசநாயகம் யாழ். கிளிநொச்சி திட்டப் பணிப்பாளர் தி. பாரதிதாசன், யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. மோகனீஸ்வரன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(எ-302)

# யாழ்ப்பாணத்தில் செவ்வாய், புதன் இந்தியக் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 14

''இந்தியக் கல்விக் கண்காட்சி'' யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ். பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பட்டதாரி மற்றும் முதுநிலைப்பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள், இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும், தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன.


விமானப் போக்குவரத்துத்துறை, கல்வி நிலையங்கள், வியாபாரம், பாடசாலைகள், தகவல் தொழில் நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள், தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள், சந்தைப்படுத்தல் என்பனவும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள், ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள், நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள், கடற்போக்கு வரத்துக் கல்வி நிலையங்கள், கல்வி ஆலோசகர்கள், உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள், செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள், மருத்துவ மற்றும் தாதியர் கல்வி நிலையங்கள், மூன்றாம் நிலை கல்வி நிலையங்கள், நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலைப் பாடசாலைகள் போன்றன இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. ஆர்வமுடைய அனைவரும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிடலாம்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையும், மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரையும் இந்தக் கண்காட்சி இடம்பெறும். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 மே 2011 சனிக்கிழமை

## மீண்டும் மருத்துவ சேவை...



20 வருடகாலத்தின் பின் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை அண்மையில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதில் நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. (ம-313)

# சமூகத்தில் உயர்ந்த மனிதர்களாக மாற்றுவலுவுள்ளோர் மாற்றப்பட வேண்டும்

### உதவத் தயார் என்கிறார் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர்

யாழ்ப்பாணம், மே 14

மாற்று வலுவுள்ளோரின் தேவைகளை நிறைவு செய்து சமூகத்தில் உயர்ந்த மனிதர்களாக அவர்களை உருவாக்க வேண்டும்.

அதற்கான உதவிகளைத் தேசிய சேமிப்பு வங்கி வழங்கத் தயாராக உள்ளது என்று வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். விழிப் புலனற்றோர் கழகத்துக்கான உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கருத்துக் கூறிய போதே வங்கி முகாமையாளர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

வலுவிழந்தோர் என்று எவரும் இல்லை. ஒவ்வொருவரிடத்திலும் ஏதோ ஒரு திறமை இருக்கும். அதை வெளிக் கொணர்ந்து அவர்களும் சமுகத்தின் உன்னத நிலையில் உள்ளவர்கள் என்பதை எடுத்துகாட்ட வேண்டும்.

யாழ்.விழிப்புணர்வுக் கழகம் தமது பயன்பாட்டுக்கென சில தேவைகள் குறித்து எம்மிடம் உதவக் கேட்டிருந்தது. அவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லாத போதும் முக்கியமான தேவைகளை உடன்வழங்க வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு இன்று சில அத்தியாவசிய பொருள்களை வழங்குகின்றோம்.

வசதியுள்ள மக்களும் இவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். எதிர்காலத்திலும் அவர்களின் முக்கிய தேவைகளை முடிந்தவரை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் - என்றார். (ம-7)

# 2010 வாக்காளர் இடாப்பின் பிரகாரமே உள்ளூராட்சித் தேர்தல்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளூராட் சித் தேர்தல் 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் நடைபெறுமென்று யாழ். தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆளுங் கட்சி செய்து கொண்ட வேட்பு மனுத் தாக்கலை ஏற்றுக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வழங்கியுள்ள தீர்ப்பையடுத்து யாழ். தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுத் தாக்கலை ஏற்றுக்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ள நிலையிலும் தேர்தல் நடைபெறும் திகதி தேர்தல் திணைக்களத்தால் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் தேர்தலுக்குரிய ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் பணிகள் ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் 31 ஆம் திகதி வெளியிடப்படும் 2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பின் பிரகாரம் தேர்தல் நடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# பற்றிமா ஆலயப் பெருவிழா



பண்டத்தரிப்பு, மே 14

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்குத் திருப்பலி பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெற்றது. தொடர்ந்து காலை 6.30 மணிக்கு திருப்பலி இடம்பெற்றது.

இந்த வருடத் திருவிழாவில் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ம-130)

# 25 ஆவது ஆண்டு பூர்த்தி விழா

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் இறைபணியின் 25 ஆவது ஆண்டு பூர்த்தி விழா இன்று அச்சுவேலி லங்கா மாதா மடத்தில் நடைபெறவுள்ளது.

அச்சுவேலி லங்கா மாதா மடத்தின் தலைவி அருட்சகோதரி மேரி தெரசில்டா தலைமையில் நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்துகொள்வார். (ம-11)

# யாழ்.வணிகர் கழகத்தினரின் வாழ்வாதார உதவி பெறுவோர்

தென்மராட்சி, மே 14

யாழ்.வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பத்துப் பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் கலந்து கொண்டு உதவிப் பொருள்களைக் கையளிக்கவுள்ளார்.

பின்வரும் பயனாளிகள் உரிய நேரத்துக்கு முன்னர் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விவரம் வருமாறு:

ஜெ.சாந்தி (கைதடி மேற்கு), ஜெ.குணமலர் (மீசாலை வடக்கு), க.அன்னபாக்கியம் (விடத்தற்பளை), ச.சர்மிளா (வரணி வடக்கு), கி.வனஜா (கோயிற்குடியிருப்பு), சு.யோகேஸ்வரி (பலாலி வடக்கு), இ.ஜெகதீஸ்வரி (தவசிகுளம்), சுகந்தினி (கிராம்புவில்), இ.குமுதினி (சரசாலை வடக்கு), பே.விஜய கௌரி (மட்டுவில் தெற்கு). (எ-207)

ILE Supply Chain Centre
#259, Main Street, Jaffna.
(In front of Thirumaraikkalamandram)

Canon products — Under Warranty
MX 328 (Scan, Copy, Print, Fax) — MP 276 (Scan, Copy, Print) — Toner / Cartridges — Scanner LIDE 110

DELL products — Under Warranty
Laser Mono 1130SA — V313SA (Scan, Copy, Print) — LCD Monitor 18.5"

imation products — Under Warranty
DVD-R, DVD-RW, DVD-DL, CD-R & CD-RW, MINI CD & DVD — Multi Flash Card Reader
Wired Keyboard, Wireless Keyboard — Wired Mouse, Wireless Mouse
Nano Flash Drive 2GB, 4GB, 8GB & 16GB — Speakers
External Hard Disk
Web Camera — DVD External Drive

Sonicgear & Powerlogic Products
Laptop Cooling Pad — Headset & iPlug — ENZO 400, ENZO 4000

acer products — Agency Warranty
Aspire 5742 — Veriton - M275 — Aspire AM 1830

NEW ARRIVALS

At Reduced Price
Further Information Call - 077 6349054

Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=
21-05-2011 முன் பதிவுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/=

Batch I - 14.05.2011 9Am or 3pm Batch II - 15.05.2011 9Am or 3pm
Batch III - 18.05.2011 9Am or 3pm Batch IV - 20.05.2011 9Am or 3pm

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
Lecturer by : Asok 17,18 may 2011

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியச் சட்டம் நிறைவேறினால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 14

ஊழியர்களின் உரிமைகளைப் பறிக்கும் உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டத்தை அரசு நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்ற முயன்றால், தனியார்துறை ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கிப் போராடுவார்கள்.

இவ்வாறு அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் அரசுக்கு எச் சரிக்கை விடுத்துள்ளது.

அது மட்டுமின்றி, பிரஸ்தாப சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அன்றைய நாளை கறுப்புத் தினமாக அறிவித்து, அந்தச் சட்டமூலத்தை மீளப் பெற்றுக்கொள்ளும்வரை நாடாளுமன்றைச் சூழ்ந்து போராட்டம் நடத்தப்படும் என்றும் கடும் தொனியில் பிரஸ்தாப சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நேற்றுப் பகல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அச்சங்கம் மேற்கண்ட வாறு எச்சரிக்கை விடுத் துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான வசந்த சமரசிங்க கூறியவை வருமாறு:

தனியாருக்கான ஓய்வூதியத்தை வழங்குவதாகக் கூறி அரசால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். இந்த நாட்டில் உழைக்கும் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்க முற்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள தனியார் ஓய்வூதியச் சட்டமூலத்தை வாபஸ் வாங்குமாறு நாம் அரசுக்கு கூறுகின்றோம்.

தனியார் ஊழியர்கள் கோரும் உண்மையான ஓய்வூதியத்தையே வழங்கவேண்டும். அதற்குப் பதிலாக அவர்களின் ஊழிய சேமலாப நிதியத்திலிருந்து பணத்தைக் கொள்ளையிடும் ஓய்வூதியம் தேவையில்லை. எனவே ஓய்வூதியச் சட்ட மூலத்தைத் தோற்கடிக்க இந்த நாட்டிலுள்ள தனியார் ஊழியர்கள் அனைவரும் தயாராக உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசு முயன்றால் அன்றைய தினத்தில் நாட்டிலுள்ள தனியார் துறையினர் வீதியில் இறங்கிப் போராடுவார்கள். அந்த நாளை கறுப்பு நாளாக அறிவித்து அந்தச் சட்டமுலத்தை மீளப் பெற்றுக்கொள்ளும்வரை நாடாளுமன்றத்தைச் சூழ்ந்து போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்பகை் கூறிக்கொள்கின்றோம்.

இந்தச் சட்டமுலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் அதனை நிறைவேற்ற நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அவ்வாறு நிறைவேற்றப்பட்டாலும் தொழில் செய்யும் இடத்தில் இதற்கான போராட்டத்தை முன்னெடுப்போம் - என்றார். (த-சி)

# வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

மந்திகை, மே 14

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் மிகமோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்ற வீதிகள் வெகு விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை போன்ற பிரதேசங்களில் சேதமடைந்து காணப்படுகின்ற 28 வீதிகளை ''என்றிப்'' திட்டத்தின் ஊடாக வெகுவிரைவில் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதாகப் பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளர் சோ.ஜெயவசீகரன் தெரிவித்துள்ளார். (ம-237)

## நினைவுகள்...



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிஷூ கோமஸ், விற்பனை முகவர்களில் ஒருவரான எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் உரிமையாளர் மு.குணரட்ணத்துக்கு நினைவுப் பரிசில் வழங்குகிறார். (ம-7)

# கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் நாளை போராட்டம்

கொழும்பு, மே 14

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து நாளை கொட்டகலை தேசிய பால் சபைக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம்ஒன்றைநடத்தவுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு ம.ம.முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன் தங்களுடன் பேச்சு நடத்துமாறு கோரி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் விடுத்த வேண்டுகோளை பேச்சில் ஈடுபட்டு வரும் தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.

தொழிற்சங்கங்களுக்கிடையில் இவ்வாறான முறுகல் நிலை ஏற்பட்டுள்ளமையானது தோட்டத் தொழிலாளர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் ஒன்றாகக் குரல் கொடுப்போம் எனக் கூறிய அவர்கள் இப்பொழுது இவ்வாறு நடந்து கொள்வது நியாயமற்றது எனத் தோட்டத் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அது மட்டுமின்றி, தங்களின் பிரச்சினையை முன்வைத்து பேச்சுகளில் ஈடுபடும் தொழிற் சங்கங்கள் அற்பசொற்ப சலுகைகளுக்காக சோரம் போகக் கூடாது என்றும் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (த-சி)

# பாடநூல்களை அச்சிடும் வாய்ப்பு இந்த வருடமும் தனியார்துறைக்கு

கொழும்பு, மே 14

கடந்த ஆண்டுகளைப் போன்றே இம்முறையும் பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதற்குத் தனியார் துறையினருக்கும் வாய்ப்பு வழங்கப்படுமெனக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களம் மற்றும் அரச அதிகாரம் பெற்ற அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் அச்சிடக்கூடிய தொகைகள் அவற்றிடம் வழங்கப்படும். ஏனைய தொகைகள் தனியார் துறைகள் மூலம் அச்சிட்டுக் கொள்ளப்படும்.

அரச அச்சகத் திணைக்களம் மற்றும் அதிகாரம்பெற்ற அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு ஆண்டொன்றில் தேவைப்படும் முழுமையான பாடசாலை நூல்களுக்கான தொகைகளை அச்சிடும் வசதி இல்லை. இதன் காரணமாகப் பல ஆண்டுகளாகவே பாடசாலை நூல்களை அச்சிடும் வாய்ப்புத் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேள்வி கோரல்களின் பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நூலகச் சபையின் அனுமதியை அடுத்துத் தனியார் துறை அச்சங்களுக்குப் பாடசாலை நூல்களை அச்சிடும் உரிமை வழங்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவது தொடர்பாக ஆண்டொன்றில் மூன்று கோடி வரையான பாடசாலை நூல்கள் தேவைப்படுகின்றன என்று மேலும் கூறப்பட்டது. (ம-22)

# பிரிவுத் தலைவர்களின் பதவி விலகல் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றது

## பல்கலை மானியங்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே 14

பல்கலைக்கழகங்களின் பிரிவுத் தலைவர்கள் அப்பதவிகளிலிருந்து நீங்கிக்கொள்வதாக பீடாதிபதிகளுக்குக் கடிதங்கள் மூலம் அறிவித்திருந்தாலும் அவர்களின் ராஜினாமாக்கள் பல்கலைக்கழக நிர்வாக சபையினால் ஏற்கப்படவில்லை. இது சட்டப்படி செல்லுபடியற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதற்கமைய அந்த விரிவுரையாளர்கள் தமது பதவிகளின் கடமைப்பொறுப்புப் பளைத் தொடர வேண்டியுள்ளது.

அவ்விதம் பொறுப்புக்களை உதாசீனம் செய்வது சட்டவிரோதச் செயல் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக நிர்வாக சபையே பிரிவுத் தலைவர்களை நியமிக்கிறது.

எனவே அவர்களது ராஜினாமாக்களும்கூட மேற்படி சபையினால் ஏற்கப்படும் வரையில் தமது பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் கடப்பாடு அவர்களுக்கு உள்ளது.

பிரிவுத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதானால் மூன்று மாதங்களுக்கு முன்னரே பீடாதிபதி மற்றும் உபவேந்தர் ஊடாக அது சம்பந்தமாக நிர்வாக சபைக்கு அறிவிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# இளவயதுக் குற்றவாளிகளுக்கு உயர் கல்வி வழங்க ஏற்பாடு

கொழும்பு, மே 14

இளவயதுக் குற்றவாளிகள் பராமரிப்பு நிலையங்களிலுள்ள 500 இளைஞர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்க கல்வியமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் கீழுள்ள அம்பேபுஸ்ஸ, தல்தென மற்றும் பல்லன்சேனை ஆகிய மையங்களிலுள்ள 16முதல் 24 வயது வரையான இளவயதுக் குற்றவாளிகளுக்குத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

முறையான கல்வியறிவைப் பெற்றிராத இவர்களுக்குப் பாடசாலைக் கல்வித்திட்டப் பரிந்துரைகளுக்கு அமைய உயர்தர வகுப்புவரையிலும் கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க இதனைக் கூறினார்.

சிறைச்சாலைகளிலுள்ளோர் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டம் அனைத்து அமைச்சுக்களின் ஒருங்கிணைவுடன் மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பான சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் கல்வியமைச்சுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் [illegible] மேலும் கூறப்பட்டது. (ம-22)

# நெடுந்தீவு மாணவர் நாடாளுமன்றத்தை பார்வையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 14

நெடுந்தீவின் பிரதான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நாடாளுமன்றக் கூட்டத்திற்குச் சென்று சபை நடவடிக்கைகளைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

முதலில் நெடுந்தீவு மகா வித்தியாலயம், றோ.க. பெண்கள் வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பெறவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மேற்கொண்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பிரதேச அபிவிருத்தி; ரூ4½ கோடிக்கு வேலைத்திட்டம்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அங்கீகாரம்

யாழ்ப்பாணம், மே 14

நல்லூர்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 4 கோடி 68 லட்சத்து 39 ஆயிரத்து 236 ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நல்லூர் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

யாழ்.மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.ஸ்ரீதரன் உட்படத் திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கருத்திட்ட விவரங்களைச் சமர்ப்பித்தார்.

என்றிப் நிதியுதவியில் ஜே/90 கிராம சேவர் பிரிவில் 22 லட்சத்து 37 ஆயிரம் ரூபா செலவிலும் ஜே/90 ஆரம்பசுகாார நிலையம் 30 லட்சம் ரூபா செலவிலும் ஜே/90 இல் 18 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் மண் அணை அகற்றல், 24 லட்சத்து 73 ஆயிரம் ரூபா செலவில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக் கிளை உப தபாலகம் என்பவற்றையும் கைத்தொழில் அமைச்சின் 13 லட்சத்து 69 ஆயி ரம் ரூபா நிதியில் கைத்தறி நெசவு நிலையம் அமைத்தல் போன்றனவும் இடம்பெறவுள்ளன. ஜே/107 கிராம அலுவலர் பிரிவிலும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 5 லட்சம் ரூபா நிதி உதவியுடன் ஜே/90 பிரிவில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து உரியவர்களிடம் கைய ளிக்கும் செயற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலம் ஈடுபடவுள்ளது.

நெல்சிப் நிதியுவியில் 57 லட்சத்து 70 ஆயிரத்து 205 ரூபா அஞ்சுதன் குளம் (பூநாரி மடத்தடி வாய்க்கால் ) பாலம் அமைத்தல், ஜே/99 அணைச்சுவர் கட்டல் போன்றன இடம்பெறவுள்ளன. நல்லூர் துர்க்காலேன் கோயில் வீதியிருந்து நல்லூர் குடியிருப்புக்கள் வரையான வீதி புனரமைப்பை ரூபா 68 லட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவிலும் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை 42 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவிலும் செட்டியார் தோட்டம் வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து செம்மணி வீதிவரையான வீதிப் புனரமைப்பும் மேற்கொள்ளப்படவுள்ளது.

வலயக் கல்வி அலுவலகம் என்றிப் உதவியுடன் ரூபா 90 லட்சம் செலவில் அரியாலை முனங்கு பாடசாலை , ரூபா 57 லட்சம் செலவில் ஜே/126 கொக்குவில் நாமகள் வித்தியாலயம் இரண்டுமாடிக் கட்டடம், நிக்கொட் நிதி உதவியுடன் ஜே/92 கனகரத்தினம் மகாவித்தியாலய வகுப்பறை விடுதி புனரமைப்புக்களையும், நல்லூர் பிரதேச செயலகம் கைத்தொழில் அமைச்சின் ரூபா 13 லட்சத்து 69 ஆயிரம் செலவில் ஜே/113 கைத்தறி நெசவு நிலையத்தையும் புனரமைக்கவுள்ளது.

ஜெய்கா நிறுவனத்தின் உதவியுடன் விவசாயத் திணைக்களம் ஜே/114 விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தையும் புனரமைக்க நவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (எ-7)

# பஸ் சேவை சீரின்மையால் நெருக்கடி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணத்திலிருந்து சண்டிலிப்பாய் ஆலங்குழாய் ஊடாகத் தெல்லிப்பழைக்குப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 749 இலக்க பஸ் நேரநடைமுறை ஒழுங்கீனத்தால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த பஸ் சேவையின் நேர ஒழுங்கு சீரின்மையால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும்சேவை

சண்டிலிப்பாய், மே 14

மக்கள்மத்தியில் நிலவும் குறைபாடுகளையும் தேவைகளையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்து அவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் மானிப்பாய் பொலிஸார் நடமாடும் சேவையை நடத்த முன்வந்துள்ளனர்.

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரினால் நடத்தப்படும் இந்த நடமாடும் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவையின் போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் ஆகியன பெற்றுக்கொடுக்கப்படுவதால் இவற்றைப் பெற விரும்புபவர்கள் பெற்றோர் அல்லது சகோதர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் குடும்ப அட்டையையும் பாடசாலை விடுகைப் பத்திரத்தையும் சமர்ப்பிக்கவேண்டும்.

மேலும்தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அதற்குரிய ஆவணங்களும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதால் அதற்குரிய புகைப்படத்தைச் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறு குற்றம் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணை செய்து அதற்குரிய தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுகிறது. (எ-115)

# வலயப் பணிப்பாளருக்கு இடமாற்றம்

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களின் பணிப்பாளர்களின் இடமாற்றம் குறித்த ஏற்பாடுகளை வட.மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொள்கிறது. இடமாற்றம் பெறும் கல்விப் பணிப்பாளர்கள் ஜூன் முதல் வாரத்தில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளனர் என்று கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் 60 வயது பூர்த்தியடைந்த நிலையில் ஜூன் 2 ஆம் திகதியுடன் சேவையில் இருந்து இளைப்பாறுகின்றார். அந்தப் பதவி வெற்றிடத்தை நிரப்புவதை மையமாக வைத்தே இடமாற்றங்கள் செய்யப்படவுள்ளன. முகாமைத்துவ உதவியாளர் களுக்கு ஒரே இடத்தில் தொடர்ந்து 4 வருடங்கள பணிபுரிந்தால் இடமாற்றம் வழங்கப்படலாம். அதே போன்று 7 வருடங்கள் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமை புரிந்த ஆசிரியர்களும் இடமாற்றத்துக்கு உட்படலாம். ஆனால் கல்வி வலயங்களில் அதிகாரி நிலையில் கடமையாற்றுபவர்கள் பலர் ஒரே இடத்தில் தொடர்ந்து பல வருடங்கள் கடமை புரிவதால் அவர்களும் மே மாதத்தில் பொதுவான இடமாற்றத்துக்கு உள்ளாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# இலங்கை வங்கியின் 'எயிற்றின் பிளஸ்' வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கை வங்கியின் சேமிப்புத் திட்டங்களில் ஒன்றான 'எயிற்றின் பிளஸ்' சுப்பர் ரீம் திட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.நகர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் சுமணசிறி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது வெற்றியீட்டிய ஒன்பது பேருக்குப் பரிசில் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்க சிங்கி, வங்கியின் அதிமேற்தர கிளையின் பிரதான முகாமையாளர் எ.மகாதேவா, வவுனியா கிளை பிரதான முகாமையாளர் கே.விக்னேஸ்வரன், மன்னார் கிளை பிரதான முகாமையார் எஸ். நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வங்கியின் சேமிப்புத் திட்டங்கள் குறித்தும் அதன் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்தும் விளக்கினர்.

அத்துடன், வெற்றியாளர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிக் கிளைகளின் முகாமையார்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-14)

## ஊக்குவிப்பு...




இலங்கை வங்கியின் சேமிப்புத் திட்டங்களில் ஒன்றான 'எயிற்றின் பிளஸ்' சுப்பர் ரீம் திட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கல் நிகழ்வு யாழ்.நகர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வங்கியில் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் மாணிக்க சிங்கி உரையாற்றுகிறார். ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (14)

# யாழ்.மாவட்டத்தில் இதுவரை 80 ஆயிரத்து 451 பேர் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம், மே 14

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இதுவரைக்கும் யாழ். மாவட்டத்தில் 80 ஆயிரத்து 451 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நெடுந்தீவுப் பிரதேச உதவி. அ.அதிபர் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேரும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 685 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 384 பேரும், ஊர்காவற்றுறைப் உதவி. அ.அதிபர் பிரிவில் 616 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 972 பேரும், காரைநகர் உதவி. அ.அதிபர் பிரிவில் 735 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 158 பேரும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 741 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 169 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 864 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 458 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 514 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 335 பேரும், சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவில் ஆயிரத்து 229 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 652 பேரும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 277 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 687 பேரும், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 279 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 544 பேரும், கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 473 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 131 பேரும், சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 440 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 82 பேரும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 327 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 533 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 284 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 230 பேரும், மருதங்கேணிப் உதவி. அ.அதிபர் பிரிவில் 2 ஆயிரத்து 521 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 669 பேரும் என 27 ஆயிரத்து 160 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 451 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# அங்கவீனர் கொடுப்பனவு

தென்மராட்சி, மே 14

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாளஅட்டை,குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தையா தர்மலிங்கம் (கைதடி வடக்கு), கணபதிப் பிள்ளை இன்பராஜ்(மீசாலை வடக்கு), செல்லன் சபாநாயகம் (சரசாலை வடக்கு). (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய மாவட்டங்களைப் போன்று யாழ்ப்பாணத்துக்கும் அரச நிதி கிடைக்கிறதா?

## அரச அதிபரிடம் வினவினார் ஈராக் தூதுவர்

யாழ்ப்பாணம், மே 14

ஏனைய மாவட்டங்களைப் போன்று யாழ். மாவட்டத்துக்கும் அரசின் நிதிப் பங்கீடு பாரபட்சமின்றிக் கிடைக்கின்றதா? என்று நேற்று முன்தினம் யாழ். வந்த ஈராக் தூதுவர் காட்டன் ராஹா கிளவ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் வினவினார்.

யாழ். செயலகத்துக்கு நேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்த ஈராக் தூதுவர் சுமார் 2 மணிநேரம் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து அரச அதிபருடன் கலந்துரையாடினார்.

யாழ். மாவட்டத்தின் தேவைக்கும் அபிவிருத்திக்கும் என அரசால் ஒதுக்கப்படும் நிதி ஏனைய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுவது போல பாரபட்சமின்றிக் கிடைக்கின்றதா என்பதையும் அவர் கேட்டறிந்தார்.



இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தின் நிர்வாகப் படிமுறைக் கட்டமைப்புகள் மீளக் குடியமர்ந்த மற்றும் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கும் மனிதாபிமான தேவைகளுக்கும் உதவும் நாடுகளின் திட்டங்களின் தற்போதைய நிலைமை, யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. முகவர் நிறுவனங்களின் பணிகள் மற்றும் நிறுவனங்களின் விவரம், மக்களின் பாதுகாப்பு விடயங்கள் என்பன குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் குவைத் நாட்டு அரசால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் உதவித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் மக்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்திசெய்ய மேலும் 37 ஆயி ரம் வீடுகள் தேவையாக உள்ளன என்பது குறித்து ஈராக் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. - என்றார். (த-14-4)

## விக்கிரகம் திருட்டுப்போனது

கொழும்புத்துறை, மே 14

கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயத்தில் வைத்து வழிபட்டு வந்த சுமார் 5லட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன்னாலான அம்மன் விக்கிரகம் கடந்த புதன் கிழமை திருட்டுப் போயுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதி ஆலயங்களில் கடந்த இருவாரங்களில் நடைபெற்ற 3 ஆவது திருட்டு இதுவாகும்.

கடந்த 15 வருடங்களாகப் பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதிக்குள் அமைந்திருந்த ஆலய விக்கிரகம் பல ஷெல்வீச்சுக்கள் இழப்புக்களின் மத்தியிலும் சேதமடையாதிருந்தது. ஆயினும், மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் திருட்டுப் போயுள்ளமை மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது. இந்தத் திருட்டுத் தொடர்பாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-135)

## குரும்பசிட்டி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ள அனுமதி

யாழ்ப்பாணம்,மே 14

தெல்லிப்பழை, குரும்பசிட்டியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கு யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

குரும்பசிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சி. நடராசா தலைமையில் சென்ற குழுவினர் அண்மையில் கட்டளைத் தளபதியின் பலாலி அலுவலகத்தில் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்தனர். அதையடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த 20ஆண்டுகளின் பின்னர் தேர்த்திருவிழாவை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வைகாசி விசாக நாளன்று காலை 9.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும் என்றும் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-313)

## உதவியளிப்பு...



யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளை யாழ்.விழிப்புலனற்றோர் கழகத்தின் பாவனைக்கென சமையலறைக்கான பொருள்களை வழங்கியுள்ளது. நேற்று வங்கி அலுவலகத்தில் வைத்து வங்கி நலன்புரி சங்கத்தலைவர் திருமதி சித்திரா தயானந்தன், பொது முகாமையாளர் வீ.அருளானந்தம் ஆகியோர் உபகரணங்களைக் கழகத்தின் தலைவர் ஏ.மகேந்திரனிடம் கையளிக்கின்றனர். (ம-7)

## தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளருக்குக் கணினிகள்

யாழ்ப்பாணம்,மே14

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர்களின் பாவனைக்கு எனக் கணினிகளைக் கையளித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற அரச கரும மொழிகள் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வின்போதே அமைச்சர் கணினிகளைக் கையளித்தார்.

இந்த நிகழ்வின்போது யாழ். மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் செல்வி கெ.ஜனனி, முல்லைத்தீவு மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் எஸ்.பிரதீஸ் ஆகியோரிடமே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கணினிகளைக் கையளித்தார். (ம-14-9)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரமதானம்

யாழ்ப்பாணம், மே 14

சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவினரால் மல்லாகத்தில் உள்ள சங்க அலுவலக வளாகத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.சங்க உறுப்பினர்களும் தொண்டர்களும் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர் என்று சங்கப் பிரதிநிதி சி.நாகேஸ்வரன் தெரிவித்தார். (த-207)

# வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்களின் வலைகளை அறுத்துச் சென்ற கப்பல்கள்

## பல நூற்றுக் கணக்கான வலைகள் சேதம்

யாழ்ப்பாணம், மே 14

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் எண்ணெய் அகழ்வு ஆய்வுக் கப்பலும், ஏனைய கப்பல்களும் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் பல நூற்றுக்கணக்கான லட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளைக் கடந்த புதன் கிழமை அறுத்துச் சேதமாக்கியுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோரப் பொறுப்பாளர் எஸ்.தெய்வேந்திரம், ஈ.பி.டி.பியின் வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரிடம் நட்டஈடு பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் கடற்பிரதேசத்தில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபடும் மூன்று பெரிய கோபுரங்களுடன் கூடிய பெரிய கப்பல் ஒன்றை ஏனைய இரு கப்பல்கள் மன்னாரில் இருந்து திருகோணமலைக்கு இழுத்துச் கொண்டு செல்லும் போதே வலைகளுக்கு இந்தப் பெரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கப்பல்கள் வருகையால் தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை,பொலி கண்டி ஆகிய வடமராட்சிப் பிரதேசக் கடலில் மீன்பிடிப்பதற்காக வலைகளைக் கடலுக்குள் வீசிவிட்டு படகுகளில் காத்திருந்த மீனவர்கள் அனைவரினதும் வலைகள் அறுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இதுபோன்ற கப்பல்கள் கரையை அண்டிய பகுதிகளில் வரும் போது மீனவர் சங்கங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் குறித்த கப்பல்கள் வரும் வேளையில் சேதங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாக தொழிலுக்கு செல்லாதிருப்பது வழக்கமாகும்.

இந்தப் பெரிய கப்பல்களின் வருகை குறித்து உரிய தகவல்கள் தெரிவிக்காமையால் மீனவர்கள் இந்த இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்ததாகவும் இது போன்ற பெரிய சேதங்கள் ஏற் படா வண்ணம் உரிய தரப்பினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மீனவர்கள் வேண்டி நிற்கின்றனர். (எ-226-190-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் ஓய்ந்த போதும் கூட பூநகரி ம.விக்கு மீட்சி இல்லை




பூநகரி, மே 14

பூநகரி பிரதேசத்தின் அபிவிருத்தி எவ்வாறு இருக்கின்றது என்பதற்கு பூநகரி மகா வித்தியாலயம் சாட்சியமாகத் திகழ்கின்றது. நிழற் பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கி என்பவற்றைப் பாடசாலைக்குக் கையளித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வு பூநகரி பிரதேசத்தின் முதன்மைப் பாடசாலையான பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. பாடசாலை முதல்வர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி உதவிக்கான அனுசரணை வழங்கிய லண்டன் கற்பக விநாயகர் ஆலய உரிமையாளரும் அகிலன் அறக்கட்டளை நிதியத்தின் நிர்வாகியுமான கோபாலகிருஷ்ணன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன், அந்தப் பகுதி கிராம அலுவலர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் சுமார் 3 லட்சம் பெறுமதியான நிழற் பிரதியாக்கல் இயந்திரம் மின்பிறப்பாக்கி என்பவை கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இப்பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு மட்டுமன்றி தமிழர்களின் தொன்மையோடும் வரலாற்றோடும் இணைந்திருக்கின்ற பிரதேசமாகும். நீண்ட வரலாற்றையும் வரலாற்றின் பெருமைகளையும் இது கொண்டிருக்கின்ற போதும் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது தொடர்ச்சியாகப் பின் தங்கிய நிலையில் இருந்து வருவது வேதனை அளிக்கின்றது. போக்குவரத்துப் பாதை அமைப்பு, கல்விக்கான வளப் பகிர்வு என்பவற்றில் பெரும் இடைவெளிகளை இப்பிரதேசம் கொண்டிருக்கின்றது என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். யுத்தம் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் இந்தப் பாடசாலையை வந்து பார்ப்பவர்கள் இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தியை அளவீடு செய்ய முடியும்.

இத்தகைய நிலைமை தொடர்பில் பல தடவைகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பேசியுள்ளோம். இந்தப் பிரதேச தேவைகள் குறித்து புலம் பெயர் சமூகத்துக்கும் வெளிப்படுத்தியுள்ளோம். குறிப்பாக பிரதேச அரச வைத்தியசாலையிலும் "பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் முகாமிட்டுள்ள படையினரை வெளியேற்றி அவற்றை மக்களிடமும் மாணவர்களிடமும் கையளியுங்கள் என்ற மனிதாபிமான வேண்டுகோள்களைக் கூட அரசு புறம் தள்ளியே வருகின்றது.

இந்தப் பிரதேசத்திலேயே நல்ல தண்ணீர் கிணறு உள்ள ஒரு பாடசாலையில் படையினர் முகாமிட்டு இருப்பது நீதியானது அல்ல. இது தொடர்பில் தொடர்ந்தும் அரசுடன் பேசி பாடசாலையையும் வைத்திய சாலையையும் மக்களிடம் கையளிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே ஏராளமான சவால்களை இந்தப் பிரதேசம் எதிர்கொள்கின்றபோதும் இந்த மக்களிடம் எஞ்சியுள்ள ஒரேயொரு நம்பிக்கையும் சொத்தும் கல்வியாகவே விளங்குகின்றது.

இதனை நிறைவு செய்வதற்கான வலுவை எமது சமூகம் பெற வேண்டும். அத்தகைய முயற்சிகளில் ஒன்றாகவே இந்த உதவி புலம் பெயர் தேச உறவுகளிடம் இருந்து உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

இனிவரும் காலங்களில் அறிவினால் எமது சமூகத்தையும் அரசியலையும் வழிப்படுத்தக்கூடிய கல்வியை பெற்றுக் கொள்வதன் ஊடாகவே இந்தப் பிரதேச அபிவிருத்தி மட்டுமன்றி எமது இனத்தின் பலமும் வெளிப்படுத்தப்படும் என்றார் சிறீதரன் எம்.பி. (க)

## அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் இடமாற்றம்; மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு

அக்கராயன், மே 14

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள உயிலங்குளம் பாடசாலை ஆசிரியர்கள் இல்லாத நிலையில் பெரும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 18 மாணவர்களுடன் இயங்கி வரும் இந்தப் பாடசாலையில் மூன்று ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர். தற்போது இந்த மூவருக்கும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு அவர்கள் சென்று விட்டனர்.

கடந்த 21 ஆண்டுகளாக இந்தப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இவருக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படாமையால் இவர் தனது பொறுப்புக்களை ஒப்படைக்க முடியாத நிலையிலுள்ளார்.

1958 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் பின்தங்கிய பகுதியாகிய உயிலங்குளத்தில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அதிபரும் ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுள்ள நிலையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-410)


### முதல் மாத நினைவஞ்சலி

மண்ணகம் 1941 . 08 . 25



விண்ணகம் 2011 . 04 . 14

**அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம்**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வ.பி.போ.ச.)

"வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு" என்ற
வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து
வையகத்தில் உதாரணமாய்த் திகழ்ந்தீர்!
மண்ணும் விண்ணும் உள்ளவரை
எண்ணுவோம் உங்கள் சேவைகளை!

கைதடி. நவபுரம் அன்பர்கள்.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24.10.1942
மறைவு: 05.05.2009
திதி: 14.05.2011
துவாதசி

**அமரர் சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் (சொர்ணம்)**

அன்பு,பண்பு, அறிவு, ஆற்றல்
எல்லாவற்றையும் எமக்களித்து
மீளாத் துயரில் எங்களை ஆழ்த்தி
எங்கு சென்றீர்கள் அப்பா
ஈராண்டு சென்றாலும் எங்கள்
இதயங்கள் வலிக்கிறது அப்பா

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வெல்லம்பத்தை,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(48,19,22)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 21.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

(4143)

### நீங்கா நினைவுகளுடன் பதின்நான்கு ஆண்டுகள்



**திருமதி புவனேஸ்வரி அரியதுரை**

தோற்றம் 07★12★1926
மறைவு 14★05★1997

தாய்மைக்குப் பாத்திரமாகி
தூய்மைக்கு இலக்கணம் வகுத்து
வாய்மைக்கு வரைவிலக்கணம்
தந்து மறுமைக்கு சென்றதேனோ?

என்றும் நினைவுகளுடன்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேலப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நவரத்தினராசா செந்தில்ராசா (செந்தில்)**

(தனியார் பேருந்து சாரதி, மல்லாவி)
திதி: துவாதசி

தோற்றம் 08★04★1982
மறைவு 06★05★2009

கண்முன்னே மகனாகி வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
காலனெனும் அரக்கனவன் கண்ணே உனை அழைத்தாலும்
உன் நினைவிருக்கும்

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

### வேலைக்கு ஆள் தேவை

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
1.லிகிதர் [பணம் கையாளுபவர்]
2.எரிபொருள் நிரப்புநர் [பம்பர்]
தொடர்புகள் கடிதம் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்,
கைதடி
(39-21-25)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

ஒருகைப்பாவனையில் உள்ள பொக்சர் டபிள் சீற் (VP XXXX) மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
சுந்தரம் ஸ்ரோர்ஸ்,
சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
(39-21-25)

### கார் விற்பனைக்கு

STELLAR-G.S.L-HYUNDAI
14 SRI XXXX AC கார்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772964946
0213217930
(39-21-25)

### மலிவு விற்பனை

புதிய பாவித்த SONY wega flat 21", 25", 29" T.V கள் [13000/=முதல்], குளிர்சாதனப் பெட்டிகள் DVD அம்பிளிபயர் Box, Rx Radio, Cassette, Computer என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு-0771393670, 0778449829
R.S.மகேஸ்வரன் (அப்பன்கொம்பனி) சீனிப்புளியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), K.K.S.வீதி இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் இழுவைப்படகுகளுக்குத் தடையால் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் மீனவர்கள்

மன்னார் ,மே.14

மன்னார் மாவட்டத்தில் இழுவைப்படகுகள் மூலம் கடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்குத் தொழிலில் ஈடுபட தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் குடும்பங்கள் தொடர்ந்தும் பட்டினிச்சாவை எதிர்நோக்கி வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் சகல பாகங்களிலும் இழுவைப் படகுகள் மூலம் கடந்த காலங்களில் மீனவர்கள் மீன்பிடித்து வந்தனர்.

பின்னர் இது தடை செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து மீனவர்கள் கண்ணாடியிழைப் படகுகள் மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடலில் பலத்த காற்று வீசி வருகின்றது.

இதனால் மீன்பிடிபடும் வீதம் மிகவும் குறைவடைந்துள்ளது. மீனவர்கள் பல ஆயிரக் கணக்கான ரூபாய் பணத்துக்கு எரிபொருள்களை நிரப்பி தொழிலுக்குச் செல்கின்ற போதும் எரிபொருளுக்குரிய வருமானங்கள் கூடத் தற்போது கிடைப்பதில்லை.

குறித்த காலநிலை தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு நீடிக்கும். குறித்த நான்கு மாத காலம் வரையும் மீனவக் குடும்பங்கள் பட்டினிசாவுக்கு முகம் கொடுத்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இந்திய இழுவைப் படகு மீனவர்கள் எமது நாட்டுக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்ற போதும் கடற்படையினரும், உரிய அதிகாரிகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டு மௌனம் காத்து வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனை, தாழ்வுபாடு, நடுக்குடா, வங்காலைப்பாடு, வங்காலை, தலைமன்னார் ஆகிய மீன்பாடுகளில் அண்மைக்காலமாக மீனவர்கள் இழுவைப்படகு மூலம் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் இறால், நண்டு, கணவாய் போன்ற மீன் வகைகள் அதிகம் பிடிக்கப்பட்டு வந்தன. இதனால் ஒவ்வெரு மீனவக் குடும்பமும் நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானத்தை ஈட்டிக்கொண்டன.



ஆனால் தற்போது தொழில் முடக்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பல லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த றோலர் படகுகளும் கடலில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த படகுகள் காலப்போக்கில் தொழிலில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டு வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

எனவே தமது பரிதாபகரமான நிலையைக் கருத்தில் கொண்டு முன்னர் போன்றே தம்மை தொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-601)

# அக்கராயன் ம.வி.யில் திருட்டுச் சம்பவம்

அக்கராயன்,மே.14

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் கணினிகள், டி.வி.டி. பிளேயர் என்பன திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கணினித் தொகுதிகள் பொருத்தப்பட்டிருந்த அறை உடைக்கப்பட்டே இந்தப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதன் காரணமாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்தப் பாடசாலையில் சிற்றுண்டிச் சாலையிலும் திருட்டுச் சம்பவம் இடம் பெற்று பெறுமதியான பொருள்கள் ஏற்கனவே களவு போயுள்ளன.

வன்னிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதால் மக்களை விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(க-410)

# கிளிநொச்சி மேற்குப் பகுதியில் 15 நாள்களாக போக்குவரத்துத் தடை

அக்கராயன்,மே 14

கிளிநொச்சி மேற்குப் பகுதியிலுள்ள முக்கிய வீதியூடாக கடந்த 15 நாள்களுக்கு மேலாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக இந்த வீதியின் கோணாவில் பகுதியில் பெரிய குழியொன்று வீதிக்கு நடுவில் ஏற்பட்டு ஸ்கந்தபுரம் ஊடான போக்குவரத்து தடைப்பட்டது. தற்போது இந்தக் குழி நிரப்பப்பட்ட நிலையிலும் புதுமுறிப்புப் பாலம் உடைந்து காணப்படுவதால் இந்த வீதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

மேலும் இந்தப் பாலம் உடைந்து ஓராண்டுக்கும் மேலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இந்தப் பாலத்தினூடாகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அடிக்கடி பயணம் மேற்கொள்கின்றனர். ஆனால் உடைந்த பாலத்தை இவர்கள் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் கிளிநொச்சியின் மேற்குப் பகுதிகளான அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், முழங்காவில் போன்ற இடங்களுக்குச் செல்லும் மக்கள் திருமுறிகண்டி, அக்கராயன் வழியூடாகவே தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

தற்போது கிளிநொச்சி நகரிலிருந்து புதுமுறிப்பு வரை பேருந்துச் சேவைகள் நடைபெற்றாலும் கோணாவில், யூனியன் குளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்து இடர்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

அதிகாரிகள் இதில் அதிக கவனம் செலுத்தித் தமது போக்குவரத்து இன்னல்களைக் களையுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர். (க-410)

## நல்ல வேடம் ...



*பிஞ்சுகளின் அசத்தல்: அக்கராயன் ஆரம்பப் பாடசாலையின் தரம் [illegible]ன்றைச் சேர்ந்த மாணவர்கள் வேடம் புனைதல் நிகழ்வில் ஈடுபட்டுள்ளனர்.* (410)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி,மே.14

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருப்பதாகக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் பி.ப.3.00 மணியளவில் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் [illegible] வரையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (க)

# பளைக் கல்விக் கோட்டத்தில் நான்கு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்

அக்கராயன் ,மே.14

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் பளைக் கல்விக் கோட்டத்தில் நான்கு பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர்ச் சூழல் காரணமாகக் பளைக் கல்விக் கோட்டத்தில் பாடசாலைகள் பாதிக்கப்பட்டன.

தற்போது போர் ஓய்ந்த நிலையிலும் அல்லிப்பளை, கிளாலி, முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

இந்தப் பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களில் மிதிவெடிகள் அகற்றப்படாமையால் மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. இதனால் பாடசாலைகளும் மூடிக்கிடக்கின்றன.

தற்போது பளைக் கல்விக் கோட்டத்தில் 1600 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 120 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம்பெறாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தம்மை விரைவாக மீள்குடியமர்வு செய்யுமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-410)

# மன்னாரின் அபிவிருத்தி தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் கலந்துரையாடல்

மன்னார்,மே.14

ஐரோப்பிய ஒன்றியத்தால் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான கிராமிய அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தலைமையில் காலை 9.30 மணியளவில் மன்னார் அரச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றுள்ளது.

வறுமை ஒழித்தல், உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல், சிறிய நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவித்தல், உள்ளூர் நிர்வாக அமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களை பொது மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக ஆராயப்பட்டன.

மன்னார் மாவட்டத்துக்கு அபிவிருத்திப் பணிக்கென ஐரோப்பிய ஒன்றியத்தால் சுமார் 225 மில்லியன் ரூபா பணம் செலவிடப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மன்னார் மாவட்ட அபிவிருத்திப் பணிகள் [illegible]ன கூட்டத்தில் மன்[illegible] அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுத்தலைவர் பரிஸ் மாட்டின் ஒஸ் மற்றும் குழு அங்கத்தவர்களான பொப் மக்னினைஸ், சாம்ரகுபத்த, டி.பி.ஹெட்டியாராச்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 மே 2011 சனிக்கிழமை

வரவேற்பு....



திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்றுப் பிரதேச கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், வெருகல் பிரதேச தவிசாளர் ச.விஜயகாந், மக்கள் வங்கியின் வாகரைக்கிளை முகாமையாளர் ப.யோகநாதன் உட்படப் பலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுகின்றனர். (ச)

# கைதி தப்பியோட்டம்; சிறைச்சாலை அதிகாரிக்கு விளக்கமறியல்

திருகோணமலை,மே14

திருகோணமலை சிறைக் கைதியொருவர் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரியை நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இதற்கான உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

திருகோணமலை சிறைச்சாலை அதிகாரி இந்த சிறைக்கைதியை சரியாகக் கவனிக்கத் தவறியதாகவும் இதனால் அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சிறைச்சாலைக் கைதியொருவர் சுகவீனமடைந்த நிலையில் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு திரும்பிச்செல்லும்போது, வைத்தியசாலைக்கு ஏனைய நோயாளிகளைப் பார்வையிட வந்த ஆள்களுடன் இணைந்து தப்பிச்சென்றுள்ளார். இந்த சிறைக்கைதி தப்பியோடிய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையைச் சேர்ந்த முஹம்மது நஸார் (வயது 36) என்ற சிறைக்கைதியே இவ்வாறு தப்பிச்சென்றவர் ஆவார். (ச)

# மீனவர்களுக்கு ஓய்வூதியம்; புதிய திட்டம் விரைவில் அமுல்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

அம்பாறை, மே 14

மீன்பிடித் தொழிலாளர்கள் 60 வயதினை அடையும்போது அவர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவினை ஓய்வூதியமாக வழங்கும் திட்டமொன்றை தாம் மேற்கொண்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட கடற்றொழில் அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்முனை பொலிஸ் நிலைய வீதி, கத்தோலிக்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு,

தேசிய கடற்றொழில் மகா சங்கத்தில் அங்கத்துவம் பெறுகின்ற கடற்றொழிலாளர்களுக் கென நாம் பல்வேறு நன்மைகளை வழங்கவுள்ளோம். அந்த வகையில் கடற்றொழில் மகா சங்கத்தின் அங்கத்தவர்களுக்கென காப்புறுதித் திட்டமொன்றினையும் வகுத்துள்ளோம்.

அந்தக் காப்புறுதித் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொள் ளும் மீனவரொருவர் மரணமடையும்போது ஒரு லட்சம் ரூபாய் முதல் 3 லட்சம் ரூபாய் வரையில் காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஓய்வூதியத்தினைப் பெற்று வந்த மீனவர் இறக்கும் பட்சத்தில் அந்த ஓய்வூதியத் தொகை அவரின் மனைவிக்கு வழங்கப்படும்- என்றார். (ச-30)

# கிராமிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

நுவரெலியா,மே14

மத்திய மாகாண கிராமிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் கித்சிரி அமரதுங்க தெரிவித்தார்.

மத்திய மாகாணசபை அமைச்சராக பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மாகாண அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

பெருந்தோட்டப் பகுதி மக்களின் வசதி கருதி 1200 மில்லியன் ரூபா செலவில் இந்திய அரசின் உதவியுடன் டிக்கோயா வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

மாகாண வைத்தியசாலை ஒன்றின் அபிவிருத்திக்கு இவ்வளவு பெரும் தொகைப் பணம் ஒதுக்கப்படுவதில்லை.

இந்தியாவின் உதவியின் கீழ் நடைபெறும் இந்த வேலைத் திட்டம் காரணமாக டிக்கோயாவை அண்மித்த பகுதி மக்கள் பல நன்மைகளை பெறுவார்கள்.

சாதாரணமாக பெருந்தோட்டப் பகுதி வைத்தியசாலைகளில் இரசாயன கூட வசதிகள் இல்லை.

இந்தக்குறைபாட்டை உடன் நிவர்த்திக்கும் வகையில் நடமாடும் ஆய்வு கூட முறை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்- என்றார். (ச)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் எழுச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவரும், நிலைய முன்னோடியுமான

அமரர்

**வேலுப்பிள்ளை வேதநாயகம்**

(வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)

அவர்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

அல்வாய் வடக்கு,
அல்வாய். (19-21-43-4153)

இளங்கோ சனசமூக நிலையம்,
முத்தமிழ் மன்றப் படிப்பகம்,
இளங்கோ மழலைகள் கல்விப் பூங்கா.

## 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்



அன்னை மடியில்:
13.07.1993

அரண் அடியில்:
14.04.2011

அன்புச் செல்வம்

**ஸ்ரீ சுரேந்திரன் சரண்ஜன்**

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

எம் விழிகளில் விம்பமாய் உருண்டோடும்
உன் முகத்திரையே எம் அன்பிற்குச் சாட்சி
உன் நினைவு எம் சுவாசம் ஒரு முறை உன்
முகத்தைப் பார்ப்பதற்கு எம் விழி இரண்டும்
மூட முடியாமல் துடிக்கின்றது
குளத்திலே ஆயிரம் உறவிருந்தாலும் தாமரை
சூரியனுக்காக விடியும்வரை காத்திருக்கும்
அதேபோல் தாண்டா உலகத்திலே ஆயிரம்
உறவிருந்தாலும் நாம் உனக்காக உன்
நினைவுடன் காத்திருப்போம்

கடந்த 14.04.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த அன்புச் செல்வம் சரண்ஜன் அவர்களின் இறுதி நிகழ்வில் நேரில் சமூகம் தந்து எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் செய்தோருக்கும் வேண்டிய கடமைகளை செய்து ஒத்தாசை நல்கியோருக்கும் குறிப்பாக இறுதிவரை அன்னாரின் உயிருடன் போராடிய போதனா வைத்தியசாலை 26 ஆம் வார்ட் வைத்திய நிபுணர் அவர்களுக்கும் அவருடன் பணியாற்றிய வைத்தியர், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் யாழ்.வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் பங்குகொண்டு சிறப்பித்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி. (48,19,25)

திரு.திருமதி சுரேந்திரன்
தாய், தந்தை, சகோதரிகள்.

## 31 ஆம் நாள் நினைவில்...



உதயம்:
25.08.1941

அஸ்தமனம்:
14.04.2011

அமரர்

**வேலுப்பிள்ளை வேதநாயகம்**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை - யாழ்.சாலை)

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தீர்கள்- அதில்
வீழ்ந்து விடாதிருந்தோம்
எம் புலன்கள் எம்மை உணரும்
இறுதிக் கணம்வரை
உங்கள் நினைவுகளுடன்.....

இல.98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (48,22,19)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் தனிச்சிங்களத்தில் நடைபெறுவது குறித்து எதிர்ப்பு

திருகோணமலை,மே14

திருகோணமலை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் தனிச்சிங்களத்தில் நடத்தப்படுவது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதியும் கடற்றொழில் பிரதி அமைச்சருமான சுசந்த புஞ்சிநிலம தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ந.வரதன் இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இந்தக்கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் எனப் பலரும்இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின்இறுதியில் மாகாண சபை உறுப்பினர் வரதன் எழுந்து, ''தனிச்சிங்களத்தில் இந்தக் கூட்டத்தை நடத்துகின்றீர்கள். ஏனைய மொழி பேசுபவர்களால் விளங்கிக்கொள்ள முடியாமல் உள்ளதே. தமிழ் மொழியிலும் கூட்டத்தை நடத்தக்கூடாதா?'' - என்று கேட்டார்.

''உங்களுக்கு மூன்று மொழிகளும் தெரியும் தானே! சிங்களத்தில் கூட்டம் நடத்துவதால் உங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படப் போகின்றது?'' - என்று அங்கு சமுகமளித்திருந்த திருகோணமலை மாவட்ட அரச அதிபர், பௌத்த சாசனத்துறை பிரதி அமைச்சரும் திருகோணமலை மாவட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே.டி.எஸ். குணவர்த்தனா ஆகியோர் கிண்டலாகக் கேள்வி எழுப்பினர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கூட்டத்துக்குசமுகமளிக்கவில்லை. திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளான இரா. சம்பந்தன், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

தமிழ் மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக நடந்த கூட்டத்தில் முற்றுமுழுதாகத் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பது குறித்து அங்கு சமுகமளித்த தமிழ் அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர். (ச)

# இடமாற்றம் கோரிய ஆசிரியையை விடுதிக்கு அழைத்த அதிகாரி கைது

இரத்தினபுரி,மே14

இடமாற்றம் கோரிய ஆசிரியை ஒருவரை தன்னுடன் உல்லாசமாக இருக்குமாறு கோரினார் என்ற சந்தேகத்தில் வடமாகாண கல்வியமைச்சின் உயரதிகாரி ஒருவரை குருநாகல் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் அபே குணவர்தனவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குருநாகல் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து அதிகாலை வேளையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகலில் உள்ள ஆரம்பப் பாடசாலையொன்றில் பணியாற்றிய இந்த ஆசிரியை வசதிகுருதி வேறு பாடசாலையொன்றுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்தார்.

இடமாற்றத்தை இந்த அதிகாரி இழுத்தடித்துக் கொண்டிருந் தார். இதுகுறித்து ஆசிரியை தனது கணவரிடம் கூறவே பிரதி பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து பொலிஸாரின் அறிவுறுத்தலின் படி அதிகாரியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஆசிரியை அவரை குருநாகல் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வரவழைத்தார்.

ஆசிரியையின் அழைப்பை யேற்றுச் சென்ற இந்த அதிகாரியை அங்கு மறைந்திருந்த பொலிஸார் கைதுசெய்தனர். இவருக்கு எதிராக ஏற்கனவே இத்தகைய குற்றச்சாட்டுகள் இருந்துள்ளன என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (ச-5)

# எம்பிலிப்பிட்டிய பாடசாலை விவகாரம் ஜனாதிபதியின் தலையீட்டினால் முடிவு

இரத்தினபுரி,மே14

எம்பிலிப்பிட்டிய கல்விவலயத்துக்கு உட்பட்ட தொரப்பனே மகா வித்தியாலயத்துக்கு முன்பாக கடந்த இரு தினங்களாக பிரதேசவாசிகள் 14 பேர் மேற்கொண்டுவந்த உண்ணா விரதம் கைவிடப்பட்டுள்ளது. உண்ணா விரதமிருந்தவர்களில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஆயிரம் பாடசாலைகள் பட்டியலில் இடம்பெற்றிருந்த இந்தப் பாடசாலையின் பெயர் திடீரென நீக்கப்பட்டதற்கு பிரதேச அரசியல்வாதி ஒருவரே காரணம் எனத் தெரிவித்து பெற்றோர், பழைய மாணவர்கள், பிரதேசவாசிகள் என 14 பேர் சாகும்வரை உண்ணாவிதரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் ஒரு தொகுதியினர் பாடசாலையை முற்றுகையிட்டனர். அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்குள்ளேயே சிறை வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து நீக்கப்பட்ட பெயரை மீண்டும் பட்டியலில் சேர்க்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த உத்தரவு கல்வியமைச்சரின் மூலமாக சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு அறிவிக்கபட்டது.

முதலமைச்சர் இந்த உத்தரவைப் போராட்ட காரர்களுக்கு அறிவித்ததையடுத்து முற்றுகையும் உண்ணா விரதமும் கைவிடப்பட்டது. பாடசாலைக்குள் சிறைவைக்கப்பட்டிருந்த அதிபரும், ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டனர்.

ஏற்கனவே இப்பாடசாலையின் பெயர் காரணமின்றி நீக்கப்பட்டதை ஆட்சேபித்து பாடசாலை மாணவர்களின் கறுப்புக் கொடிப் போராட்டம் மற்றும் பாதயாத்திரை போன்றவை நடைபெற்றன. பிரதிக் கல்வியமைச்சரையும் சந்தித்தனர். எனினும் உரிய தீர்வு எட்டாதபடியால் சுமார் 2000 பேர்வரை திரண்டு வந்து அதிபரையும், ஆசிரியர்களையும் பாடசாலைக்குள் சிறைவைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களைக் கலைக்க பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

ஜனாதிபதியின் தலையீட்டையடுத்து கல்வியமைச்சிலிருந்து எம்பிலிபிட்டிய வலயக்கல்விப் பணிமனைக்கு அனுப்பப்பட்ட தொலைநகல் போராட்டகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே முற்றுகையும், உண்ணாவிரதமும் கைவிடப்பட்டன. (ச-5)

## நோயின்றி வாழ....




*சிரமதானம்: சர்வதேச தாதியர் தினமான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் தாதியர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ச)*

# வைத்தியசாலையில் கர்ப்பிணிகள் வெளியேற்றம்; விசாரணை நடத்த அதிகாரிகள் மட்டு.வருகை

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களை வெளியேற்றியமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சுகாதார அமைச்சு அதிகாரிகள் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை மட்டக்களப்புக்கு சென்ற 5 பேரடங்கிய அதிகாரிகளைக் கொண்ட குழுவினர், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று சந்தித்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து அந்தக் குழுவினர் வைத்தியசாலைக்கும் சென்று விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை 7 ஆம் விடுதியில் கடந்த 5 ஆம் திகதி காலை மகப்பேற்றுக்காக சேர்க்கப்பட்ட இரு கர்ப்பிணித் தாய்மார்களை புதிதாக இந்த வைத்தியசாலையில் பதவியேற்ற மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் கடந்த 6ஆம் திகதி வெளியேற்றினார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் பகுதிகளில் நிதி ஒதுக்கீட்டின் பின் உடனடி மீள்குடியேற்றம்

அம்பாறை, மே 14

கடந்தகால யுத்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு, தங்க வேலாயுதபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த 800 குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்கான நிதி மீள்குடியேற்ற அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் இந்த மக்கள் உடனடியாக மீள்குடியேற்றப்படுவார்கள் என திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ். அழகரெத்தினம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் அந்த மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது உணவு மற்றும் போஷாக்கு அமைச்சர் பி.தயாரட்ன, யுத்தத்தினால் இடம்பெயர்ந்த திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்களை மீள்குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக விளக்கமளித்த அரச அதிபர் சுனில் கன்னங்கரா கூறுகையில்:

இந்தப்பிரதேசத்துக்கான வீதிகள் பொத்துவில் பிரதான வீதியிலிருந்து தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு வரை புனரமைக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எனினும், மக்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான நிதியை மீள்குடியேற்ற அமைச்சிடம் கோரியுள்ளோம். நிதி வழங்கப்பட்டதும் உடனடியாக இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள்-என்றார்.

கடந்த 2007ஆம் ஆண்டு இந்தக்கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் திருக்கோவில், தம்பிலுவில், விநாயகபுரம், தாண்டியடி போன்ற பிரதேசங்களிலுள்ள உறவினர் வீடுகளில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# மட்டக்களப்பில் மீண்டும் வீதிச் சோதனையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபாடு

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானதையடுத்து மாவட்டத்தின் பல இடங்களிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு - கல்முனை வீதியில் 5 ஆவது மைல் கல் என அழைக்கப்படும் இடத்தில் சகல வாகனங்களையும் நிறுத்தி பிரயாணிகளையும் வாகனத்தையும் பொலிஸாரும் இராணுவத்தினரும் சோதனை செய்தனர்.இதனால் நீண்ட நேரம் வரிசையில் வாகனங்கள் தரித்து நின்றன.

இந்தச் சோதனை நடவடிக்கையால் மீண்டும் ஒரு [illegible] நிலைக்குள் தள்ளப்ப[illegible]டோமோ என்ற அச்சத்துடன் மக்கள் காணப்பட்டனர். (ச)

# 200 சிறிய நீர்மின் உற்பத்தி திட்டங்கள்

சப்ரகமுவ மாகாணசபையால் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மிகவும் பின் தங்கிய கிராமப்புறங்களில் 200 சிறிய நீர்மின் உற்பத்தித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் மொத்தம் 400 சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் காணப்படுகின்றன. இதில் அரைவாசி நீர்மின் உற்பத்தி நிலையங்கள் சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உங்களின் செலவு ஒன்றை மற்றவர்கள் தலையில் கட்டி விடுவீர்கள். உழைப்பில் கடுமையான காணப் படும். பெண்கள் விருந்தினர்கள் வருகையால் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பிடித்தமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உற்சாகம் குடிகொள்ளும் நாள்.

**இடபம்:**
சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். குடும்ப விடயங்களில் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து முடிவெடுப்பது நன்மை தரும். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம். கனவுத் தொல்லையுண்டு.

**மிதுனம்:**
உங்களின் வேலைகளை விட்டு, விட்டு மற்றவர்களின் வேலைக்காக அலைவீர்கள். பெரிய ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக் காமல் போகலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலிப்பில் அக்கறை காட்டுவர். புதிய சொத்துக்கள் வாங்க போட்ட திட்டங் களில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**கடகம்:**
குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள். பெண்கள் வகையில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கும். குழந்தைகள் திறனை மேம்படுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். பண உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. ஆறுதலான நாள்.

**சிங்கம்:**
பாதகமான சூழ்நிலைகளையும் சாதகமாக மாற்றிக் கொள்வீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வெடுக்கும் நாள். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை கொள்வீர்கள். தடை, தாமதங்களைச் சந்திக்க லாம். சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடை யலாம். வாகன பயணங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

**கன்னி:**
மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கலைஞர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் கேட்காமலேயே சிலர் உதவி செய்யலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம். உல்லாசமாக நடந்து கொள்வீர்கள்.

**துலாம்:**
நினைத்த காரியம் ஒன்றை முடிக்க ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். திடீர் பணத் தட்டுப்பாட்டை சந்திக்கலாம். நண்பர்களை நம்பி எந்த வேலையிலும் இறங்க வேண்டாம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ மருந்துப் பொருள்கள் வாங்கலாம். மறதியால் அவதியுண்டு.

**விருச்சிகம்:**
குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். ஒரு வகையில் வந்த பணத்தை மற்றொரு வகையில் தாராளமாகச் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் மேல் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். சிக்கலில் இருக்கும் நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் வரும்.

**தனுசு:**
மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று நடக்கலாம். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, செல்வாக்கு அதிகரிக்கும். நீண்ட நாள்களாகப் பார்க்காத நண்பர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த பண கோரிக்கைகள் நிறைவேறும். சோர்வின்றி, சுறுசுறுப்புடன் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நல்லது நடக்கும் நாள்.

**மகரம்:**
தெய்வ வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள். முன்பின் தெரியாத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கடுமையான வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சிவாலய வழிபாட் டின் மூலம் சிறப்புக்கள் கூடும். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் ஒருவருடன் துணைக்குச் செல்லலாம்.

**கும்பம்:**
உறவினர்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் செய்யும் சூழ்ச்சிகளால் தொழிலில் சில பிரச்சினை களைச் சந்திக்கலாம். அவசர வேலையாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். மன அமைதி பாதிக்கும்.

**மீனம்:**
நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்தவர் உங்களைத் தேடி வரலாம். நடக்குமோ, நடக்காதோ என, சந்தேகத்தில் இருந்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். பழகிய சிலர் மூலம் பணவரவுகளை பெறலாம்.

# கண்து... வேண்... கண்ண... துடைய...

### குற்றவாளி... விசாரிப்பது ...

அன்புள்ள பான் கீ - மூன் ஐயாவுக்கு!
வணக்கம்!
நான் சேமசுகம்!

நிபுணர் குழுவின் அறிக்கையை நீங்கள் வெளியிட்ட பிறகு உங்களுக்கு எதிராக இங்கு முன்னெடுக்கப்படுகிற நடவடிக்கைகளால் உங்களுக்கு எந்தவிதக் 'காத்துக் கறுப்பும்' வராமல் நீங்களும் சேமசுகமாயிருக்க நான் மாவைக் கந்தனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சின்ன வயதில் - ஐந்தாம் ஆண்டு 'ஸ்கொலர்ஷிப்' பரீட்சைக்குப் படிக்கிற காலத்தில், அந்தப் பரீட்சையில் வருகிற பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதற்காக - ஊடகங்களைப் புரட்டியும் உருட்டியும் முறுக்கியும் தகவல் தேடும் அறிவைப் பெற்றிருந்த நான் உங்களைப் பற்றி அதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் என்கிற பதவி நிலை பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்தேன்.

அந்தப் பதவி காலத்திற்குக் காலம் பல நாட்டு நபர்களாலும் அலங்கரிக்கப்படும் எனவும் தெரிந்து வைத்திருந்தேன். அதனால் என் பாடசாலைக் காலங்களில் ஆசிரியர்களின் ''பிற்காலத்தில் நீ என்னவாக வரப்போகிறாய்'' என்ற கேள்விக்கு, என் சக மாணவர்கள் உள்ளூர் பிரபலங்களை மனதிலிருத்தியும் அவர்களின் கைகளில் புரள்கின்ற சம்பளப் பணத்தைக் கணக்கிலெடுத்தும் மருத்துவர், பொறியியலாளர் என்றெல்லாம் சொல்ல, நான் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு வாயில் வந்ததை ஒப்புவித்துவிட்டு நான் இலக்கு வைத்தது என்னவோ உங்கள் பதவி நிலையைத்தான். காரணம், உங்கள் பதவிக்குரிய மகிமை; அதற்குரிய சர்வதேச மதிப்பு.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கவென நீங்கள் நியமித்த மூன்று நிபுணர்களை உள்ளடக்கிய குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் உங்கள் பதவி நிலை மீது நான் வைத்திருந்த மதிப்பைப் பாழ்படுத்திவிட்டது. சிம்மாசனமாக நான் கருதி வந்த உங்கள் ஆசனம், உங்கள் பதவி நிலை, இப்போது எனக்கு மிதிவெடி அபாயம் பற்றிக் குறிப்பிடுவதற்குச் சுவிற்சர்லாந்து நகரில் ஜெனீவா நகரில் நிறுவப்பட்டுள்ள ஒற்றைக் கால் உடைந்த நாற்காலியை ஞாபகமூட்டத் தொடங்கியிருக்கிறது. அதற்குக் காரணம் உங்கள் பதவி நிலையிலுள்ள கையாலாகாத்தனங்கள்.



நிபுணர் குழுவின் 192 பக்க அறிக்கையை அடிப்படையாக வைத்து போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கையை 'சந்தேகநபர்' நிலையில் இனங்கண்டபோதும், போர்க் குற்ற விசாரணைக்கு உத்தரவிடவோ அல்லது விசாரிக்கவோ உங்களுக்கு அதிகாரமில்லை என நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவ்வாறு ஒரு விசாரணையை நிகழ்த்துவதாக இருந்தால் அதற்கு இலங்கை அரசின் சம்மதமோ உறுப்பு நாடுகளின் அங்கீகாரமோ தேவை எனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

'வீற்றோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்களுடைய தீர்மானங்களைச் செல்லாக்காசாக்கக் கூடிய பலவீன நிலைமை ஐ.நாவிலே இருக்கிறது. நீங்கள் வெறுமனே அறிக்கையோடு மட்டும் நின்றுவிடாமல் மேலேபோய் இலங்கைக்கு எதிரான பிரேரணை எதனையும் கொண்டுவந்தால், ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதரவுடன் அதற்கு 'மறுத்தான்' விடுவதற்கான போர் வியூகங்களை இலங்கை அரசு முன்னெடுத்திருக்கிறது.

உங்களது நியமிப்பின் பேரில் வெளியான அறிக்கையை - அது ஐ.நாவின் உத்தியோகபூர்வ அறிக்கை அல்ல, தஸ்ருமன் என்கிற தனிநபர் தயாரித்த அறிக்கை எனக் கொக்கரித்திருக்கும் இலங்கை அரசுக்குப் பதிலளிக்கும் வகையில் நீங்கள் எவ்வித பதில் நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லையே ஏன்?

உள்நாட்டுத் தரப்பினரால் மட்டுமன்றி வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அளவில் இலங்கை தொடர்பில் வெளியிடப்படுகின்ற பல அறிக்கைகளுக்கு, அதில் எள்ளவேனும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி நல்ல விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் - நேர் மனப்பாங்குடன் நோக்கியிருந்தால் - மனித உரிமைகள் பற்றிக் ... புலிச்சாயம் ... தவறுவதே இல்லை. எரிக் சொல்ஹெய்ம் இதற்கு மெத்தச் சிறந்த உதாரணம். அந்த மாதிரியான நிலைப்பாடுதான் தற்போது உங்களுக்கும் உங்களால் நியமிக்கப்பட்ட மூவருக்கும் நடக்கிறது. ஆக மொத்தத்தில் இலங்கையில் இது ஒன்றும் புதினமில்லை.

நீங்கள் கடந்த ஆண்டு ஆனி மாதத்தில் நிபுணர் குழுவொன்றை நியமிக்க முயற்சிக்கிறீர்கள் எனக் கேள்விப்பட்ட கணம் தொடக்கம் அதனை முளையிலேயே கிள்ளிவிட அரசு முடிவு செய்திருந்தது. ஏட்டிக்குப் போட்டியாகக் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. அமைச்சர் விமல் வீரவன்ஸ உண்ணாவிரதப் போராட்டத்தை கொழும்பு ஐ.நா. அலுவலகம் முன்பாக அரங்கேற்றி இருந்தார். ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிடப் போகிறார் என்றும் மிரட்டி இருந்தார்.

இவற்றை வைத்தே 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்கிற தத்துவம் இலங்கை விடயத்தில் உண்மை என்பது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். நீங்களுமோ விடாக்கண்டனாக நின்று நிபுணர் குழு விவகாரத்தை முன்னெடுத்தீர்கள். பின்னர் விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பது தொடர்பில் பிடுங்குப்பாடுகள் தொடர்ந்தன. இறுதியில், உத்தியோகபூர்வமாக அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பாக இலங்கையிடம் அதனைக் கையளித்து அதன் பதிலைப் பெற்று, பதிலையும் அறிக்கையுடன் சேர்த்து வெளியிட நீங்கள் திட்டமிட்டிருந்தீர்கள். ஆனால் இலங்கை குறித்த காலத்தில் பதிலளிக்கத் தவறியது. மாறாக, ''அநீதி, பக்கச்சார்பு, தான்தோன்றித்தனம், பிழை'' என்கிற வகையில் அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டது.

அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்பட்டது. இப்போதோ முடிந்த முடிவாக அறிக்கை தொடர் பில் மூச்சுக்காட்டாமலே இருப்பது எனத் தீர்மானித்திருக்கிறது.

அறிக்கைக்கு நேரடியாகப் பதிலளிக்காமல் ரஷ்யா, சீனாவையும் ஏனைய உறுப்பு நாடுகளையும் அரசு பின்கதவால் நாடியிருப்பதை வைத்தே, இலங்கை அரசின் தந்திர நிலைப்பாடு உங்களுக்கு விளங்கியிருக்கும்.

உறுப்பு நாட்டு உள்வீட்டு விவகாரங்களில் தலைபோடுவதில்லை என்னும் கொள்கையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைப்பு
# டாம்
# ணீரைத்
# புங்கள்

## யே குற்றத்தை
## கேலிக்குரியது




பின்பற்றிவரும் ஐ.நா. சபை, அறிக்கை வெளியீட்டுச் சம்பவத்தில் மூலம் இலங்கையின் உள்விவகாரத்தில் மூக்கை நுழைத்துச் விட்ட தாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இதே இலங்கையில் சில காலங்களுக்கு முன்பு ''விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படைக்கு வலுக்கட்டாயமாகச் சேர்க்கிறார்கள்; ஐ.நாவின் தலையீட்டோடு அதனைத் தடுக்க வேண்டும்'' என்று ஐ.நாவைப் பார்த்து இதே அரசு குர லெழுப்பியதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அண்மையில் சிலி நாட்டில் சுரங்க அகழ்வில் ஈடுபட்டபோது உயிராபத்தை எதிர்நோக்கிய 33 பேரையும் உயிருடன் மீட்டபோது உலகமே தொலைக்காட்சியில் பார்த்துக் குதூகலித்தது. ஏதோ தமது உடன்பிறப்புகளே மீண்டு வந்ததாக ஆர்ப்பரித்தது. இத்தகைய மனநிலையில், பயங்கரவாத ஒழிப்பு எனும் தலைப்பில் நிகழ்த் தப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி மரணங்களுக்கு 'அது உள்நாட்டு விவகாரம்' எனச் சர்வதேசம் மற்றும் ஐ.நா. மூச்சுப் பேச்சில்லாமல் ஒதுங்கிக்கொள்ள வேண்டு மென்று இலங்கையரசு கருதுவது எந்தவகையில் நியாயமென்று எனக்குத் தெரியவில்லை.

நீங்கள் குறிப்பிடுவது போல போர்க் குற்றவாளிகளை விசாரிப்பதற்கான பொறுப்பை இலங்கையிடமே ஒப்படைப்பதென்பது கேலிக் குரியது; குற்றவாளியை குற்றவாளியே விசா ரணை செய்யும் கோமாளித் தனத்தை ஒத்தது.

இலங்கையில் நிலவும் நீதி விசாரணைக் கட்டமைப்பை நீதி தேவதை மட்டும் கையாள்வ தில்லை. ஏனைய பல அரசியல் காரணிகளும் அதனைத் தீர்மானிக்கின்றன.

கதிர்காமர் கொலை வழக்கிலும் மிருசுவில் கொலை வழக்கிலும் சம்பவம் இடம்பெற்று பல ஆண்டுகள் கழிந்த பின்பே நீதிபதிகள் குழு அவ்விடங்களுக்கு நேரில் சென்று பார்வை யிட்டு விசாரணை மேற்கொண்டது. இனங் காணப்படாத ஆயுததாரிகளால் மேற்கொள் ளப்பட்ட பல சம்பவங்கள் இன்றும் வெளிச் சத்துக்கு வரவே இல்லை. ஊடகவியலாளர் களையும் ஊடக நிறுவனங்களையும் தாக்கு பவர்கள் நீதியின் கண்ணுக்கு இன்னும் எத்துப்படவில்லை.

இந்த நிலையில் போர்க் குற்ற விசாரணைகள் இலங்கை அரசினால் முன்னெடுக்கப் படுமானால் அது எவ்வளவு காலத்துக்கு நீளும் எவ்வாறெல்லாம் 'அட்ஜெஸ்ட்' பண்ணப்படும் என்று அறிந்து கொள்வதற்கு நீங்கள் ஒன்றும் அரசியல் ஆய்வாளனாக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. தினசரிப் பத்திரிகை வாசகனாக இருந்தாலே போது மானது.

எது எப்படியோ, எத்தாக்கத்துக்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் ஒன்று உண்டு என்னும் நியூட்டனின் மூன்றாம் விதியையும் அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்கிற பழமொழியையும் ஒருங்கே ஆழமாக நம்புகிற நான், அடுத்துத் தொடரும் உங்கள் நடவடிக்கைகள் கண்துடைப்பாக இல்லாமல் கண்ணீரைத் துடைப்பவையாக இருக்க வேண்டுமெனக் கோரி, இரண்டாவது பதவிக் காலத்துக்கு உங்களுக்கு வாய்ப்பிருந்தால் அதனை வெல்வதற்கு வாழ்த்தும் கூறி விடை பெறு கின்றேன்.

நன்றி
தங்களில் ஆர்வமுடன்
ஸுடோ ஸ்வாமி



# இறைநிலையடைய மனத்தூய்மை அவசியம்



பகவத்கீதையின் பதினாறாவது அத்தியாயம் தெய்வ குணங்கள் எவை? அசுர குணங்கள் எவை? என்பவற்றைப் பட்டியல் போடு கிறது. அச்சமின்மை என்கிற பய மற்ற தன்மையே தலைமையான தெய்வீக சம்பத்து. பொதுவாகக் கோழைகள்தான் மனித குலத்திற்கு அதிகக் கெடுதல் செய்திருக் கிறார்கள். வீர, தீரம் மிக்கவர்கள் தங் கள் தியாகங்களால் உலகை படைத்த தெய்வங்கள் மக்களால் வணங்கப்படுகிறார்கள்.

கிராமங்களில் வணங்கப்படுகிற சிறுசிறு தெய்வங்களின் வரலாறுகளை உற்று நோக்கினால் இந்த உண்மை எமக்குப் புலப்படும். மரண பயமே இல்லாமல், ஒரு குடும்பத்தை அல்லது ஒரு கூட்டத்தைப் பாதுகாக்க ஏதேனும் வீரச்செயல் செய்தவர்கள்தான் பெரும்பாலும் கிராம தேவதைகள். கையும் காலும் உடைந்து, உருச்சிதைந்து கிடக்கும் அந்த உருவச் சிலைகளைக் கிராமங்களில் இன்றும் மக்கள் பூஜிக்கிறார்கள். அவர்கள் மூளியாகிப் போன அந்தக் கல்லைக் கும்பிட வில்லை. அந்தக் கல்லுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் தியாகத்தை, வீரத்தை, அச்சமற்ற தன்மையை அங்கு கொண்டாடுகிறார்கள்.

எனவே கீதையின் பதினாறாவது அத்தியாயத்தின் முதல் ஸ்லோகம் சொல்லும் முதல் தெய்வப் பண்பு அச்சமின்மை. அது என்ன அர்த்தம் உள்ள ஒன்று. அடுத்தது மனத் தூய்மை. அறம் என்பது என்று பலப்பல சொல்லிய திருக்குறள். மிக முக்கிய அறம் ஒன்றே ஒன்று என்று சொல்லியபோது மனத்தூய்மையைச் சொன்னது.

''மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர் பிற''- என்கிறது வள்ளுவர்.

தூய மனமே சிறந்த எண்ணங்களின் தாய்வீடு. செயலைக் கொண்டு ஒருவரை மதிப்பிட முடியாது. செயலுக்குப் பின் னால் உள்ள மனநிலையே மதிக்கத்தக்கது. கண்ணப்ப நாய னார் சிவபெருமானைச் செருப்புக் காலால் மிதிக்கின்ற செயல் குற்றமானது. ஆனால் ஏன் மிதித்தார்? தன் கண்ணை எடுத்து குருதிவடியும் இறைவன் கண்ணுக்குப் பதிலாகப் பொருத்த நினைக்கிறார். தன் கண்ணை எடுத்துவிட்டால் பார்வை தெரியாது. சிவபெருமான் முகம் எங்கே, கண் எங்கே என்று எப்படித் தேடமுடியும். எனவே முகத்தில் செருப்புக் காலால் மிதித்து கண்வைக்க வேண்டிய இடத்தில் காலை அடை யாளமாக வைத்துக்கொண்டு தம் கண்ணைத் தோண்டினார். செருப்புக் காலால் மிதித்தல் என்ற செயலுக்குப் பின்னால் உள்ள தூயமனம், தியாக மனம் அவரை வணங்கத் தக்கவர் வரிசையில் நிறுத்தியது.

சிவபெருமான் மீது மன்மதன் ஐந்து மலர் அம்புகளை வீசினான். மலர்களைத் தூவியவனை மதிக்க வேண்டும். சிவ பெருமான் மதித்து வரம் கொடுத்தாரா? எரித்தேவிட்டார். காரணம்- மரியாதை நிமித்தம் மன்மதன் மலர் தூவவில்லை. சிவபெருமானுக்குக் காமத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற கீழான எண்ணத்தோடு மலரிட்டான். தூய்மையற்ற மனம் கொண்ட மன்மதன் செயல் தண்டிக்கப்பட்டது.

நீங்கள் அசுரரா? தேவரா? என்பது உங்கள் செயலின் பின் புலத்தில் உள்ள மனத்தூய்மையாலேயே நிர்ணயிக்கப் படுகிறது. தமிழ்நாட்டில் மிகப் புகழ் பெற்ற பேச்சாளர் ஒரு வருக்கு வேடிக்கையான குணம் உண்டு. தகுதியற்ற, திறமை யற்ற உளறுவாயர்களைப் பற்றி மேடையில் அதிகமாகப் புகழ்ந்து பேசுவார். சில மூடர்கள் அவற்றை உண்மை என்று நம்பிக் கொஞ்சம் தலைக்கனம் அடைவார்கள். நான் அப்படிப் பொய்யாக யாரையும் புகழ்வது இல்லை. என் மீது அந்த உளறுவாயர்களுக்கும் கோபம் வரும். ''அவ்வளவு பெரிய பேச் சாளரே எங்களைப் புகழும்போது நீ புகழக் கூடாதா?'' என்று வெட்கமில்லாமல் கேட்பார்கள்.

''இப்படி அளவுக்கதிமாக உளறுவாயர்களை ஏன் புகழுகிறீர்கள்?'' என்று கோபமாக அந்தப் பெரிய பேச்சாளரை நான் கேட்டேன். அவர் சிரித்தபடி சொன்னார்... ''இந்த முட் டாள்களைச் செருப்பால் அடிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை. நான் என் தகுதிக்கு அப்படிச் செய்ய முடியுமோ? இப் படிப் புகழ்ந்தால் நிஜம் என்று நம்பித் தம் தகுதி தெரியாமல் இவர்கள் பல இடங்களில் உளறுவார்கள். அப்போது பலபேர் இவர்களைச் செருப்பால் அடிப்பார்கள்'' என்றார். மனத்துக்குள் எத்தகைய வஞ்சனை பாருங்கள். வெளி வேஷத்தில் மயங்குகிற உலகம் மனத்தூய்மை பற்றி ஆராய் வதில்லை. நிஜமாகவே ஒவ்வொருவரும் மனத்துள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க ஏதேனும் கருவி வந்தால் நல்லது. மனசுக்குள் என்ன நினைக்கிறான் என்பதைக் கண்டுபிடிக்கும் கருவி வந்துவிட்டால் பலபேரை நம் வீட்டுக் குள்ளேயே விடமுடியாது. மனசு முழுவதும் அவ்வளவு நரகல்!

இன்று விபூதி கொடுக்கும்போதே பெண்கள் உள்ளங் கை களைக் கிள்ளுகிற கில்லாடிகள் சிலரும் சாமியாராக இருக் கிறார்கள். வெளி வேஷத்தில் தெய்வீக புருஷர்களாக அவர்கள் இருந்தாலும் மனம் தூய்மையற்ற அவர்கள் அசுரர்களே. தேவர்கள் அல்லர். மனத்தூய்மையின் அவசியத்தை விளக்க எத்தனையோ கதை சொல்கிறேன்...

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்துக்கு உதவுவார்களா ஊரவர்?

காரைநகர் பிரதேசத்தில் பற்றைகளாகக் காணப்படும் காணிகளால் இங்கு வசிக்கும் மக்களின் அன்றாட வாழ்வில் பெரிய தாக்கம் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாகக் காரைநகரில் சொந்தக் காணிகளையும் வீடுகளையும் வைத்துக் கொண்டு காரை நகருக்கு வெளியே உலகெங்கும் பரந்து வாழ்வோர் காரை நகரில் தற்போது வசிப்பவர்களின் வாழ்வியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றமை வேதனை அளிப்பதாக இங்குள்ளோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு 75 வீதமான வீடுகள் மற்றும் வளவுகளின் சொந்தக்காரர் காரை நகரில் வசிப்பதில்லை. அவர்களுடைய வீடுகளும் காணிகளும் அநேகமானவை காடு மண்டிக் கிடக்கின்றன. அவற்றுக்கு அயலில் வசிப்பவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்களின் பாதிப்புக்களைத் தணிக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தற்போது காரைநகரில் வசித்து வருவோர் எதிர்கொண்டு நிற்கும் பிரச்சினைகளை நோக்குவோமானால், காரைநகரில் வசிக்காது வீடுகளையும் வளவுகளையும் வைத்திருப்போர் அவற்றைத் துப்புரவு செய்வதில்லை. அவற்றைத் துப்புரவு செய்யக்கூட அயலவர்களை அனுமதிப்பதில்லை. அதனால் அவை காடுமண்டிக் கிடக்கின்றன. இவ்வாறு காடுமண்டிப் பற்றைகளாகக் காணப்படுவதால் விஷஜந்துக்கள், மரநாய், மயிர்க்கொட்டி, நுளம்புகள் எனப் பலதரப்பட்டவையும் இங்கு உற்பத்தியாகி அயலில் உள்ளவர்களைப் படாதபாடுபடுத்தி வருகின்றமை கவலை அளிக்கின்றது.

இதனால் ஆள்கள் அற்ற வீடுகளுக்கு அயலில் வசிப்பவர்கள் நுளம்புப் பெருக்கத்தால் நோய்களை எதிர் நோக்குவதுடன் மரநாய், பாம்பு போன்ற விஷ ஜந்துகள் அங்கு குடிகொண்டு கால் நடைகளைக் கடித்துக் குதறுகின்றன. ஆள்கள் அற்ற வீடுகளைத் திருடர்களும், சமூகச் சீரழிவில் ஈடுபடுபவர்களும் கூடத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு சொல்லொனாத் துன்பங்களை காரை நகரில் தற்போது வாழ்பவர்களுக்கும் காரை நகருக்கு வெளியே வசிப்பவர்கள் பரிசிலாக வழங்கிவருகின்றனர்.

## மக்கள் மன்றம்

இவ்வாறான செயற்பாடுகளால் இங்கு வசிப்பவர்கள் பெரிய இடர்பாடுகளை எதிர் நோக்குவதுடன், வாழ்வில் முன்னேற முடியாது துடிக்கின்றனர். காரைநகருக்கு வெளியில் வாழ்பவர்கள் இங்குள்ள காணிகளைத் துப்புரவு செய்வதைவிடுத்து, அவற்றுக்கு யானைவிலை, குதிரை விலை கூறுகின்றனர். இங்கு வாழ்பவர்களின் கற்பனைக் கெட்டாத விலைகளைக் கூறுபவர்கள் அந்தக் காணிகளைத் துப்புரவு செய்யப் பின்நிற்கின்றனர். அயலவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தங்கள் பாதுகாப்புக்காகத் துப்புரவு செய்யப் பின்நிற்கின்றனர். அயலவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தங்கள் பாதுகாப்புக்காகத் துப்புரவு செய்ய முயன்றால் அவர்களை மிரட்டவும், விரட்டவும் செய்கின்றனர். காரைநகர் பாலாவோடை, விளானை, துறைமுகம், பலகாடு, நீலங்காடு,கோவளம் போன்ற இடங்களில் ஒரு சில குடும்பங்களே வாழ்கின்றன. அந்தப் பிரதேசங்கள் காடுமண்டிக் காணப்படுகின்றன. இந்தப்பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியேறத் தயக்கம் காட்டியே வருகின்றனர். ஏனைய பிரதேசங்களில் ஓரளவு மக்கள் வசித்து வந்தாலும் அயல் காணிகள் பல ஆள்கள் அற்றவையாகவே காணப்படுகின்றன. அவற்றால் அவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்.

காரைநகரில் வகை தொகையின்றிப் பெருகி வரும் மயிர்க்கொட்டிகளால் நாளாந்தம் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் தங்களுடைய இல்லிடங்களைத் துப்புரவு செய்திருந்தாலும் அயல் காணிகளில் வளர்ந்து நிற்கும் பூவரசு போன்ற மரங்களில் பெருக்கெடுத்திருக்கும் மயிர்க்கொட்டிகள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரைப் பதம்பார்த்து வருகின்றன.

வீதிகளில் இரு மருங்கும் அடர்ந்து வளர்ந்துள்ள பூவரசம் மரங்களில் இருந்தும் இறங்கும் மயிர்க்கொட்டிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் வீதியால் செல்வோர் மீதுபட்டு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. அதனால், அந்த மாணவர்கள் பாடசாலை செல்லாது வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி, மயிர்கொட்டிகள் பாடசாலைகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றையும் விட்டு வைப்பதாக இல்லை. இதனால், மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் டெங்கு நோயைக் காரை நகர்ப் பிரதேசத்திலும் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். குடியிருக்கும் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வீடு வளவுகளைப் பரிசோதிப்பதுடன், நீர் தேங்கி நிற்கும் இடங்கள் பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றை அகற்றுமாறு அறிவுறுத்துவதுடன், தவறும் பட்சத்தில் குற்றப் பணம் அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. துப்புரவு செய்யப்படாமல் கிடக்கும் அயற் காணிகளும் அங்கு உடைந்த நிலையில் காணப்படும் மலசலகூடக் குழிகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன.

### காரையூரான்

காடுமண்டிக் கிடப்பதால் விஷ ஜந்துகளின் பெருக்கமும் காணப்படுகின்றது. இவற்றுக்குள் ஒளிந்திருக்கும் கட்டாக் காலி நாய்களும் மரநாய்களும் வீடுகளில் வளர்க்கப்படும் ஆடுகள் மற்றும் கோழிகள் என்பவற்றைக் கடித்துக் குதறுகின்றன. இதனால், இங்குள்ளவர்கள் சுயதொழிலுக்காக இவற்றை வளர்க்க முடியாத நிலை காணப்படுகின்றது. அதே போல பற்றைகளாகக் கிடக்கும் காணிகளில் பாம்பு போன்ற விஷ ஜந்துகள் பெருக்கெடுத்து அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுவதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். ✱

## மக்கள் முகம்



தீவகக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (திட்டமிடல்) கடமையாற்றிய தி.யோண் குயின்ரஸ் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இற்குத் தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

கல்வியியல், பண்பாட்டியல், தமிழ் ஆகியவற்றில் முதுகலை மாணிப் பட்டங்களைப் பெற்ற இவர் சிறந்த கல்வி நிர்வாக சேவைத் தன்மை உடையவர். (9)

## புத்தகசாலை

### உளநலம்




''தமிழ் சமுதாயத்தில் உளநலம்'' எனும் நூலின் மூன்றாவது பதிப்பானது இந்தக் காலத்தின் தேவை மற்றும் இரசனைக்கேற்ப பல புதிய விடயங்களின் உட்சேர்க்கையோடு, தற்காலத் தொழில்நுட்பமுறைகளின் உதவியோடு வடிவமைக்கப்பட்டு முற்றி லும் புதுப்பொலிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக அனுபவித்த உள் நாட்டு யுத்தம், இடையிடையே வந்துபோன சூறா வளி, வெள்ளப்பெருக்கு, சுனாமி முதலான இயற்கை அனர்த்தங்கள், விட்டுச்சென்ற இழப்புக்கள், வடுக் கள் முதலியனவற்றுக்கு முகம்கொடுத்தும் முகங் கொடுக்க முடியாமலும் அல்லல்படும் தமிழ் சமுதாயத் தின் உளநலத்தைப் பேணி மேம்படுத்தும் நோக்கு டன் தமிழ்ச் சமூகத்தினரின் வாழ்வியல் முறைமை களுடன் இணைந்து காலங்காலமாகப் பேணப் பட்டு வந்த பண்பாட்டொழுக்கம், விழுமிய முறை மைகள் மற்றும் அவர்களிடம் காணப்பட்ட வளங்களைக் கருத்திற்கொண்டு இந்த நூல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நூல் உளவில், சமூகவியல் மற்றும் உளச் சமூகக் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் மக்களுடன் பணிபுரிகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், சேவைமனப்பான்மை உடையவர்கள் மற்றும் சமூக நிறுவனத் தொண்டர்கள், ஆர்வலர்கள் எனப் பலதரப்பட்ட வாசகர்களுடைய இந்தநூல் போதுமான விளக்கப்படங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், தனிநபர் வரலாறுகள் போன்றவைகளை உள்ளடக்கி மிகத் தெளிவான எளிமையான மொழிநடையில் கீழ்வரும் 10 அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது.

- ✱ உதவியளித்தல்
- ✱ தமிழ்ச் சமுதாயமும் அதன் பாரம்பரிய வளங்களும்
- ✱ நெடுங்கீடு
- ✱ மிதமான உளக்கோளாறுகள்
- ✱ பாரிய உளநோய்கள்
- ✱ சிறுவர்கள்
- ✱ உள, குடும்ப, சமூக மட்டத்தில் பெண்கள்
- ✱ முதுமையில் உளநலம்
- ✱ பாலியல் பிரச்சினைகள்
- ✱ மது மற்றும் போதைப்பொருள் சார்ந்த பிரச்சினைகள்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வோர் அத்தியாயமும் அந்தத் துறையில் அனுபவம் பெற்றவர்களால் எழுதப்பட்டு பின்பு அந்தத்துறைசார் சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பெற்றது. இந்த நூலின் முதலாவது பதிப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 2000 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. இதனுடைய இரண்டாவது பதிப்பு சுனாமியைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒரு நெருக்கடி நிலையின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. தற்போது இந்த நூலின் மூன்றாவது பதிப்பு 30 ஆண்டுகால யுத்தம் ஒருவரலாறாகிப் போன நிலையில் வாழுகின்ற ஒரு சமுதாயத்தின் தேவைகளை மையமாகக் கொண்டு மிக நுணுக்கமாக மீள்பார்வை செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது.

தொடர்புகளுக்காக: சாந்திகம்,8/1 கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்



யாழ்.குடாநாட்டில் வாழ்ந்து மறைந்த சேவையாளன், அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம் அவர்கள் கரவருஷம் பிறந்த சித்திரைப் புத்தாண்டு நாளில் பூவுலகம் துறந்து அமரர் உலகம் புகுந்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் அல்வாய் வடக்கு கிராமத்தில் பிறந்த இவர், தான் வாழ்ந்த கிராமத்தின் உயர்வுக்கு நிறைந்த சமூக, சமயப் பணி களை ஆற்றினார்.

இளவயதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இளங்கோ சனசமூக நிலையத்திலும் சிறந்த விளையாட்டு வீரனாக விளங்கினார். சனசமூக நிலையத் தலைவராகவும் இருந்து பல்வேறு விதமான சமூகப் பணிகளையாற்றினார்.

மிக இளம் வயதிலேயே வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உத்தியோகத்தராக கோண்டாவில் சாலையில் சேர்ந்து கொண்டார். அங்கும் தொழிற் சங்கம், நலன்புரி சங்கம் ஆகியவற்றில் பொறுப்புமிக்க பதவிகளை வகித்தார்.

1974 ஆம் ஆண்டில் சித்திரைப் புத்தாண்டு அன்று இவருடன் இணைந்து சென்ற தொழிற்சங்கக் குழுவினர் இந்திய தமிழகத்தில் அப்போதும் இப் போதும் முதலமைச்சராக இருக்கும் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தமை குறிப் பிடத்தக்கது.

யாழ்.நகரப்பகுதியில் குடியிருந்த தனது அல்வாய் கிராமத்துப் பெண்ணைத் திருமணம் செய்தார். நான்கு ஆண்பிள்ளைகளுக்கும் அடுத்து இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். யாழ். நகரம், அரியாலை பிர தேசங்களில் வாழ்ந்த உறவுகள், அன்பர்களுக்கெல்லாம் தாராள உதவிகள் புரிந்தார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் தன்மை கொண்டவர்.

### நீத்தார் நயப்புரை

மத்தியூஸ் வீதி, கிறீன், கிங்ஸ் சன சமூக நிலையம் இவரைத் தனது தலைவராகத் தெரியும் அளவுக்கு அந்தப் பகுதி மக்களின் வரவேற்பைப் பெற்ற பண் புள்ளவரானார். வாசிப்பில் கலைத்துறையில் மிகவும் ஈடுபாடு காட்டினார். தனது அயலவர், உறவினர், ஊரவரையும் இத்துறையில் வழிநடத்தினார்.

இரு தசாப்தங்களாக சுவீடனில் குடியிருக்கும் இரண்டாவது மகன் இளங்கோவன் தமிழ், சுவீடிஸ் அகராதியை வெளியிட்டுத் தாய் மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். பிள்ளைகள் தேடிக் கொடுத்த செல்வத்தை வறியோருக்குத் தக்க தருணத்தில் கொடுத்து உதவும் வள்ளல். தலையோ அலை கட லோவென நினைக்கும் வண்ணம் இவரது இறுதி ஊர்வலம் நடந்தது. 'மன்னிக் கும் உள்ளம், மாணிக்கக் கோயில், கெடுதல் வந்தால் பின்பு நன்மை நிகழும்.' எனும் அவர் அடிக்கடி கூறும் வாசகங்கள் மனுக்குலத்துக்குச் சிறந்த வழி காட்டு மென்ற நம்பிக்கையுடன் நினைவு கூருகிறேன்.

கலாபூஷணம் நா.செல்லத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்கொடி விவகார வழக்கில் தன் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறார் பொன்சேகா

## தனது பேட்டியை திரிபுபடுத்தி வெளியிட்டதாம் சண்டே லீடர்

கொழும்பு, மே 14

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக தம் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கிறார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

எனது 40 வருடகால இராணுவ வாழ்க்கையில் தாய்நாட்டுக்கோ அல்லது இராணுவத்துக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவொரு உத்தரவையும் நான் பிறப்பிக்கவில்லை.

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் என்னுடன் நடத்திய பேட்டியை திரிபுப்படுத்தி எழுதியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

வெள்ளைக்கொடி வழக்கு விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என். பி.பி. வராவெவ, சர்பிக் ரஸூப் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் சாட்சியமளிப்பதற்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 பேரில் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, அக்கட்சியின் எம்.பி. மங்களசமரவீர ஆகியோர் சமுக மளிக்கவில்லை.

ஏனையவர்களான உயர் நீதிமன்ற மற்றும் மேல் நீதிமன்ற பதிவாளர்கள், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸா நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

சரத்பொன்சேகா சாட்சியமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு -

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் நான் முற்றாக நிராகரிக்கின்றேன். அதேபோன்று சரணடைய வந்த புலிகளை சுட்டுக்கொல்லுமாறு நான் எச்சந்தர்ப்பத்திலும் உத்தரவு பிறப்பிக்கவில்லை. என்னுடன் நடத்தப்பட்ட பேட்டியை சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் திரிபுபடுத்தி எழுதியுள்ளார்.

எனது 40 வருகால இராணுவ வாழ்வில் உயிரைப் பணயம் வைத்து நாட்டை மீட்கப் போராடினேன். எனது உத்தரவுக்குக் கீழ் பணிந்து செயற்பட்டு நாட்டை மீட்கச் சென்ற இராணுவத்தினரைப் பாதிக்கும் வகையில் எந்தவொரு அறிவிப்பையும் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதியோ அல்லது எனது இராணுவ வாழ்வில் ஆரம்பம் முதல் இன்று வரையோ எச்சந்தர்ப்பத்திலும் விடுக்கவில்லை என்பதை கௌரவத்துக்கும் மதிப்புக்குமுரிய இந்த நீதிமன்றில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்புக்குரிய நீதியரசர்களே இது தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவந்த பின்னர் என்னால் அவ்வாறான அறிவிப்பு ஒன்றும் விடுக்கப்படவில்லை என்று மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் பல்வேறு மக்கள் சந்திப்புக் கூட்டங்களில் என்னால் கூறப்பட்டதை வீடியோ மூலம் பதிவு செய்தவைகளை திரிபுபடுத்தி வித்தியாசமான அர்த்தங்கள் வெளிவரும் வகையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

என்னால் வெளியிடப்பட்ட முழுமையான பேச்சின் ஒரு பகுதியை மாத்திரம் செம்மைப்படுத்தி ஒளிபரப்புச் செய்யப்பட்டது என சாட்சியமளித்துக் கொண்டிருந்த சரத்பொன்சேகா மீண்டும் இரும ஆரம்பித்தார்.

பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி, சரத் பொன்சேகா சுகவீனம் காரணமாக அவரால் தொடர்ந்து சாட்சியமளிக்கமுடியாதுள்ளது என்று கூறினார்.

இதனையடுத்து வழக்கு எதிர் வரும் 19ஆம் திகதி மற்றும் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (சி)

## வெசாக் கொண்டாட பாங்கொக் சென்றார் பிரதமர்

கொழும்பு,மே14



தாய்லாந்து பிரதி வெளிவிகார அமைச்சரின் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்ட அழைப்பைக் கருத்திற்கொண்டு அந்தநிகழ்வில் பங்குகொள்ளவென பிரதமர் டி.எம்.ஜயரட்ண நேற்று பாங்கொக் சென்றுள்ளார்.

பாங்கொக் சென்ற பிரதமர், பிலிப்பைன்ஸ் நாட்டு உப ஜனாதிபதியின் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவு விவகார கலந்துரையாடல் அழைப்பிதழை ஏற்று அங்கிருந்து பிலிப்பைன்ஸுக்குப் பயணமாவார் என தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கலந்துரையாடலின் போது கொழும்பு மற்றும் மணிலாவுக்கான நேரடி விமான சேவை குறித்தும் கலந்துரையாடப்படும் எனத் தெரியவருகிறது (ச)

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை இணங்கிப்போக வேண்டும்

## ஜப்பானிய அரசு வலியுறுத்து

கொழும்பு, மே 14

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு ஐ.நாவுடன் இணங்கிச் செல்ல வேண்டும் என்று ஜப்பானிய அரசு வலியுறுத்தியுள்ளது. ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதி ஊடகச் செயலாளர் ஹிடெனோப்பு சொபாஷிமா இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனின் பதில்கள் தொடர்பாக தமது நாடு உன்னிப்பாக அவதானிக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். ஐ.நாவின் நெருக்கமான ஆலோசனைகளுடன் உள்ளக நடைமுறைகளின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் என்று ஜப்பானிய அரசு எதிர்பார்ப்பதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதி ஊடகச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை கலாசாரத்தை பாதித்துள்ளதாம்

கொழும்பு, மே 14

புத்தாண்டு காலத்தின்போது இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில், நிபுணர் குழு அறிக்கை திட்டமிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கலாசாரத்தைக் கருத்தில் கொள்ளாது ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூன் செயற்பட்டுள்ளர் என்றும் ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காகவே மனிதாபிமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

## தீர்ப்பு எப்போது...



வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்றது. இந்த வழக்கில் பிரதிவாதியான முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படுகின்றார். (ச)

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தமிழ் பிரதிக் கல்விப் பணிப்பாளரை நியமிக்குக!

## ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே14

மேல் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த பிரதிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தமிழர் ஒருவரை நியமிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.எம்.சி. ஜயந்தி விஜதுங்கவிடம் ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்தவாரம் மேல்மாகாண கல்விச் செயலாளரை அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே இந்தக் கோரிக்கை எழுத்துமூலம் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மாகாண கல்வித் திணைக்களத்தில் கடந்த பல வருடங்களாக தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கென தமிழ் பேசும் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படாது காணப்படுவதையும், கடந்த ஒரு தசாப்தத்திற்கு முன்பு இங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பேணப்பட்டு வந்தமையையும் சுட்டிக் காட்டிய சங்கத்தினர் கடந்த பல வருடங்களாக அந்நிலைமை இல்லாது போனமை குறித்தும் கூறினர்.

அதேவேளை திணைக்களத்தின் செயற்பாடுகள் உரியமுறையில் நடைபெறுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்ட அமைச்சின் செயலாளர் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேஷனின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு சார்பான நிறுவனங்களின தலைவர்களுக்கு ஊதிய உயர்வு

கொழும்பு, மே 14

அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் மற்றும் அரச வங்கிகள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும், பணிப்பாளர்களுக்கும் கடந்த முதலாம் திகதியிலிருந்து மாதாந்தக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கான சுற்றுநிருபமொன்று திறைசேரிச் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடந்த 29 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய சுற்றுநிருபத்துக்கமைய அரச நிறுவனங்கள், கூட்டுத்தபனங்கள், அரச வங்கிகள் ஆகியவை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.


வருமானம் ஈட்டும் அரச நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்கள் போன்றவை 'ஏ' தரத்தில் வைக்கப்பட்டு அவற்றின் தலைவர்களின் கொடுப்பனவு 90 ஆயிரம் ரூபா வரையிலும், நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் 70 ஆயிரம் ரூபா வரையிலும் அதிகரிக்கப்படும்.

இந்த நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரம் இல்லாத பணிப்பாளர்களுக்கு ஒவ்வொரு கூட்ட அமர்வுக்கும் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இந்த மாதாந்த அதிகரிப்புகளுக்கு மேலதிகமாக இவர்களுக்கு வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படுமென சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இரவீந்திரநாத் தாகூரின் பல்துறை ஆளுமை

(சென்றவாரத் தொடர்ச்சி)



தாகூர் இந்தியக்கலை மெய்யியலுக்குப் பெருமளவில் பங்காற்றியுள்ளார். அந்தவகையில். அவரின் நோக்கில் கலையானது கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம், இன்பம், அதன் பயன் என்ற இவ்வகைக் கருத்தானது கலைத்தன்னலமும் பழி பாவங்களும் நிறைந்த துன்ப உலகை விட்டுத் தம்மை அப்பால் அழைத்துச் செல்வதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார். இந்தச் சிந்தனையைப் பிளேட்டோவின் ஒழுக்கம் போதிக்கும் கலையினூடாகவும் அறிந்துகொள்ளலாம். உண்மையான கலை மனிதனின் ஒழுக்க நெறியை உயர்த்துவதாகவும் மனிதர்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவதாகவும் வாழ்க்கையை இசைபடவாழ்தல் என்ற நிலைக்கு உயர்த்துவதாகவும் அமையும். இந்த நிலைக்குக் கலை உயரும் போதுதான் அழகுத்துவம் கலைத்துவம் முழுமையடையும் எனப் பிளேட்டோ கூறுகின்றார்.

தாகூரின் இசைப்பாடல்களை ஆராய்கையில் அவருடைய சங்கீதத்தின் வார்த்தைகள் மிகவும் எழுச்சியூட்டுவனவாகவும் மயக்குவனவாகவும் உள்ளன. சந்தோசம் மற்றும் துக்கம், காதல், சோர்வு, இன்பம், இணைதல், பிரிதல் அதற்கப்பால் தெரிவதையும் ஒருங்கிணைத்து மனித வாழ்க்கை மற்றும் அனுபவத்தின் ஒரு பரந்து விரிந்து உள்காட்சியை அவை கொண்டு வருகின்றன. இந்தியத் தேசிய கீதத்தையும் வங்காள தேசத்து தேசிய கீதத்தையும் இயற்றி இசையமைத்தவர் தாகூர் ஆவார். இந்தியாவின் தேசிய கீதம் பிரபலமான தேசியப் பாடலாகவும் வங்க மொழியில் அமைந்த இக் கீதம் இந்தியாவின் பல்வேறு கலாசாரத்தையும் உள்ளடக்குவதாக விளங்குகின்றது. 1905ஆம் ஆண்டு வங்கப் பிரிவினையை எதிர்த்து எழுதிய அவரது தேசியப் பாடலான ஆமா. சோனார், பங்களா... மிகக் குறிப் பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது.

மேலும் தாகூரின் பாடல்கள் உணர்ச்சி மிக்க பாடல் வரிகள் மற்றும் இன்னிசையின் கனிவான இணைப்பாகும். இங்கே அந்த இரண்டும் பிரிக்க முடியாதவையாக ஒரு தனித்துவஇன்னிசை மொழியாக ஒன்று சேர பரிணமிக்கின்றன எனச் சுசித்ரா மித்ரா கூறுகின்றார்.

திரவியநாதன் திலீபன்
உதவி விரிவுரையாளர்,
மெய்யியல் உளவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

அவரின் இசைப்பாடல்கள் மூன்று கட்டங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. முதல் கட்டமான 1881-1900 வரை எழுதப்பட்ட பாடல்கள் இந்துஸ்தான் சாஸ்திரிய இசைத் தாக்கங்கள் மற்றும் மேலைத்தேச இசைத் தாக்கங்கள் என்பன வலுவாகப் பிரதிபலிக்கின்றன.

1900-1920 ஆம் ஆண்டு வரையிலான இரண்டாவது கட்டம் பரிசோதனைக் கட்டத்தைக் குறிக்கின்றது. இந்தக்காலம் சாஸ்திரிய அமைப்பு ஒழுங்குமுறையுடன் இருந்ததோடு, தேசபக்திப்பாடல்களையும் கொண்டதாக அமைகின்றன. மூன்றாவது கட்டமாகிய 1921-1940 வரையிலான காலமாகும். இந்தக்காலப் பாடல்கள் அவரது கலைநய ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன.

தாகூரின் கல்வி பற்றிய மெய்யியலும் உலகளாவிய கவனத்தை ஈர்த்தது. இயற்கையோடு இணைந்த கல்விமுறையும் ஆழ்ந்த விழுமியங்களை வெளிப்படுத்தும் கல்வி மரபையும் பல கட்டுரைகளில் சுட்டிக்காட்டியுள்ளார். கல்வியில் ஆக்கபூர்மான- விமர்சன பூர்வமான- தளத்தை வலியுறுத்தினார். அதற்காகவே விஸ்வ பாரதி பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இவ்வாறு தாகூரின் பல்துறை ஆளுமை இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதையும் வழிகாட்டக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது. தாகூர் இறந்தாலும் அவரது பல்துறை ஆளுமையால் சோக்கிரடீஸ், காள்மாக்ஸ் போல இன்றும் வாழ்ந்து கொண்டு இருப்பவராவார்.

(முற்றும்)

# சங்ககால மக்கள் வாழ்வியல் [இல்] ஆடல்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சங்ககாலத்தில் ஆண்கள், பெண்கள், மன்னர் என யாவரும் ஆடல் புரிந்த செய்திகளை இக்கால இலக்கியங்கள் கூறி நிற்கின்றன. அத்துடன் பரத்தையர் எனும் சமூகக் குழுவினர் பரத்தமை தொழிலுடன் ஆடல், பாடல்களில் சிறந்து விளங்கியமையாகவும் கூறப்படுகிறது. அது மட்டுமன்றி ஆடல் ஒப்பனை, அணிமணி அலங்காரம் ஆடல் அரங்கமும் ஆடலுக்கு ஏற்ற வாத்தியக் கருவி பயன் பாடும் இந்தக்காலத்தில் இருந்தமையை அறிய முடிகிறது.



*''தன்னுமை பாணி தளராது*
*எழூஉக*
*பண்னமை இன்சீர் குரவையுள்*
*தென் கண்னித்*
*திண்தோள் திரள் ஒளி.........*
*........ஆய்ந்த முறுவரால்*
*மென்தோள் பாராட்டி''*

இனி தண்ணுமையின் பாணி தளராது எழுக என்றனர் சுற்றத்தார். பண்ணமைந்த இனிய தாளத்தை உடைய குரவையுள் விளங்கிய கண்ணியையும், தின்மையான தோள்களையும், திரளினது விளக்கத்தையும் மாய போரினையும் கரிய மேனியையும் அழகிய துவரூட்டின் ஆடையும் அணிந்த பெதுவனோடு அழகிய முறுவலாழின் மென்தோளையும் பாராட்டிச் சிறுகுடி மன்றத்திலே குரவையாடி மகிழலாம். எழுக என்று கூற அனைவரும் எழுந்தனர் என்று குரவைக் கூத்துப் பற்றி கூறுகிறது கலித்தொகைப்பாடல். இந்தப் பாடல் ஆயர்கள் குரவையாடிய ஆய்ச்சியர் குரவை பற்றிக் கூறியுள்ளதைக் காணலாம். குரவைக் கூத்து என்பது சங்ககாலத்தில் நிலவிய கூத்து வகைகளில் ஒன்று.

இதனை மலைநடனம் என்று அகராதி கூறுகின்றது. குரவை அயர்தல், குரவை தாங்குதல், குரவை முனைதல், குரவை நிற்றல், குரவை தழுவுதல், தழுவ அணி அயர்தல் என்று பல பெயர்களால் கூறப்படுகிறது. ஆடவர் அல்லது மகளிர் தனித்தோ, அல்லது இருவர் சேர்ந்து குழுவாகவோ ஆடப்படுவது ஆரவாரம்மிக்கது. இசைக்கேற்ப ஆடும் சிறப்புடையது. காதல் சந்தர்ப்பங்களில் காதலன் சிறப்புக் கூறின் தோழிகளுடன் சேர்ந்து ஆடியதாகவும் தலைவனும் தலைவியும் இணைந்து ஆடியதாகவும் புறப்பொருளிலே வெற்றிபெற்ற மன்னனைப் புகழ்ந்து பாணர் புறளியர் ஆடியதாகவும் வெற்றிக்களிப்பில் மன்னர் தேரின் மேல் நின்று ஆடிய செய்திகளைச் சங்க இலக்கியங்களிலே காணலாம்.

*''குரவை தழீஇ, யாம் மரவுளிப் பாடி*
*தோயா விழுப்புகழ் தெய்வம் பரவுதும்*
*.............*
*எங்கோ வாழியச் இம்மலர் தலை உலகே''*

அங்கே குரலையை கூட்டியே யாம் எம் மரபுகளை சுட்டிப்பாட தேயாத புகழையுடைய தெய்வத்தைப் போற்றுவோமாக. மாசற்ற அழகிய கடலிடத்தே பரந்து

# மாற்று வேடத்தில் நகர சோதனைக்குச்

முன்னைய காலத்தில் அரசர்கள் இரவில் நகர சோதனைக்காகப் போனார்களென்று கதைகளில் படித்து இருக்கிறோம். பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் கொண்ட மன்னன் இவ்வாறு நகர சோதனைக்குப் புறப்பட்டுச் சந்தேகம் கொண்டு வீட்டின் கதவைத் தட்டி அது தவறென அறிந்து கடைசியில் தப்புவதற்காக அந்த வரிசையில் உள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டி மக்களைக் குழப்பி தண்டனையாகத் தனது கையை வெட்டிப் பொற்கை வைத்ததாக வரலாறு சொல்கிறது.

அதுசரி விடயத்துக்கு வருவோம். மன்னர் ஆட்சி இன்னமும் சில நாடுகளில் நடந்துதான் வருகின்றது. நோபாளம், பிரிட்டன் என்பன இந்த முறையில் உள்ளன. காலத்தின் பரிணாம வளர்ச்சியில் அரசன் தொடங்கி பிரதமர், ஜனாதிபதியென்ற பெயர்களில் அரசாட்சி நடக்கின்றது. இருந்தும் ஏன் இப்போது முன்னர் போல் அரசர்கள் இரவில் நகர சோதனைக்குப் போவதில்லை. போகத் தேவையில்லையெனத் தீர்மானித்துவிட்டார்களா? அல்லது அவர்கள் போவது எமக்குத் தெரியாமல் உள்ளதா?

(நாட்டில் அடிக்கடி ஏற்படும் மின்தடை காரணமாக ''அரசர்கள் நம் கண்களுக்குத் தெரியாமல் தப்பிவிடுகிறார்களா?'')

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

சிலவேளை ''நாட்டு மக்கள் விளக்கு வைச்ச நேரத்தில் தொடங்கி நாதன் வரத் தோட'' நல்லாத் தானே இருக்கிறார்கள் என்ற நிலைப்பாடுதான் காரணமோ? நகர சோதனையை நிறுத்துவதற்கு என்று ஏன் அரசன், மந்திரி, பிரதானிகள், படைத்தளபதிகள், ஏராளமான படைகள் இருந்தும் தான் மட்டும் நகர சோதனைக்காகச் சில தனக்கு நம்பிக்கையான அதிகாரிகளையும் கூட்டிக் கொண்டு ''மாறு வேடத்தில்'' போவதற்கான காரணம் தான் என்ன?

தென்னிந்திய சஞ்சிகைகள் தற்போதைய ''சூப்பர் ஸ்ரார்'' ரஜனிகாந்த் தனது பால்யகால நண்பர்களோடு பம்பலாக இருப்பதற்குத் தனது ரசிகர்களிடம் இருந்து தப்புவதற்காக ''மாறுவேடத்தைப் பயன்படுத்துவதாகச் செய்திகள் எழுதியுள்ளன. என்ன செய்வது 'பிரபல்யம்' ஆனால் இப்படி சொந்த முகத்தை வைத்துக் கொண்டு அலைவது எவ்வளவு ஆபத்தான காரியமாக உள்ளது?

பலவருடங்களுக்கு முன்னாள் 'குமுதம்' சஞ்சிகை மக்களுக்குப் பிரபலமான நபர்கள் குறிப்பிட்ட நாளில் அவர்கள் செல்லும் ஊர்களின் பெயரைக் குறிப்பிட்டு (பிரபல நபர்கள் மாறுவேடத்தில் போவார்கள்)

அங்கு அவர்கள் போகும் போது மக்களைக் கண்டுபிடிக்கச் செய்து பரிசு கொடுத்தார்கள். சிலவேளை சூழ்நிலை காரணமாக நாங்களும் மாறுவேடம் போடும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். உதாரணமாகத் திரை உலகின் முதலாவது சூப்பர் ஸ்ரார் ஆன எம்.கே.தியாகராஜபாகவதர் லட்சுமி காந்தன் கொலை வழக்கில் சிக்கி (நகைச்சுவை நடிகர் என்.எஸ் கிருஷ்ணனும் இதில் சம்பந்தர்ப்பட்டிருந்தார்) அவமானப்பட்டு, வெளிவந்து ''மக்கள் முன் தன்னை இனங்காட்டப் பயந்து'' முக்காடு போட்டுத் திரிந்ததாகக் கதைகள் சொல்லுகின்றன.

நாங்கள் ''கும்பிடும்'' கடவுள்கள் கூட சும்மா இருந்ததில்லை, அவர்களும் அடிக்கடி மாறுவேடம் போட்டுத் தனது ''விசுவாசமான பக்கதர்களை இக்கட்டான துன்பமான வேளையில் பல சோதனைகள் கொடுத்துக் காப்பாற்றி உள்ளார்கள். செம்மணச் செல்விக்கு வைகை நதி பெருக்கெடுத்த நிலையில் அணைகட்ட வள்ளியை திருமணம் செய்யத் தன் பக்கம் இழுப்பதற்குத் திருவாதவூரரைத் தடுத்தாட் கொள்ள திருமணம் மண்டபத்துக்குச் சென்றமை....

எங்களைப் படைத்த கடவுள் கூட மாறுவேடத்தில் போய்த்தான் உதவ வேண்டிய நிலை என்ன செய்வது? சொந்த முகத்தோடு போய் உதவினால்.. பிறகு அடிக்கடி உதவி கேட்க வந்துவிடுவார்கள் என்ற பயம் காரணமாக இருக்கலாம். சரி மன்னர்கள் இரவில் சென்றமைக்கான காரணமென்ன? சிலவேளை அரண்மனையில் நெடுக ராணியோடு கதைத்து 'போக்ர்' அடித்திருக்கலாம். படுத்தால் அடிக்கடி பக்கத்து நாட்டுமன்னன் ''படையெழுத்து வருவதாகக் கண்ட கனவு, பெற்ற புத்திரர்கள் அடிக்கடி சுற்றி வளைப்புச் செய்து எப்போது எமது கையில் ஆட்சிவரும் என்ற கொலை மிரட்டல்கள்.

இந்தத் தொல்லைகளிலிருந்து தப்புவதற்கு மன்னர்கள் இந்த நகர சோதனைத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். மன்னர் நகர சோதனைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயச் சூழலில் நிறை தண்ணியில
# ுட்டி மோதிக் கொண்ட இளசுகள்!

ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என்று யாழ்ப்பாணம் ராம்ப பிஷியாக இருக்கு. எங்கள் ஆலயங்களில் இரவு நேரக் ரியாட்டங்களில் இலட்சங்கள் இரவோடு இரவாக கரைந்து பாகின்றன. அவற்றில் எங்கள் ளசுகளும் சீரழிந்து போகின்றன.

அன்று இரவு 9 மணியிருக்கும் நாயகப் பெருமான் மீது டப்பட்ட பாடல்களின் இசைத் ட்டு வெளியீட்டு விழா கோலா லமாக நடைபெற்றது. தென்னிந் ய பாடகர் ஒருவர் அங்கு ரசன்னமாகி இருந்தார்.




ஆலயச் சூழலில் ஆயிரக் ணக்கான ரசிகர்கள் திரண்டிருந்த ர். குறிப்பாக இருபது வயசுக்கு ட்பட்ட இளசுகள் நிறை தண்ணீரில மிதந்திருந்தது. அங்கு ல கண்கொள்ளாக் காட்சிகள் நடந்தன.

காட்சி-1

வேட்டியோட நிண்ட பெடியள் ஒருவனை தறதறவென ழுத்துவந்து ''நீ தானேடா ஆட்டோ பற்றி கழட்டினனீ'' என்று கட்டு போட்டுத்தாக்கினார். பின் பொலிஸாரிடம் ஒப்படைக்க ப் பிற்குள் தூக்கிப் போட்டனர் பொலிஸார்.

காட்சி-2

பெட்டையளோடை சேட்டைவிட்டதாக இரண்டு இளை ர்களை துரத்தித் துரத்திப் பொலிஸார் தாக்கினார். அவர்களும் 'ஜீப்' பிற்குள் தூக்கிப் போடப்பட்டனர்.

காட்சி-3

சனக் கூட்டத்துக்குள் நின்றவர்கள் இடையே கோஷ்டி மோதல் மற்றுமொரு அணியி னர் நையப்புடைத்து அவர் களும் 'ஜீப்' பில் ஏற்றப்பட்ட னர். (ஜீப் நிறைந்துவிட்டது)

காட்சி-4

ஆலயச் சூழலில் இருக் கின்ற சின்னக் குச்சொழுங் கைகளுக்குள் புகை மண்டலம் பரவியது. இளசுகள் பல சேர்ந்து கையிலே கொள்ளிக் கட்டை ஏந்தி யாகம் நடத்திக் கொண்டி ருந்தது.

காட்சி-5

தெரிந்த அரைகுறைச் சிங்களத்தைக் கதைத்தவாறு வாங்கடா மோதிப்பார்ப்போம் என்ற மாதிரி வம்பளக்கத் திரிஞ்சுதுகள் இன்னுமொரு குழு (இப்படி பல காட்சிகள் அங்கு நடந்தன.)

பதினைந்து நிமிட இடைவெளியில் ஆங்காங்கு முறுகல் நிலை பின்னர் கைகலப்பு பொலிஸார் கலைப்பு, பிடிப்பு என நாங்கள் சின்ன வயதில் அடிச்சுப்பிடிச்சு விளையாடுற மாதிரி இருந்தது. திருவிழாவை ஒழுங்கு படுத்தியவர்கள் அங்குமிங்குமாக திரிசங்கு நிலையில் நின்றனர்.

கலைச்சுப் பிடிச்சு அடிக்கிற பொலிஸுக்குக் கூட எங்கட இளசுகள் கை நீட்டிச்சுது பாருங்கோ .

ஆலயம் என்றால் ஆன்மா லயப்படும் இடம். ஆனால் ஆலயம் இன்று ஆன்மா பயப்படும் இடமாக மாறிவிட்டது.

ஆடம்பரங்களை களியாட்டங்களைச் செய்து பணத்தை விரயமாக்கும் ஆலய உபயகாரர்களே உங்கள் பணி சமூகத்தை நோக்கியதான ஆரோக்கியமான சேவையாக அமைந்தால் என்ன? ஆலயம் ஆடம்பர நிறுவனம் அல்ல. சமய, சமூக சந்நிதானம்.

இன்றைய இளைஞர்கள் போதையில் மாறி செல்வதற்கு ஆலயங்களில் நடைபெறுகின்ற களியாட்டங்கள் ஒரு களமாக அமைகின்றது.

ஏனெனில் நிகழ்வுகளைப் பார்க்க வீட்டிலிருந்து புறப்படும் இளைஞர்கள் விடிய விடிய புகைத்தல், மதுபாவனை எனும் சுதந்திரமான சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள்.

எனவே இத்தகைய விழாக்கள் அடிக்கடி நடைபெறுவதால் அது அவர்களுக்கு சாதகமாக அமைந்து எமது எதிர்காலத்துக்கே பாதகமாக அமைகின்ற சந்தர்ப்பமாக உள்ளது.

லட்சக்கணக்கில் பணங்களைச் செல வழித்து இளைஞர்களும் பொலிஸாரும் அடிச்சுப் பிடிச்சு விளையாடுற மைதானமாக ஆலயச் சூழலை மாற்றாதீர்கள்.

பொறுப்போடு நடந்து எமது எதிர்கால சமூகத்தை இத்தகைய தவறான நடத்தைகளில் இருந்து மீட்பதற்கு நீங்கள் வழி சமைக்க வேண்டும்.

இதுவே குட்டிச் சுவராகின்ற எமது இளைய சமூகத்திற்கு நல்லதொரு ஆரோக்கியமான கைங்கரியமாக இருக்கும்.

கவிநேசன்

---

க்கின்ற எம்கோமான் பாண்டியன் இவ் அகன்ற உலகில் என்றும் நிலைபெற்று வாழ்வானாக ன்று வாழ்த்திக் குறவையாடிய பின் முடிவிலே ஆய மகளிர் திரு மாலையும் வழிபட்டுச் சல்வர். அதுமட்டுமன்றி, மன்னர்களின் புத்திரியருக்கோ அல்லது செல்வந்தர்களின் தல்வியர்களுகோ திருமணத்துக்காகவோ காளை அடக்குவதும் அதில் வெற்றி பெற்ற ருக்குப் பெண்ணைக் கொடுப்பதுவும் சங்ககாலத்தில் ஒரு மரபாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் து தழுவுதலின் வெற்றியில் ஆண்,பெண் இருவரும் இணைந்து குரவை ஆடுவது பற்றியும் பித்தொகையில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

பார்க்களக் குரவைக் கூத்துப்பற்றி தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

*''தோர்ஓர் தோற்றிய வென்றியும் தோரோர்*
*வென்ற கோமான் முந்தேர் குரவையும்*
*ஒன்றிய மரபிற் பின்தேர் குரவையும்''*

போன்ற வரிகளில் மன்னன் குரவையாடியது பற்றிக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். தாவது, தேர்ப்படையுடன் வந்த பகையரசர்களின் தேர்ப் படையைத் தோற்கடித்து அவர்களது ரசனின் தேரைக் கைப்பற்றிய மன்னனைப் போற்றி, அந்தத் தேரின் முன்னால் நின்று டுவது முந்தேர் குரவை என்றும் அதே தேரின் பின்னால் நின்று ஆடும் ஆடல் ன்தேர்க்குரவை என்றும் கூறப்படும். இன்னும் இவை போல பல நூற்செய்திகள் ஊடாக ரவைக் கூத்துப்பற்றிய தகவல்களை அறிய முடிகிறது.

**அ.உமாமகேஸ்வரி,**
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(தொடரும்)

# செல்லும் மன்னர்கள்

போகும்போது நடந்து போன மாதிரித்தான் கதையில் தெரிகின்றது. தேரிலோ, பல்லக்கிலோ போனதாகத் தெரியவில்லை. (எல்லா பரிவாரங்களோடும் போனால் மக்கள் உடன் அடையாளம் கண்டு கொள்வார்களே பிறகேன் மாறுவேடம்)

மன்னர் மட்டும் போவதே மாறுவேடத்தில் சிரமமான காரியம். கூடவே நம்பிக்கையான அதிகாரிகளும் செல்வதாக இருந்தால் அவர்களுக்கும் மாறு வேடம் போடவேண்டும். அடக் கடவுளே! எவ்வளவு பெரிய கஷ்ரம். மன்னர் மாறு வேடத்தோடு மக்கள் குடியிருக்கும் பகுதிக்கு எவ்வளவு இடங்கள் போயிருப்பார்கள். இரவு தானே ஓய்வான நிலை. பல கதைகள் பேசி நாட்டு நடப்புக்கள் ஆராயும் நேரம், மன்னர் எவ்வளவு கதைகளைக் கேட்டிருப்பார்? போற்றியும் இருக்கும் தூற்றியும் இருக்கும். அரசைப் பற்றிப் பல குரல்கள் பேசும். பொய் கலக்காமல் உள்ளத்திலிருந்து வரும் மொழி மன்னனுக்குத் தெரியாத விடயங்கள் கூடக் கதையில் வரலாம்.

இரவில் படுக்கும் போது ''அப்பனே முருகா!'' என்று சொல்லாமல் ''எங்கட ராசா எங்களைக் காப்பாற்றுவார்'' எனச் சொல்லிவிட்டுத் தூங்கியிருப்பார்கள். வெளியே மாதம் மும்மாரியும் மழை பொழிந்து கொண்டிருக்கும். சரி முதலில் கேட்ட கேள்விக்கு வருவோம்... இப்போது ஏன் நகர சோதனை போவது இல்லை?

இந்த நாடு எப்போது நிம்மதியாய் இருந்தது? எப்போது பார்க்கிலும் யுத்தம், யுத்தம் இடம் பெயர்வு, அவல வாழ்க்கை. மாறுவேடம் போடாமலே மக்கள் ஓடித் திரிகிறார்கள். கையில் எப்போதும் அடையாள அட்டை வைத்திருக்க வேணும். இருந்தாற் போல் அதற்குத் தேவை ஏற்பட வாய்ப்பு உண்டு. மக்கள் எப்போதும் தமது பிரச்சினைகள் பற்றியே கதைக்கின்றார்கள். பகல், இரவு எப்போதும் நாளைக்கு என்ன செய்வது? நாளைய பொழுதை எப்படி ஓட்டுவது?

இப்போது மன்னனைப் பற்றி அவனது அரசைப் பற்றி யார் கதைக்கப் போகிறார்கள்? யோசிக்க வேண்டிய விடயம். அப்படியிருந்தும் நாட்டு மக்களைக் காண மாறு வேடத்தில் புறப்பட்ட மன்னனின் நிலையைப் பாருங்கள். மகாராணியரே மகாராணியரே பெரிய பிரச்சினை. இரவுபோன நம் மன்னரைக் கைதுசெய்து போட்டார்கள். என்ன காரணம்? நமது மன்னர் இரவில் மாறுவேடத்தில் போய் உள்ளார். சரி அடையாள அட்டையைக் காட்ட வேண்டியது தானே? மகாராணி , மன்னர் அதை அந்தப்புரத்தில் வைத்து விட்டு எடுத்துக் கொள்ளாமல் போய்விட்டார்.



# சொல்லத்தான் வேண்டும் 9

எமது சாதாரண வாழ்வில் சில சமயங்களில் மிகுந்த அச்சுறுத்தலான நிலைமைகள் தோன்றுவதற்குச் சில நிலைமைகள் தோன்றுகின்ற வேகத்திலேயே மாறிமறைந்து போய்விடும். சில நிலைமைகள் நின்று நீடித்து சங்கடங்களைத் தந்து கொண்டேயிருக்கும். இன்றெல்லாம் நமது பெற்றோர்களைப் பெரிதும் யோசிக்க வைக்கின்ற ஒரு விடயமாகியிருப்பது எமது பெண் குழந்தைகளின் பாதுகாப்பு என்கிற விடயம்.

எமது சமூக அமைப்பு மாறி வருகிறது. எமக்கான விழுமியங்கள் மறக்கப்பட்டும் கைவிடப்பட்டும் வருகின்றன. வாழ்வின் ஒழுக்க வரன்முறைகள் உடைந்து கலகலத்துப் போய்விடுகின்ற சூழல் உருவாகி வருகிறது.

வெளிப்படையாகப் பேசவே கூச்சப்பட வைக்கின்ற அவமானகரமான விடயங்கள் அரங்கேறி வருகின்றன. பெற்ற மகளையே பாலியல் வன்முறை களுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் பயன்படுத்துகிறான் தந்தை. பத்து வயதுப் பாலகியைப் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்துகிறான் அறுபது வயதுக் கிழவன். என்ன ஆகிவிட்டது. எமது மூத்தவர் சமூகம் இப்படி நாறிப்போய்க் கொண்டிருப்பதை நாம் அனைவருமே பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறோமா? நடந்து முடிந்தவற்றுக்குத் தீர்வு தேடுவது ஒரு புறமிருக்க, இப்படியாய் ஒரு நிலைமை உருவாகியிருக்கின்றமைக்கான காரணங்களை மேற்கொண்டு இவ்விதமான காரியங்கள் நிகழாதிருப்பதற்கான சூழலைத் தோற்றுவிக்கிற அவசியத்தை எத்தனை பேர் சிந்திக்கிறோம்? இத்தகைய மீறல்களுக்கும் சிதைவுகளுக்கும் துணைபோகின்ற காரணங்களை நாம் யோசிக்க வேண்டும்.

ஒழுக்கச் சிதைவுகள் அவ்வப்போது அங்கு நிகழ்கின்ற சூழல் எப்போதும் இருந்தே வந்திருக்கிறது. நோய் போலும் அத்தகைய நிலைமைகள் தீவிர மடைந்து பரவலாக நிகழ்கிற ஆபத்து இப்போது அதிகரித்திருப்பதைத்தான் நாம் கவனத்திலெடுக்க வேண்டும்.

எமது பெண் குழந்தைகள் பழகுகின்ற சூழல், மனிதர்கள் எமது குழந்தைகளின் நண்பர்கள் சேர்க்கை, ஈடுபாடுகள் இவை யாவற்றையுமே நாம் பொருட்டெனக் கருதி நாம் கண்காணிப்பாக இருக்க வேண்டியுள்ளது.

பிள்ளைகளின் அப்பாவித் தனத்தையும் அறியா இயல்பையும் சாதகமாக்கிக் கொண்டு அற்பத்தனமாய் நடக்க எத்தனிப்பவர்கள் குறித்துப் பிள்ளைகளிடம் மனம்விட்டுப் பேசி நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டும். குறிப்பாகப் பெண்பிள்ளைகளிடம் சுயநலமும் கேவலமான நோக்குள்ள ஆண்களைப் பற்றிய எச்சரிக்கை உணர்வை ஊட்டுதல் வேண்டும்.

ஒரு சராசரி ஆண்மகனிடம் பெண்கள் பற்றிய பொதுநிலைநோக்கு எப்படி அமைகிறதோ அதுவே சாதாரணமாகப் பெண்களுடனான அணுகு முறையைத் தீர்மானிக்கிறது.

வளரும் பிள்ளைகளின் சிந்தனைகளைச் சீரழிக்கின்ற தொலைக்காட்சி, இணையம், கைத்தொலைபேசி இவற்றினூடாக வரும் பாலியற் பிறழ்வுக் காட்சிகள் என்பனவெல்லாம் சேர்ந்து கொண்டு இப்போது சிந்தித்திருக்கிற ஒருவரை 'விட்டு விடுதலையான' நிலைமையின் சாதகத் தன்மை யோடிணைந்து ஒட்டுமொத்தமான சமூகச் சீரழிவுக்கான விதைகளைத் தூவி வருகின்றன.

மூத்தோர் சமூகம், பெற்றோர், பொறுப்புள்ள ஆசிரியர்கள், கல்விசார் சிந்தனையாளர்கள் எல்லோரும் மிகவும் சிரத்தையோடு கவனம் கொள்ள வேண்டிய நிலைமை இது. விழிப்பாயிருப்போம்!

**ந.சத்தியபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச லயன்ஸ் கழகம்

## மாவட்டம் 306 'பி 1' இலங்கை

## 6 ஆவது வருடாந்த மாநாட்டு சிறப்புமலர்

### ஆளுநரின் எண்ணக்கரு



சகலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 306பி 1 மாவட்டத்தின் 6ஆவது வருடாந்த மாநாடு மாவட்டத்தைச் சேர்ந்த லயன் உறுப்பினர்கள், லயன் சீமாட்டிகள், லியோக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெறுகின்றது. வருடாந்த மாவட்ட மாநாடு எமது மாவட்டத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தீர்மானங்களை எடுக்கும் பெறுமதிமிக்க சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. அதற்கும் மேலாக 2011 - 2012ஆம் ஆண்டுக்கான தலைமையை அளிக்கக்கூடிய புதிய தலைவர்களைத் தெரிவுசெய்யும் கடமையும் நிறைவேற்றப்படும்.

நடப்பு ஆண்டில் எமது மாவட்டம் செயற்பாடுகள் நிரம்பிய ஆண்டாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. எமது கழகங்கள் நலிந்தோருக்கு உதவும் வகையில் அளப்பரிய சேவைத் திட்டங்களைச் செயற்படுத்தின.

கொந்தளிக்கும் கடலில் தத்தளிக்கும் கப்பலுக்குக் கரையிலுள்ள கலங்கரை விளக்கம் எப்படியோ அவ்வாறே லயன் உறுப்பினர்களாகிய நாமும் எமது சமூகத்திலுள்ள நலிவுற்றோருக்கு உண்மையான நம்பிக்கை ஒளிக்கீற்று ஆக விளங்கி கவனத்துடனும் கரிசனையுடனும் கூடிய உதவியையும், வசதியையும் அளித்து வருகின்றோம். பார்வைக்கு முதலிடம் என்ற செயற்றிட்டம் உலகம் முழுவதுமுள்ள லயன் உறுப்பினர்களுக்கு தலையாய செயற்றிட்டமாகும். எமது மாவட்டத்தைச் சேர்ந்த லயன் உறுப்பினர்கள் குணமாக்கக்கூடிய பார்வையின்மையை ஒழிப்பதற்கான விளிவெண்படலம் நீக்கும் 1700 சத்திரசிகிச்சைகளைச் செய்வித்துள்ளனர். அவர்கள் பல்லாயிரக்கணக்கான நோயாளர்களைப் பரிசோதித்து 10,000 இற்கும் மேற்பட்ட அளவிட்ட மூக்குக் கண்ணாடிகளைத் தேவைப்பட்டவர்களுக்கு வழங்கியுமுள்ளனர். நோயாளிகளின் பலதரப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் சிகிச்சை அளிக்கும் பல்லினச் சுகாதார முகாம்கள் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் நடாத்தப்பட்டுள்ளன. நீரிழிவு அறிவூட்டல் கருத்தரங்குகள் விலைமதிக்க முடியாதவைகளாக அமைந்தன. ஏனெனில் பரிசோதிக்கப்பட்டவர்களுள் பலருக்கு தாம் நீரிழிவு வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதே தெரியாது. வீடுகள் அமைக்கப்பட்டுத் தேவையானவர்களுக்கு கழகங்களால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஏழைகளுக்குச் சமைத்த உணவும், உலர் உணவும் வழங்கப்பட்டன. ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு பல சுயதொழில் முயற்சிகளை ஆரம்பித்துக் கொடுத்துள்ளோம். எமது லயன்ஸ் மாவட்டம் யுத்தத்தால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட வடபிராந்தியத்தை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பிரதேச மக்களுக்கு உதவும் முகமாகப் பல சேவைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த வருடம் எமது மாநாட்டின் பிரதம விருந்தினராக சர்வதேசப் பணிப்பாளர் லயன் நரேந்திர பண்டாரியும் அவரின் இல்லத்தரசியான சீமாட்டி றஞ்சனாவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இந்த மாவட்ட மாநாட்டில் பங்குபற்றும் அனைவரையும் வரவேற்பதுடன் அது மறக்கமுடியாத ஓர் அனுபவமாக அமையவேண்டுமென்ற எனது அவாவையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**லயன் எஸ்.ஜெயவத்சலன் BMJF**
மாவட்ட ஆளுநர் 2010 – 2011
மாவட்டம் 306 B10

























(48,19,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் அதிகரிக்கும் தற்கொலைகள்

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலங்களாக அதிகரித்துவரும் தற்கொலை மரணங்கள் எல்லோர் மனங்களிலும் அச்சத்தையும் பய உணர்வையும் தோற்றுவிக்கின்றன.

தற்கொலைச் சம்பவங்களானது மரணத்தில் முடிவடைவதாலும் தற்கொலை புரிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தற்கொலை மரணங்களைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

தற்கொலைகள், கொலைகள், கொள்ளைகள், களவு, கற்பழிப்பு, வன்புணர்ச்சி, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், குடும்பப் பிரச்சினைகள், வேண்டத்தகாத கர்ப்பங்கள், சிசு கொலைகள், போதைப்பொருள் பாவனைகள் என்பன அண்மைக் காலங்களில் போருக்குப் பின்னரான சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன.

யுத்தம் நிகழும் காலங்களில் பொதுப் பிரச்சினைகளில் மக்கள் அதிகம் கவனம் செலுத்தி வந்தனர். ஆனால், யுத்தத்தின் பின்னரான நிலையில் தனிநபருடைய பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. எனவே தான் நான்கு மாதங்களில் 45 தற்கொலை மரணங்கள் யாழ். குடாநாட்டில் நிகழ்ந்துள்ளன.

மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம், காணி வாங்குதல், வீடு கட்டுதல், பொருளாதாரத்தை உயர்த்துதல், தொழில் மற்றும் கல்வி போன்றவற்றில் போட்டிகள் அதிகரிக்கப்பட்டமை, தொழில்நுட்ப வளர்ச்சி, கைத்தொலைபேசிகளின் தவறான பாவனைகள் இன்னோர் வகையில் மன அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறான நிலையில் பல நெருக்கீடுகளுக்கு தனிமனிதன் முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறாக காலவேக மாற்றங்கள் உள நலனில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமை, அந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியாமையால் தற்கொலை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான விடயங்களில் இருபாலாரும் ஈடுபட்டு வருகின்றனர். இளைய வயதினரே அதிகமாக ஈடுபடுகின்றனர். இதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் விதி விலக்கல்ல. இதனால் எமது சமூகத்தின் வளங்களை இழந்து விடுகிறோம்.

தற்கொலை என்றவுடன் தூக்கிலிட்டு தொங்குவதையே அநேகர் மனங்களில் கொண்டிருப்பதனால் கொலை செய்யப்பட்ட பின்னர் சுருக்கிட்டு தூக்குமாட்டி தொங்கவிட்டு தற்கொலை என காட்ட முயற்சிக்கும் விடயங்களையும் காணக்கூடியதாகவுள்ளன.

இவ்வாறான முயற்சியில் ஈடுபடுகின்றவர்களின் மனநிலையைப் பார்த்தால் தனிமையை நாடுபவர்களாகவும், தனிமையான சந்தர்ப்பங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறானவர்கள் தமது எண்ணங்களை ஏனையவர்களுக்குத் தெரிவிப்பதும் குறைவாக உள்ளது. இவர்கள் சிறு உணர்வுகளின் தாக்கங்களுக்குப் பாதிக்கப்படுபவர்களாகவும் சிலர் தமது உடலைக் காயப்படுத்துபவர்களாகவும் காணப்படலாம்.

தற்கொலை முயற்சியில் இருந்து பிழைத்தவர்கள் அல்லது காப்பாற்றப்பட்டவர்களில் அநேகமானவர்கள் இள வயதினராகவும் இவர்கள் காதல் தோல்வி, பரீட்சையில் சித்தியடையாமை போன்ற உணர்வு ரீதியான தாக்கங்களுக்கு இலகுவில் ஆளாகி விடுகின்றனர். இதனால் இவர்களின் சிந்தனையில் மாறுதல்கள் ஏற்பட்டு, இந்த மாறுதல்கள் அசாதாரண நிலையான தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். போரால் ஏற்பட்ட மனக் காயங்கள் ஆறாமை, குடும்ப பிணக்குகளால் எழும் வன்முறைகளால் கடும் கோபத்துக்கு ஆளாகுதல், அன்புக்குரியவரின் இழப்பை ஈடு செய்ய முடியாமை, தீராத உடல்நோய், கடுமையான மனச்சோர்வு மற்றும் மதுபோதைப் பொருள் பாவனையின் தீவிரத் தன்மைகளும் இதனை அதிகரிக்கச் செய்கின்றன.

டாக்டர் அ.பிறிற்ரோ டக்ளஸ்

இவ்வாறான உளநல பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு உளநல சேவைகள் அவசியமாகின்றன. இருப்பினும் உளசமூக செயற்றிட்டங்களை சமூகங்களிடையே செயற்படுத்தப்படாமை. தகுதி வாய்ந்த உளவளத் துணையாளர்களின் பற்றாக்குறை மற்றும் உளவியல் நிபுணர் இல்லாமை என்பன இதற்கான பின்னடைவுகளாகி விடுகின்றன. இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து உளநல மருத்துவ சிகிச்சையாளர்களை வரவழைத்து ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ். போதனா வைத்தியசாலை முன்வந்துள்ளது.

## மீள் பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டு வரும் அபிவிருத்தி கற்கைநெறி, குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறி, பிராந்தியத் திட்டமிடல் கற்கைநெறி ஆகிய கற்கைநெறிக்குரிய விசேட மீள்பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இப் பரீட்சைக்கு தகுதியானவர்கள் பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசியை நாளை மறுதினம் திங்கள் முதல் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ம)




## நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணமான வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல்

சண்டிலிப்பாய், மே 14

மானிப்பாயில் டெங்கு நோய் தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய பொருள்களை வைத்திருந்த இரு வர்த்தகர்கள் மீது சண்டிலிப்பாய் சுகாதாரப் பிரிவினால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நவாலிக் கிராமத்தில் கொழும்பில் இருந்து வந்த இருவர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளானதாக இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையைச் சேர்ந்த பூச்சியியல் ஆய்வு நிபுணர்கள் மானிப்பாய், நவாலிப் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இவர்களால் மானிப்பாயில் மேற்கொண்ட ஆய்வின் போது இரு இரும்புத் தொழிற்சாலைகளில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே சுகாதாரப் பிரிவினர் இரு வர்த்தகர்கள் மீதும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை ஆய்வாளரின் அறிக்கையைத் தொடர்ந்து முன் எச்சரிக்கை நடவடிக்கை டெங்கு நோயாளர் இனங்காணப்பட்ட நவாலிப் பிரதேசத்தில் புகையூட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (எ-115)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் இரு குண்டு வெடிப்புகள் 69 பேர் பலி, வாகனங்கள் சின்னாபின்னம்

இஸ்லாமாபாத்,மே 14

வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள துணை நிலை இராணுவப் பயிற்சி மையத்தில் நேற்று பயங்கரக் குண்டு வெடித்ததில் 69 பேர் இறந்துள்ளனார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முதல் குண்டு மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படை நபரால் வெடிக்க வைக்கப்பட்டது. இரண்டாவது குண்டு வெடிப்பு ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு மூலம் ஏற்பட்டது எனத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தமாதத் ஆரம்பத்தில் அல்குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க சிறப்புப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இந்த தாக்குதலை நடத்தி உள்ளோம் என பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

பயிற்சி முடிந்து வாகனத்தில் புதிய வீரர்கள் அமர்ந்து இருந்த போது குண்டு வெடிப்புகள் ஏற்பட்டன. குண்டு வெடிப்பில் இறந்த 65 பேர் துணை ராணுவ நிலையத்திற்கு புதிதாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். மிகச்சிறிய அளவில் பொது மக்களும் இறந்துள்ளனர் என அதிகாரிகள் கூறினர்.

குண்டு வெடிப்பல் காயம் அடைந்து இரத்த வெள்ளத்தில் துடித்த வீரர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். குண்டு வெடிப்பு பகுதியில் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

பெஷாவரின் வடமேற்கில் 35 கி.மீ தொலைவில் உள்ள சாபகதர் பகுதியில் இரண்டாவது குண்டு வெடிப்பு நடந்தது. இந்த இடம் ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே உள்ளது. குண்டு வெடிப்பில் வாகனங்களும் சேதம் அடைந்தன.



மியான்மர் நாட்டுக்குச் சென்றுள்ள ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான்கி மூனின் சிறப்புப் பிரதிநிதி விஜய் நம்பியார்(வலது) தலைநகர் யாங்கூனில் எதிர்கட்சித் தலைவர் ஆங்சான் சூயியை சந்தித்தார்.

# சிரியா இராணுவத்தினர் சூடு; சிறுவன் உட்பட 18 பேர் பலி

சிரியா இராணுவம் நடத்திய தாக்குதலில் 8 வயது சிறுவன் உள்பட 18 பேர் உயிரிழந்தனர் என மனித உரிமை மீறல் தடுப்பு அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் வசிக்கும் இடங்களின் மீது சிரியா ராணு வம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

1982ம் ஆண்டு ஆஸத் தந்தை ஹபீஸ் அகமது அதிபராக இருந்தபோது சன்னி முஸ்லிம்களை ஒழிப்பதற்காக இது போன்ற தாக்குதலை நடத்தினார். அதை நினைவுபடுத்தும் விதமாக இப்போதைய தாக்குதல் அமைந்ததாக தன்னார்வ தொண்டு அமைப்பினர் தெரிவித்தனர்.

அப்போது ஹமா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 10 ஆயிரம் முதல் 25 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இந்தச் சம்பவம் குறித்து சிரியாவில் உள்ள மனித உரிமை அமைப் பின் தலைவர் அமர் குராமி பேசுகையில், கடந்த புதன் கிழமை பீரங்கியால் நடத்தப்பட்ட தாக்குதலில் இவர்கள் உயிரி ழந்ததாகத் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் இதுவரை 770 பேர் கொல்லப்பட்டதாகவும் ஆயிரக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதுவரை சிறையில் உள்ளோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்துக்கும் அதிகம் என்றும் குராப கூறினார். மக்கள் அதிகம் வாழும் 3 பகுதிகளில் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயந்திரத் துப்பாக்கி மூலம் சுடுவது உள்ளிட்ட வெடிச் சத்தம் விடிய விடிய தொடர்ந்து கேட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதி முழுவதும் தொலைத் தொடர்பு வசதி மற்றும் மின் வசதியை அரசு துண்டித்துள்ளது.

இதன் மூலம் நகர்களை தனிமைப் படுத்தி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.

# விண்வெளித்துறைக்கு நிதி குறைப்பு பிரிட்டன் எம்.பிக்கள் கடும் எதிர்ப்பு

அறிவியல் மற்றும் விண்வெளித்துறையினருக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியை பிரிட்டன் அரசு குறைத்துள்ளது. இதற்கு எம்.பிக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகளில் விண்வெளி ஆராய்ச்சியில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றாக பிரிட்டன் திகழ்கிறது. தற்போது இத்துறைக்கு அளிக்கப்படும் நிதிக் குறைக்கப்படுவதன் மூலம் விண்வெளி ஆய்வாளர்கள் மற்றும் அணு விஞ்ஞானிகள் நிதி குறைப்பு நடவடிக்கையால் தங்களது ஆராய்ச்சியில் தேவையான ஆதார வளத்தை தேடுவதில் நெருக்கடி ஏற்படும் என்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி மற்றும் ஆய்வுத் துறையில் எதிர்காலத்தில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்பையும் இந்த நிதிக் குறைப்பு தடுக்கிறது. கடந்த இளவேனிற்கால செலவின ஆய்வில் அறிவியல் துறைக்கான நிதி அறிக்கையில் பெருமளவு நிதி குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 4 ஆண்டுகளுக்கு விண்வெளித்துறைக்கு மேற்கொள்ளப்படும் செலவினங்களில் 21 சதவீதம் குறைக்கப்படுகிறது. 2010 -11 ஆண்டில் அறிவியல் விண்வெளித்துறைக்கு பிரிட்டன் அரசு 100 மில்லியன் பவுண்ஸ் ஒதுக்கீடு செய்தது.

2014-15 ம் ஆண்டு காலகட்டத்திற்கு இந்தச் செலவினத் தொகை 79 மில்லியன் பவுண்ஸ் ஆக விண்வெளி ஆராய்ச்சித்துறைக்கு குறைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவேயுள்ள நிதி அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியில் 21 சதவீதம் தற்போதைய ஒதுக்கீட்டில் விண்வெளித்துறைக்கு குறைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுக்கு ஆதரவு தரும் ரஷ்யா

அமெரிக்காவின் எத்தகைய தீர்மானத்துக்கும் நாங்கள் ஆதரவு தருகின்றோம் என்று ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ரஷ்ய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

கடந்த 2001 இல் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட போது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இயற்றிய அமெரிக்கா தன்னை பாதுகாத்து கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கலாம் என்ற தீர்மானத்துக்கு நாங்கள் ஆதரவு அளித்தோம்.

அதன் படி ஒசாமாவை கொல்ல அமெரிக்காவுக்கு உரிமை உண்டு. ஆனால் அமெரிக்கா, பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் நடத்திய அதிரடி நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா விளக்க வேண்டும்.

பயங்கர வாதத்துக்கு எதிரான நடவடிக்கை சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றார்.





எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஆசிரிய ஆலோசகராக (ISA) பதவி உயர்வு பெற்றுச்சென்ற

மு.கேசவன்

அவர்களும் சகுந்தலா (ஆசிரியை, யா/தியாகராஜா ம.ம.வி) அவர்களும் நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் சீரணி திருக்கல்யாண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையவுள்ளனர். அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/காரை ஊரி அ.மி.த.க வித்தியாலயம், காரைநகர்.
(48,20,22)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2013, 12
*GEN.ENGLISH
M.KINGSTAN B.A
G.RANGIT (HNDE)
*G.A.Q- TAMIL (Ja)
V.K நாதன் B.A
*Gr 1முதல் O/Lவரை
*ENG MED 6 To 11

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான கர வருடம் வைகாசி மாதம் முதலாம் நாள் (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.59 மணி முதல் 11.30 மணிவரையுள்ள கடக இலக்கினமும் சித்திரை நட்சத்திரமும்
சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி சிவராசா தம்பதியரின்
செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
லிங்கரூபன்
அவர்களுக்கும்

திரு.திருமதி நாகராசா தம்பதியரின்
செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
அஜந்தா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "இணுவில் சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத்தில்" திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

திரு.திருமதி இ.சிவராசா குடும்பத்தினர்
31/1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி பொ.நாகராசா குடும்பத்தினர்
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(40)(4171)

### திருமண சேவை

*80 இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 10½ பாவ முடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படிந்த அழகான மணமகள் தேவை.
*78 இல் பிறந்த, 12 இல் செவ்வாய் 38 பாவமுடைய, கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படிந்த அழகான மணமகள் தேவை.
* 71 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 45 பாவமுடைய ,லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
* 84 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் A.C.M.A முடித்து லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
* 81 இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 12¼ பாவமுடைய B.C.A முடிந்த லண்டன் பிராஜா உரிமை பெற்ற மணமகளுக்கு லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகன் தேவை.
*79 இல் பிறந்த, 4 இல் செவ்வாய் 54¼ பாவமுடைய ஜேர்மனி பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு ஜேர்மன், பிரான்ஸ் மணமகன் தேவை.
*70 இல் பிறந்த, 1 இல் செவ்வாய் 31½ பாவமுடைய ஜேர்மனி பிரஜா உரிமை பெற்ற மண மகளுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ மணமகன் தேவை.
மேலும் டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள், வர்த்தகர்கள், அரபு நாட்டில் பணி புரிபவர்கள், சைவ போசன மணமக்களும் பாவம் கூடியது குறைந்தது, செவ்வாய் பாவம் கூடியது. செவ்வாய் பாவமில்லாமல் பாவம் கூடிய மணமக்களும் வெளி நாட்டில் பிரஜா உரிமை பெற்ற மண மக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு: நாலக் கண்ணன் திருமண சேவை.
இல 171/7 மனோன்மணி அம்மன் கோவிலடி, நல்லூர்.
(4182) T.P: 0776070862

### காணி விற்பனைக்கு

நவாலி, அட்டகிரி கந்தசாமி கோயில் பின்வீதியில் (பாடசாலைக்கு முன்பாக) கிணற்றுடன் கூடிய 2½பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
(4177) T.P: 0214917181, 0770489638

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியில் தோன்றினார் கடாபி!

திரிப்போலி, மே.14

லிபியாவில் நேட்டோ படைகளின் கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து கடாபி பற்றிய தகவல்கள் வெளியாகாமல் இருந்தன. இந்நிலையில் திரிபோலியில் உள்ள ஒரு ஹோட்டலில் பழங்குடியினத் தலைவர்களை கடாபி சந்தித்து பேசியது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

லிபியாவில் கடாபியை எதிர்த்து கடந்த மூன்று மாதங்களாக கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக நேட்டோப் படைகள் பயங்கர தாக்குதல் நடத்தி வருகின்றன.

கடந்த மாதம் 30ஆம் திகதி திரிபோலியில் உள்ள கடாபியின் வீடு மீது நேட்டோ படைகள் நடத்திய பயங்கர தாக்குதலில் கடாபியின் இளைய மகன் மற்றும் மூன்று பேரக் குழந்தைகள் பலியாயினர். இந்நிலையில் கடாபி உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பது குறித்த சர்ச்சை நீடித்து வந்தது.

சர்ச்சையைத் தீர்க்கும் வகையில் கடந்த புதன்கிழமை திரிபோலியில் உள்ள ஒரு ஹோட்டலில் பழங்குடியினத் தலைவர்களைக் கடாபி சந்தித்துப் பேசியது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

அல் ஜமாஹிரியா என்ற தொலைக்காட்சியில் பழங்குடியினத் தலைவர்களுடன் கடாபி உரையாடுவது போன்ற காட்சி காட்டப்பட்டது. அப்போது, ''லிபியன் பழங்குடியினரின் பிரதிநிதிகள் நாம் என்பதை உலகிற்கு காட்டுவோம்'' என்று கடாபி கூறினார். பதிலுக்கு கூட்டத்தில் இடம்பெற்ற பழங்குடியினப் பெரியவர் ஒருவர், ''நீங்கள் வெற்றி பெறுவீர்கள்'' என்று கடாபியைப் பார்த்து கூறினார்.

கூட்டத்தை முன்னிட்டு ஹோட்டலின் சில அறைகள் 'சீல்' வைக்கப்பட்டதாக செய்திகள் வெளியாயின. ஹோட்டலில் கடாபியின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதை அறிந்த நேட்டோ படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தினர். இதில் ஹோட்டலின் ஜன்னல்கள் பழுதடைந்தன.

# விமானத்தைத் தாக்கியது மின்னல்; தப்பிப் பிழைத்தனர் பயணிகள்

லண்டன், மே.14

லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் தரையிறங்கத் தயாராகிக் கொண்டிருந்த ஏர் பஸ் 380 ரக விமானம் திடீரென மின்னலில் சிக்கி அதிர்ஷ்ட வசமாகத் தப்பிப் பிழைத்தது.

பறந்து கொண்டிருந்த விமானத்தில் விமானியின் தலைக்கு மேலால் பாய்ந்த மின்னல் விமானத்தின் உடல் பகுதியெங்கும் பரவியது. இது அதி சக்தி மிக்க மின்சாரத்தையும் விமானத்தின் உடல் பகுதி முழுவதும் பாய்ச்சியுள்ளது.

துபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான இந்த விமானம் இந்த ஆபத்தைக் கடந்து ஹீத்ரு விமான நிலையத்தில் பத்திரமாகத் தரை இறங்கியது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது விமானத்தில் 500 பயணிகளும், விமான ஊழியர்களும் இருந்துள்ளனர்.

தென்மேற்கு லண்டனைச் சேர்ந்த கிறிஸ் டோஸன் என்ற படப்படிப்பாளர் இந்தக் காட்சியை அப்படியே படம் படித்துள்ளார்.

வானத்தில் மேகக் கூட்டம் அதிகரித்ததும் மின்னல் வெட்டும் காட்சியை இயல்பாகப் படம் பிடிப்பதற்காக தனது கமெராவைத் தயார் நிலையில் வைத்திருந்த போதே எதிர்பாராத விதமாக இந்தக் காட்சி அதில் சிக்கிக் கொண்டது.

உலகின் மிகப்பெரிய வர்த்தக சேவை விமானமான ஏர்பஸ் 380 இவ்வாறான மின்னல் தாக்குதலில் இருந்து தப்பியது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று விமானத் துறை நிபுணர்கள் சர்வ சாதாரணமாகக் கூறுகின்றனர்.



சுவிற்சர்லாந்து நாட்டுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஸ்பெயின் நாட்டு அரசர் ஜுவான் கார்லோஸை (இடது) ஜுரிச் நகரில் சுவிஸ் அதிபர் மிச்செலினி கால்மி (வலது) வரவேற்றார்.

# ஒபாமாவின் பாட்டி மீது அல்குவைதா குறி

ஜோஹலஸ் பேர்க், மே.14

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பாட்டி உறவுமுறையான ஒருவருக்கு ஆபிரிக்க அல்குவைதா பிரிவு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இதையடுத்து கென்யாவில் உள்ள அவரது வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சோமாலியாவை அடிப்படையாகக் கொண்ட அல்கொய்தா பிரிவான அல் ஷபாப் அமைப்பு, ஷாரா ஒபாமாவுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதால் அவரது வீட்டைச் சுற்றிலும் 24 மணி நேரமும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக கென்ய பொலிசார் தெரிவித்தனர்.

பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு பழிவாங்கும் நடவடிக்கையாக தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்தில் ஒபாமா பாட்டியின் வீட்டுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. தற்போது அல் ஷபாபன் எச்சரிக்கை வெளியானதில் இருந்து பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர் வீடு உள்ள கிராமத்துக்கு ரோந்துப் பணியில் ஈடுபட போதுமான அதிகாரிகள் உள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் 88 வயதான ஒபாமாவின் பாட்டி, பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்கள் குறித்து கவலைப்படவில்லை. கூடுதல் பாதுகாப்பு குறித்தும் அவர் கவனத்தில் கொள்ளவில்லை.

''அச்சுறுத்தல் எதுவும் எந்தவிதத்திலும் என்னுடைய வாழ்க்கையைப் பாதிக்காது என கூறிய ஷாரா ஒபாமா அச்சுறுத்தலால் என்னுடைய நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியாது. கூடுதல் பாதுகாப்பு வழங்க அரசு முடிவெடுத்தால் அதற்கு நாங்கள் உடன்படுகிறோம்'' என்று தெரிவித்தார்

# மனித உரிமை மீறல் குறித்த கருத்தால் ஹிலாரி-சீன அமைச்சர் இடையே முறுகல்

மனித உரிமை குறித்து சீனா அமெரிக்கத் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் எரிசக்தி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் அமெரிக்கா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், சீனாவின் சார்பில் அதன் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் சாங்சிஜூன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் பேசிய ஹிலாரி ஆசிய கண்டத்தில் சீனா பொருளாதாரத்தில் வளர்ந்த ஒரு நாடாக உள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

ஆனால் அங்கு வசிக்கும் மனிதர்களுக்கு அடிப் படை உரிமைகள் குறிப்பாக மனித உரிமை என்பது மறுக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஆபிரிக்கா நாடுகளில் காணப்படும் பிரச்சினைகளில் சீனா எவ்வித கருத்துகளும் தெரிவிக்காமல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

ஹிலா ரியின் இந்த கருத்தை மறுத்துப் பேசிய சீன வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மனித உரிமை மறுக்கப்படுகிறது என்பது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு.

திபெத் நாட்டிற்கு வருகை தந்து அங்கு காணப்படும் மனித உரிமையை ஹிலாரி காண வேண்டும் எனவும், இது ஒரு உதாரணம் மட்டுமே எனவும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை குறித்து இரு நாட்டுத் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல்-உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரு பில்லியன் உணவுப் பொருள்கள் வீண்

நியூயோர்க்,மே14

வருடம் தோறும் உணவு உற்பத்தியில் 1.3 பில்லியன் தொன் உணவு பொருள்கள் வீணா வதாக ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதுள்ள சூழ்நிலையில் குறைந்த அளவு கிடைத்து வரும் இயற்கை வளங்களே உள்ளதால், உணவு வீணாவதைக் குறைக்க வேண்டும். மக்களுக்கு உணவு வழங்க உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என கூறியுள் ளது. உலகின் உணவு உற்பத்தி யில் பாதியளவு உணவு பொருள்கள் வீணாகி வருகின்றன. தற்போது உலகில் 925 மில்லியன் மக்கள் பசியால் அவதிப்பட்டு வருகின்றனர். வளரும் நாடுகளில் போதிய உள்கட்டமைப்பு இல்லாதது மற்றும் விவசாய பாதிப்பு போன்ற காரணங்களினால் உணவு வீணாவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் நுகர்வோர்கள் வருடம் தோறும் 95 முதல் 115 கிலோ கிராம் உணவு பொருள்களை வீணாகி வருகின்றனர் என்றுள்ளது.

# பில்லேடனின் உயிருக்கு அமெரிக்கர்கள் விலைகொடுத்தேயாக வேண்டும்

பின்லேடனை கொன்றதற்கான விலையை அமெரிக்க மக்கள் கொடுத்தாக வேண்டும் என்று அல்குவைதா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி அல்கொய்தாவின் அதிகாரபூர்வ இணைய தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில்கூறியிருப்பதாவது: பின்லேடனை அமெரிக்கா கொன்று மிகப்பெரிய தவறு செய்துவிட்டது. இதன் மூலம் மாபெரும் பாவத்தை சம்பாதித்து விட்டது. இதற்கான விலையை அமெரிக்க மக்கள் கொடுத்தாக வேண்டும். அமெரிக்க அதிபர் ஒபாமா தன்னை ராணுவம் காப்பாற்றும் என்று நினைக்கிறார். ஆனால் எங்களுடைய தாக்குதலில் இருந்து அவரை யாரும் காப்பாற்ற முடியாது. இதற்காக முஸ்லிம்கள் திட்டமிட்டு தாக்குதல் நடத்த வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபுதீபகற்ப அல்குவைதாவின் தற்போதைய தலைவர் நசிர் அல் வாகிஷி இணைய தளத்தில் வெளியிட்டுள்ள அறிக் கையில், ''ஒசாமாவை கொன்ற தோடு விடயம் முடிந்துவிட்டது என்று மட்டும் அமெரிக்கர்கள் கருதி விட வேண்டாம். அவரைக் கொன்றதற்காக, யூதர்களையும் [illegible] என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஒசாமாவின் சாவை கொண்டாடி மகிழ விரும்பாத அமெரிக்கர்கள்

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனின் இறப்பை தாங்கள் கொண்டாட விருப்பம் இல்லை என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பப்ளிக் ரிலீஜன் ரிசர்ச் இன்ஸ்ட்டியூட் சார்பில் நடந்த கருத்துக்கணிப்பின் முடிவுகள் தற்போது வெளியி டப்பட்டுள்ளன.

பைபிளில் தெரிவித்துள்ளபடி எதிரியின் மரணத்தை வெற்றி விழாவாகக் கொண்டாடக் கூடாது என்று 60 சதவீத அமெரிக்கர்கள், ஒசாமாவின் இறப்பை கொண்டாடுவது தவறு என்று தெரிவித்துள்ளனர்.

எனினும் இஸ்லாம் மரபை மீறியவர் ஒசாமா என்றும், இதனால் அரவது இறப்பை கொண்டாடுவது தவறு அல்ல என்றும் ஒரு தரப்பினர் தெரிவித்துள்ளதாகவும் அந்த முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 மே 2011 சனிக்கிழமை

# இனப்படுகொலை நாளாக மே 18 ஐ ஐ.நா. பிரகடனப்படுத்த வேண்டும்

## விடுதலைச் சிறுத்தைகள் வேண்டுகோள்

இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிகழ்ந்த மாபெரும் இனப்படுகொலை என்கிற வகையில் இலங்கை அரசு தமிழின அழிப்பை நிறைவு செய்த நாளான மே 18ஆம் நாளை சர்வதேச இனப்படு கொலை நாளாக ஐ.நா. பேரவை அறிவிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இறுதிக்கட்ட நிகழ்வுகள் அரை நூற்றாண்டு கால ஆதிக்கத்தின் தொடர்ச்சியேயாகும். முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட தமிழின அழிப்பானது ஒரு மாபெரும் இனப்படுகொலையேயாகும்.

எனவே இலங்கை அரசுக்கு எதிராக அறவழியில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இதனை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் தமிழகம் தழுவிய அளவில் மே 18ஆம் நாள் பிரச்சார இயக்கத்தை மேற்கொள்கிறது.

இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்து அறவழியில் கால்நூற்றாண்டு காலம் போராடியும் நீதி கிட்டாத நிலையில் ஈழத் தமிழர்கள் ஆயுத வழிப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டனர்.

ஆயுதவழிப் போராட்டமும் மக்களைப் பாதுகாப்பதற்கான தற்காப்புப் போராட்டமாகத் தொடங்கி பின்னர் விடுதலைப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றது. இந்தப்போராட்டம் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நடைபெற்று உலகின் கவனத்தைத் திருப்பியது. எனினும் ஆதிக்க வெறிபிடித்த ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டு முயற்சியில் ஈழ விடுதலைப் போராட்டம் தற்போதைய நிலையில் நசுக்கப்பட்டுள்ளது.

மொழி, இன அடிப்படையிலான ஜனநாயகப் போராட்டங்களை அங்கீகரிக்காத நிலையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றன. இந்திய அரசும் தமிழின விரோதக்கொள்கையை தமது வெளியுறவுக் கொள்கையின் அங்கமாகவே ஏற்று வெளிப்படையாகச் செயற்பட்டு வருகிறது.

உழைக்கும் மக்கள் ஜனநாயகத்திற்கு எதிரான இந்தியா, சீனா போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் துணையோடு கடந்த 2009 மே மாதத்தின்போது சிங்கள இனவெறி அரசு ஈவிரக்கமற்ற இனப்படுகொலையை அரங்கேற்றியது. கடைசி ஐந்து நாள்களில் சுமார் ஐம்பதாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தது.

இந்தநிலையில் ஐ.நா. பேரவையால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இரு ஆண்டுகள் கழிந்த நிலையில் ஈழத்தில் போர்க் குற்றம் நடந்துள்ளதென அறிக்கை வெளியிட்டுள்ளது.



இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறாக போர்க் குற்றம் செய்துள்ளனர் என்று இரு தரப்பின் மீதும் குற்றம் சாட்டியுள்ளது. இதனால் சர்வதேச நீதிமன்றத்தில் இருதரப்பாரும் விசாரிக்கப்பட வேண்டும் என்கிற நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக அறவழியில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விடுதலைச்சிறுத்தைகள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இதனை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் தமிழகம் தழுவிய அளவில் மே 18ஆம் நாள் பிரச்சார இயக்கத்தை மேற்கொள்கிறது என்று அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆப்கனுக்கு 500 மி.டொலர்; இந்தியா நிதியுதவி

ஆப்கனுக்கு அடுத்த சில ஆண்டுகளில் அந்தநாட்டு வளர்ச்சிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்கவுள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் சென்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங் காபூலில் அந்தநாட்டு அதிபர் ஹமீத் கர்சாயுடன் இணைந்து கூட்டாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது மன்மோகன் சிங் கூறியதாவது:

ஆப்கனுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க இந்தியா உறுதி கொண்டுள்ளது.பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ் தான் இணைந்து செயற்பட வேண்டும். பயங்கரவாதத்தை அனைத்து நாடுகளும் எதிர்த்துப் போராட அமைதி மற்றும் அதிக பாதுகாப்புத் தேவைப்படுகிறது.

ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அபோதாபாத்தில் ஒசாமா பின்லேடன் நீண்ட காலம் வசித்து வந்தமை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றார் அவர்.

# அயோத்தி ராமர் பூமிப் பிரச்சினைக்கு நீதிமன்று மூலம் தீர்வு காணமுடியாது

## ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவிப்பு

சேலம், மே 14

அயோத்திப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்காக அனைத்துத் தரப்பு பிரதிநிதிகளுடனும் இன்று பேச்சு நடைபெற உள்ளது என காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

சேலம் மரவனேரியில் உள்ள சங்கர மடத்துக்கு கடந்த புதன் கிழமை வந்த அவர், சிறப்புப் பூஜைகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு :

அயோத்தி விவகாரம் சுலபமாகத் தீர்க்கக் கூடியது அல்ல. வாஜ்பாய் ஆட்சியில் இந்து அமைப்புகளையும், சன்னி வக்பு வாரியத்தையும் அழைத்துப் பேச்சு நடத்தப்பட்டது. ஆனால், என்ன காரணத்தாலோ பேச்சில் கலந்து கொண்டவர்கள் மறுநாளே நீதிமன்றத்தை நாடினர்.

இதையடுத்து இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அதன் பின்னர்தான் பிரச்சினை பெரிதாக உருவெடுத்தது. ஒருவேளை நீதிமன்றத்தின் மூலம் இறுதித் தீர்ப்புக் கிடைத்தாலும் அது என்றும் நிலைத்திருக்காது.

அயோத்திப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண இப்போது மீண்டும் முயற்சி நடைபெறுகிறது.

ஏற்கனவே நடைபெற்ற பேச்சின் போது ஏற்பட்ட பழக்கத்தை வைத்து இந்த முறை இஸ்லாமிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களே எங்களை பேச்சுக்கு அழைத்துள்ளனர்.

இன்று அயோத்தியில் மடத்துக்கு அருகில் உள்ள கட்டடத்தில் இந்த பேச்சு நடைபெறுகிறது.

இதில் சன்னி வக்பு வாரியத்தைச் சேர்ந்தவர்களும், இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள் கின்றனர். அனேகமாக இந்தப் பேச்சில் இறுதித் தீர்வு எட்டப்படும் என்று எண்ணுகிறேன். அயோத்தி பிரச்சினையில் விட்டுக்கொடுக்கத்தயாராக இருக் கின்றனர் என இஸ்லாமிய அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியா முழுவதும் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்துக் கோயில்களில் வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், அதே தொல்லியல்துறையின் கட்டுப் பாட்டில் உள்ள மசூதிகளில் வழிபாடுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அயோத்திப் பிரச்சினை தொடர்பாக இன்று நடைபெற உள்ள பேச்சியின் இறுதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப் படும். பொதுவாக சமயம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்தை அணுகாமல் பேசித் தீர்ப்பதே நல்லது.

தமிழகத்தில் அரசின் கட்டுப் பாட் டில் உள்ள இந்து சமய அற நிலையத்துறையை தன்னிச்சையாகச் செயற்படக் கூடிய அமைப்பின் கையில் ஒப்படைக்க வேண்டும். அந்த அமைப்பில் ஒய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், நீதிபதிகள் இருக்கவேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நிலம் கையகப்படுத்தல் மசோதா மத்திய அரசால் விரைவில் அறிமுகம்

## சிதம்பரம் தெரிவிப்பு

புதுதில்லி, மே.14

உத்தரப் பிரதேசத்தில் நிலம் கையகப்படுத்துவதில் எழுந்துள்ள சர்ச்சைகள் காரணமாக நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரில் இதுதொடர்பாக ஒரு மசோதாவை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் நிலம் கையகப்படுத்தும் விவகாரம் தொடர்பாக அதிகளவான கிராமங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அங்கு சட்டம், ஒழுங்கு நிலைமை மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. விவசாயிகளின் போராட்டங்களை முதல்வர் மாயாவதி சரியான வழியில் கையாளவில்லை.

எனினும் விவசாயிகளின் போராட்டத்தால் மோதல்கள் நடைபெற்று வருவதன் எதிரொலியாக அங்குள்ள நிலைமையை ஆய்வுசெய்ய மத்திய குழுவை அனுப்பும் திட்டம் இல்லை என அவர் கூறினார்.

நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக புதிய சட்டம் கண்டிப்பாகத் தேவை. அரசு ஒரு சட்டத்தைத் தயாரித்துள்ளது. அதில் உரிய இழப்பீடுகள், மறுவாழ்வு மற்றும் பல விடயங்கள் உள்ளன. என அவர் தெரிவித்தார்.


## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில்.

தொடர்புக்கு : 0777111400

## வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.


## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி சி.சகுந்தலாதேவியின் அன்புத் தந்தை

**வல்லிபுரம் சின்னமணி**

அவர்களின் திடீர் மரணத்தினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இயக்கச்சி.

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 868 திகதி: 12.05.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| C | 32 | 37 | 57 | 61 | 56 |

| கூட்டு | | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 13,949,997.50 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 309 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15286 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 213528 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 31839 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**21,403,937.50**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**10,000,000.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## மரண அறிவித்தல்

*பொன்னையா அருளானந்தம்*
(ஓய்வுபெற்ற கணக்காளர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அருளானந்தம் 10.05.2011 செவ்வாய்க் கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் பொன்மணியின் அன்புக் கணவரும் அன்புருவேல், சர்ப்பா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரணீதரனின் மாமனும் காலஞ்சென்ற தவமணி மற்றும் யோகானந்தம், நவநீதம் (தேவமணி), சச்சிதானந்தம், புனிதமணி, கவின் செல்வம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110/2, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் 3 ஆவது தடவை முதல்வராகிறார் ஜெயலலிதா



தமிழக சட்டபேரவை தேர்தல் முடிவுகளின் முன்னணி நிலவரங்களின் அடிப்படையில் அ.தி.முக. 198 இடங்களில் அமோக வெற்றி பெற்று 3 ஆவது தடவையாக தமிழக முதல்வராகவுள்ளாார்.

இதேவேளை தி.மு.க., 36 இடங்களில் மட்டுமே வெற்றியைப் பெற்றுள்ளது.

தமிழக சட்ட மன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை நோக்கிச் சென்றுள்ள அதிமுக. கூட்டணி கட்சிகளின் தயவின்றி, அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கவுள்ளது.

மேலும் தி.மு.க., அமைச்சர்களான பெங்கலூர் பழனிச் சாமி, வீரபாண்டி ஆறுமுகம், தமிழரசி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உட்பட பலர் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

வாக்குகள் எண்ணும் பணி நேற்றுக் காலை 8 மணிக்கு வரலாறு காணாத பாதுகாப்புடன் ஆரம்பமாகியது.

234 தொகுதிகளிலும் கட்சிகளின் முன்னணி வெற்றி நிலைவரங்கள் வருமாறு:

தி.மு.க. கூட்டணியில் தி.மு.க. 119 தொகுதிகளில் 28 இடங்களிலும் காங்கிரஸ் 63 தொகுதிகளில் 6 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

அ.தி.மு.க. கூட்டணி தொகுதிகளில் அ.தி.மு.க. 160 தொகுதிகளில் 147 இடங்களிலும் தே.மு.தி.க. 41 தொகுதிகளில் 27 இடங்களிலும் வெற்றி பெற்று முன்னணியில் உள்ளன. இதற்கு முன்னதாக தமிழக சட்டப்பேரவைக்கு கடந்த மாதம் 13ஆம் திகதி ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தத்தேர்தலில் தி.மு.க அணியில் காங்கிரஸ், பா.ம.க, விடுதலை சிறுத்தைகள் கட்சி, கொங்கு முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக், மூவேந்தர் முன்னேற்றகழகம், பெருந்தலைவர் மக்கள் கட்சி ஆகியன இடம்பெற்றுள்ளன.

அ.தி.மு.க அணியில் தே.மு.தி.க, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, புதிய தமிழகம், அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகம், இந்திய குடியரசு கட்சி, பார்வர்ட் பிளாக், தமிழ் நாடு கொங்கு இளைஞர் பேரவை ஆகிய கட்சிகள் தேர்தலை சந்தித்தன. (வ)

# முதல்வர் பதவியில் இருந்து கருணாநிதி நேற்று ராஜிநாமா



சென்னை, மே.14

சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து முதல்வர் பதவியில் இருந்து கருணாநிதி நேற்று ராஜிநாமா செய்தார்.

ஆளுநர் பர்னாலாவிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்துள்ளதாகவும் அதை ஏற்றுக் கொண்டதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்தக்கட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்வரை முதல்வர் பதவியில் தொடருமாறு ஆளுநர் அவரிடம் கேட்டுக் கொண்டதாகவும் கூறியுள்ளார். (வ)

# மேற்கு வங்கத்தில் திரிணாமூல் தனித்து ஆட்சி 34 வருடகால கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்ந்தது




மேற்குவங்க மாநிலத்தில் சட்டபேரவைத் தேர்தலில் மொத்தம் 294 தொகுதிகளில் திரிணாமூல் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 215 தொகுதிகளில் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

34 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்த கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு இந்தமுறை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி மட்டும் 177 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளதால் அந்தக்கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் 33 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

மேற்குவங்கத்தில் ஒரு கட்சி தனித்து ஆட்சி அமைக்க 147 சட்டபேரவை உறுப்பினர்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது. இடதுசாரிகள் கூட்டணி 73 தொகுதிகளில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. (வ)

## அனுதாபம்........



ரேப்பரேலியில் விஷ வாயு தாக்கி இறந்தவர்களது குடும்பத்தினரை, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா சந்தித்து ஆறுதல் கூறினார்.

# விஜயகாந்த் ரசிகர்கள் கொதிப்பு; வடிவேலு வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளதால் வடிவேலு அதிர்ச்சியாகியுள்ளார். விஜயகாந்த் ரசிகர்களால் வடிவேலு வீடு தாக்கப்படலாம் என செய்தி பரவியது. அவர் வீட்டிலும் இல்லை எங்கு இருக்கிறார் என்றும் தெரியவில்லை.

வடிவேலு வீட்டில் பொலிஸ் பாதுகாப்பு அதிகளவில் வழங்கப்பட்டுள்ளது. விஜயகாந்த் ரசிகர்களுக்கும், நடிகர் வடிவேலுவுக்கும் ஏற்கனவே மோதல் இருந்து வந்தது.

இருதரப்பினரும் நீதிமன்றத்துக்கும் சென்றனர். சட்டமன்றத் தேர்தலிலும் மோதல் எதிரொலித்தது. தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக வடிவேலு பிரசாரத்தில் குதித்தார். கூட்டங்களில் விஜயகாந்தை கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

குடிகாரர் என்றும் விமர்சித்தார். தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து பேசினார். விஜயகாந்த் போட்டியிடும் ரிஷிவந்தியம் தொகுதிக்கும் சென்று அவரை திட்டித் தீர்த்தார். வடிவேலு பிரசாரத்தில் பெரும் கூட்டம் கூடியது. ஆண்களும், பெண்களும் குழந்தைகளுடன் திரண்டனர். தலைவர்களுக்கு இணையாக அவருக்கு கூட்டம் வந்தது. சுற்றுப்பயணம் முடிந்ததும் தி.மு.க. கூட்டணி நிச்சயம் வெற்றிபெறும் என்று கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# ஈழத் தமிழர்களைக் கைவிட்ட காங்கிரஸுக்கு தமிழக மக்கள் தகுந்த பாடம் கற்பித்தனர்

## 'தட்ஸ் தமிழ்' தகவல்

ஈழத்தமிழர்களைக் கைவிட்ட காங்கிரஸுக்கு தமிழ் மக்கள் தகுந்த பாடம் கற்பித்து விட்டனர் என்று பிரபல ஊடகமான 'தட்ஸ் தமிழ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழக அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய தோல்விக்கு காங்கிரஸ் கட்சி தள்ளப்பட்டுள்ளது. இதுவரை அ.தி.மு.க, தி.மு.க.வுடன் ஓசிச் சவாரி செய்தே ஆசனங்களை அள்ளி சொகுசாக இருந்து வந்த காங்கிரஸுக்கு இந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் கடுமையான பாடம் கற்றுக் கொடுத்துள்ளனர்.

அறந்தாங்கி உள்ளிட்ட 4 தொகுதிகளில் மட்டுமே முன்னணியில் உள்ளது. தி.மு.கவை கடுமையாக மிரட்டி, உருட்டி, ஸ்பெக்ட்ரம் ஊழலை வைத்து அரசியல் செய்து [illegible] லான தொகுதிகளைப் [illegible] போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி கடும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

அறந்தாங்கி தொகுதியில் காங்கிரஸ் வெற்றியீட்டினாலும் கூட அது அங்கு போட்டியிடும் திருநாவுக்கரசரின் சொந்த செல்வாக்குதான் காரணமாக இருக் [illegible] சயம் இதில் பங்கே இருக்காது.

மேலும் ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் செய்த கபட நாடகங்கள், போர்க்குற்றவாளி என ராஜபக்ஷவை ஐ.நா. குழு அறிவித்த பிறகும் கூட அவரைக் காப்பாற்ற காங்கிரஸ் மேலிடம் துடிப்பது என காங்கிரஸ் கட்சிக்கு எதிரான விடயங்கள் ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்தலில் கவிழ்த்து விட்டுள்ளது.

மேலும் உட்கட்சிப் பூசல், குழுக் கலவரங்கள், ஆளாளுக்கு நாட்டாமை, தங்கபாலுவின் தான் தோன்றித்தனம் ஆகியவையும் கூட காங்கிரஸுக்கு வேட்டு வைத்து விட்டது.

தங்கபாலு மயிலாப்பூரில் வேட்பாளராக நிற்கச்செய்த தகிடுதத்தனங்களும் காங்கிரஸாரையே கடுப்பாக்கி விட்டது. இத்தனையும் சேர்ந்துதான் நேற்று தேர்தல் முடிவுகள் காங்கிரஸை காலி செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ.நா. அலுவலகப் பதிவுகளில் திடுக்கிடும் தகவல்கள்:

# விசாரணைகளின்போது அலறல் சத்தங்கள்; மன அழுத்தம் காரணமாக பலர் தற்கொலை

## அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பலர் திரும்பிவரவில்லை

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் வன்புணர்வுச் சம்பவங்களை சர்வதேச முகவர்களும் பதிவு செய்ததோடு, மேற்படி சம்பவங்களைக் காவல்துறையினருக்கோ சர்வதேச ஈடுபாட்டாளர்களுக்கோ தெரிவிக்க வேண்டாம் என இடம்பெயர்ந்தோரை இராணுவத்தினர் எச்சரித்தனர்.

(55)

**(அ) விசாரணையின்றி மூடிய முகாம்களில் இடம்பெயர்ந்தவர்களைத் தடுத்து வைத்தல்**

154. யுத்த வலயத்தில் இருந்து வெளியேறும் பொதுமக்கள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் வியாபித்திருந்த 21 இடம்பெயர்ந்தோர் அமைவிடப் பின்னலில் இருத்தப்பட்டனர். அநேகமானோர் படிப்படியாக வவுனியாவுக்கு அருகில் இருந்த மெனிக்பாம் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு, உச்சக்கட்டத்தில் உலகின் ஆகக்கூடிய இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையான சுமார் 250,000 பேர்களை அது உள்ளடக்கியது.

155. மெனிக்பாம் மற்றும் ஏனைய இடம்பெயர்ந்தோர் அமைவிடங்கள் புறத்தொடர்பற்றவையாக முட்கம்பிகளினால் சூழப்பட்டு அங்கு இராணுவத்தினர் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக, வன்னியில் இடம்பெயர்ந்தோர் சனத்தொகை முழுமையாக தடுத்து வைக்கப்பட்டதோடு வெளியே செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பிரித்தெடுக்கும் நடவடிக்கைகள் முடியும்வரை மற்றும் வன்னிப் பிரதேசத்தில் இருந்து போதியளவு கண்ணிவெடிகள் அகற்றப்படும்வரை இடம்பெயர்ந் தோரைத் தடுத்துவைப்பது அவசியமாகும் என அரசு சாதித்தது.

மெனிக்பாமில் பிரித்தெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்ததோடு, முன்னாள் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் துணைப்படையினர் பெரும்பாலும் இரவு நேரங்களில் தமது முகத்தை மறைக்கும் தொப்பி அணிந்தவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனத் தாம் கூறுபவர்களைத் தேர்ந்தெடுத்து அகற்றுவதற்காக மனிதாபிமான அமைப்புக்களின் பார்வைக்குத் தெரியாமல் உலவிவந்தனர்.

156. மெனிக் பாமில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ தனிமையாக இடம்பெயர்ந்தவர்களுடன் கதைப்பதற்கோ கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் சர்வதேச அமைப்புக்கள் தடுக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஐ.சி.ஆர்.சி. குறுகிய காலப்பகுதியில் மெனிக்பாமமுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும், விரைவில் அது நிறுத்தப்பட்டது.

யுத்த வலயத்தில் இருந்து வெளியேறியவர்கள் தம் அனுபவங்களைச் சர்வதேச முகவர்களுக்கும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கும் சொல்வதைத் தடுப்பதற்கான அரசின் முயற்சி என்பதை இந்தக் கட்டுப்பாடுகள் குறிப்பிடுவதாயிருந்தன.

ஆண் துணையின்றித் தனியாயிருந்த பெண்கள் மற்றும் தனியாய் இருந்த குழந்தைகள் பாலியல் மற்றும் ஏனைய வன்முறைகளுக்கு உட்படுவதை உள்ளிட்ட இடம்பெயர்ந்தோர் முகாமில் மீறல்களுக்கு ஆளாகும் சாத்தியக் கூறுகளை புற மற்றும் சுயாதீன கண்காணிப்பு இல்லாத நிலை அதிகரித்தது.

157. மெனிக் பாம் அமைக்கப்படு முன், இடம்பெயர்வதற்கான சர்வதேச அமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர், ஐ.நா. சிறுவர் நிதியம் மற்றும் ஏனையவற்றை உள்ளிட்ட சர்வதேச முகவர்கள் முகாம்கள் தொடர்பில் அரச சர்வதேச தரங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்தே மனிதாபிமான உதவி வழங்கப்படும் என்ற நிபந்தனையைத் தங்களுக்குள்ளே கலந்துரையாடினர்.

செயற்படுத்த தோதான தரங்கள் பற்றி இவ்வாறான பல அமைப்புக்கள் இலங்கை அரசுடன் தொடர்புகொண் டன. ஆயினும், பெருந் திரளான இடம்பெயர்ந்தவர்கள் வர ஆரம்பித்ததும், நிபந்தனைகள் பற்றிய பொதுவான நிலைப்பாட்டினைச் சர்வதேச முகவர்களால் எய்த முடியவில்லை. மெனிக் பாமில் மிகத்தரக் குறைவான நிலைமைகள் நிலவிய போதிலும் பல சர்வதேச முகவர்கள் தொடர்ந்தும் உதவியை வழங்கினர்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 14**

(56)

158. இடம்பெயர்ந்தோர் மாதக்கணக்காக அல்லது சில சந்தர்ப்பங்களில் பல வருடங்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். 2009 டிசெம்பர் அளவில், சுமார் 149,000 இடம்பெயர்ந்தோர் விடுவிக்கப்பட்டதோடு, மேலும் 135,000 பேர் முகாம்களில் எஞ்சியிருந்தனர். 2010 செப்ரெம்பர் அளவில், 242,741 இடம்பெயர்ந்தவர்களை விடுவித்திருப்பதாகவும் 25,795 பேர் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அரசு அறிவித்தது.

**(ஆ) முகாமில் மனிதத்தன்மை அற்ற நிலைமைகள்**

159. இடம்பெயர்ந்தோருக்கான 'நலன்புரி கிராமம்' என அரச மெனிக்பாமினை குறிப்பிட்ட போதிலும், அதற்கென்றே நீர் வளம் எதுவுமின்றி அது நடுக்காட்டில் அமைக்கப்பட்டிருந்தது. 2009 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பெருந்திரளான இடம்பெயர்ந்தோர் வந்ததும், மெனிக் பாமில் இருந்த நிலவரங்கள் சர்வதேச தரங்களுக்கு மிகக் குறைவானதாகவே இருந்தன.

இதனால் பொதுமக்கள் மேலதிக தேவையற்ற கஷ்டத்தையும் அவலத்தையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. புதிதாக வந்தவர்கள் பல நாள்கள் பட்டினியாக இருந்ததோடு, பலர் மன அழுத்தத்தினால் தாக்கமுற்றிருந்த போதிலும், சமூக சேவைகள் அமைச்சு உளரீதியிலான ஆதரவை வழங்க அனுமதிக்கவில்லை. சில இடம்பெயர்ந்தோர் தற்கொலை செய்து கொண்டனர். அடிப்படைச் சிகிச்சைக்கான அனுமதிப் பத்திரத்துக்காகக் காத்திருக்கும்போது அல்லது தடுத்திருக்கக்கூடிய நோய்களினால் சிலர் இறந்தனர்.

160. முகாம்களில் அதிக நெரிசல் காணப்பட்டதால் சிலர் பாதுகாப்பற்ற முறையில் தம் வாழ்க்கையை மேற்கொள்ள முனைந்தனர்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் உள்பிரவேசித்ததைத் தொடர்ந்து மெனிக்பாமில் உணவு, நீர், வதிவிட மற்றும் சுகாதார வசதிகளுக்குத் தீவிர பற்றாக்குறை நிலவியது.

இருப்பிடங்கள் தறப்பாள் பிளாஸ்டிக் ஆக இருந்ததனால் பகல் நேரங்களில் சூடு கடுமையாக இருந்தது. உணவு மற்றும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் பல மணி நேரங்கள் அல்லது சில வேளைகளில் நாள் முழுவதும் காத்து நிற்கவேண்டியிருந்தது. உணவு மிகத்தரக் குறைவாக இருந்ததோடு சில சந்தர்ப்பங்களில் அது தட்டுகள் இன்றி விரித்த கைகளில் கொட்டப்பட்டது.

161. அநேகமான சந்தர்ப்பங்களில் குடும்பங்கள் தம்முடன் உறவுத்தொடர்பற்ற ஏனைய குடும்பங்களுடன் கூடாரங்களில் ஒன்றாகவைக்கப்பட்டனர். தம் கணவன்மார் காணாமற்போன அல்லது இறந்த, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் விடயத்தில், அப்படி ஒரே கூடாரத்தில் இருப்பது ஏனைய ஆண்களினால் அவர்கள் துஷ்பிரயோகம் செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியது.

போதியளவு மறைவிடம் வழங்கப்படவில்லை என்பதோடு, அவர்கள் மலசல கூடங்களைப் பாவிக்கும்போது அல்லது குளிக்கும் போது படைவீரர்கள் அவர்களைப் பார்த்து அவர்கள் அந்தரங்கத்தில் மற்றும் கௌரவத்தில் தலையிடுவதாக இருந்தது. உணவு, இருப்பிடம் அல்லது முகாம்களில் உதவி பெறுவதற்காக சில பெண்கள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

162. மெனிக் பாமில் அடிப்படை நிலைமைகள் மனிதத்தன்மையற்றவையாக இருந்த அதேவேளையில், வெஸ்டன் யூனியன் (பணமாற்று வசதி) அங்கு திறக்கப்பட்டதோடு, பல்லாயிரக்கணக்கானோர், அவர்களுள் பலர் புலம் பெயர்ந்தோருடன் தொடர்புகள் உள்ள தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள், இராணுவத்தினருக்கு லஞ்சம் வழங்கி முகாம்களில் இருந்து வெளியேற முடிந்தது.

(57)

**(இ) தடுப்புக் காவலில் சித்திரவதை**

163. குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத புலனாய்வு பிரிவு ஆகியன மெனிக் பாம் முகாமுக்குள் அலகுகளைப் பேணி வந்ததோடு கிரமமாக விசாரணைகளையும் நடத்தின. வைத்தியர்கள், உதவி அரச அதிபர் மற்றும் ஐ.நா. பணியாள் தொகுதியின் இரு அங்கத்தவர்கள் ஆகியவர்களை உள்ளிட்ட ஏனையவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உண்டு எனக்கருதப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டனர். அவர்களுள் சிலர் சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

விசாரணை முகாமிலிருந்து அடித்தல் மற்றும் அலறல் குரல்களைக் கேட்கக் கூடியதாகவிருந்தது. குறைந்தபட்சம் தடுப்புக் காவலின் போது சித்திரவதை செய்யப்பட்ட ஒன்பது சந்தர்ப்பங்களை ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் பதிவு செய்தது. தடுப்புக்காவலில் இருந்த சிலர் அழைத்துச் செல்லப்பட்ட பின் அவர்கள் திரும்பிவரவில்லை.

**3. தமிழீழ விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை விசாரணையின்றித் தடுத்துவைத்தல்**

164. பிரித்தெடுக்கும் செயற்பாட்டின்போது, தமிழீழவிடுதலைப்புலி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை இலங்கை இராணுவத்தினர் பொதுவாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அல்லது அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பூஸா மற்றும் ஓமந்தை ஆகிய இடங்களில் உள்ள வேறு தடுப்பு முகாம்களுக்கு அகற்றினர். பல சந்தர்ப்பங்களில், தமது குடும்பத்தினரைத் தடுத்து வைப்பதற்கான அறிவித்தலை இலங்கை இராணுவம் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை என்பதோடு தமிழீழ விடுதலைபுலி எனச் சந்தேகிக்கப்படுபவர்களை இனங்காண்பதற்கு அவர்கள் பிரயோகித்த முறை பற்றியும் தெரிவிக்கவில்லை. குழுவுக்கு அரசு வழங்கிய கணக்கின் படி 2010 செப்ரெம்பரில் இருந்தவாறாக, 'ஆரம்பத்தில் சரணடைந்த' மொத்தம் 11,696 பேர் 'பற்றிய தகவல் உள்ளதோடு அவர்கள் நெறிப்படுத்தப்படுகின்றனர் என அரசு அறிவித்தபோதிலும், இவ்வெண்ணிக்கையை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியாதிருப்பதோடு, ஐ.நா, ஐ.சி.ஆர்.சி. அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவர்கள் பற்றிய சுயாதீன மேற்பார்வையினை மேகொள்வதை அரசு அனுமதிக்கவில்லை. யுத்தத்தில் ஈடுபடாதோர் அல்லது இறுதி வாரங்களில் அல்லது நாள்களில் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் ஆகியவர்களை இவ்வெண்ணிக்கை உட்படுத்துகிறது. அரச கணக்குகளின்படி அவர்களுள் 594 சிறுவர்கள் உள்ளனர். ஆரம்பத்தில் சிறுவர்கள் பெரியவர்களுடன் வைக்கப்பட்டிருந்த போதிலும் ஐ.நா. சிறுவர் நிதியம் அவர்களைப் பதிவு செய்தது. பின்னர் அவர்கள் வேறு சிறுவர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். ஆயினும், அவை பெரும்பாலாக நாட்டின் தெற்கில் இருந்ததால் குடும்பத்தினர் அவர்களைச் சென்று பார்ப்பது கஷ்ட மாகவிருந்தது.

165. தடுத்து வைக்கப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அவர்களுக்கு இருந்த தொடர்புகள் பற்றி விரிவாக விசாரிக்கப்படுவர். பின்னர் அவர்களில் சிலர் புனரமைப்பு ஆணையாளர் நாயகத்தின் கீழுள்ள 'பாதுகாப்பான இடவசதி மற்றும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு' இடமாற்றம் செய்யப்படுவார்கள். அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் 2006 இல் அமைக்கப்பட்ட இந்த அலுவலகம், 'புனர்வாழ்வளிப்பதற்காகச்' சரணடையும் ஒருவரை பாதுகாப்புச் செயலாளரின் கட்டளையின் பேரில் இரண்டு வருடங்கள் வரை வைத்திருக்கலாம். 2010 செப்ரெம்பரில் குழுவுக்கு அரசு வழங்கிய தகவலின்படி, 'சுமார் 6,500' முன்னாள் போராளிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் 'குறுகிய கால புனர்வாழ்வுக்கு' அத்துடன், 'சுமார் 3,500' பேர் 'நீண்டகால புனர்வாழ்வுக்கு' உட்படுத்தப்பட்டுள்ளதோடு, சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, '1,500 க்கும் குறைவானோர்' தீவிர தமிழீழ விடுதலை புலியினர் என இனங்காணப் பட்டுள்ளனர்.

**(58)**

166. குழுவுக்கு அரசு வழங்கிய ஆவணங்களின்படி, 'புனர்வாழ்வளிக்கப்பட்ட' 5,809 பேர்கள் 'மீளிணைக்கப்பட்டுள்ளார்கள்', அதாவது 2011 பெப்ரவரி 8 ஆம் திகதியில் இருந்தவாறாக, விடுவிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 4,581 பேர் புனரமைப்பு ஆணையாளர் நாயகத்தின் கீழான ஒன்பது பல்வேறு தடுப்பு நிலையங்களில் தற்போது 'புனர்வாழ்வு அளிக்கப்பட்டு' வருகிறார்கள். 1,306 தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர்கள் தொடர்ந்தும் புறத்தொடர்பற்ற தடுப்பு நிலையங்களில் குற்றவியல் விசாரணை மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இது குறிக்கிறது.

167. அரசு வெளிப்படையற்ற நிலை காரணமாக வெவ்வேறான 'சரணடைந்த' இந்தத் தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமைவிடங்களில் உள்ள நிலைமை பற்றி எந்த ஒரு தகவலும் வெளியாகவில்லை.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு போட்டிகளிலும் விக்ரோறியா சம்பியன்



யாழ்ப்பாணம், மே 14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே, துடுப்பாட்டப் போட்டிகளில் விக்ரோறியாக் கல்லூரி இரண்டிலும் சம்பியன் களையும் தட்டிச்சென்றது.

கடந்தவாரம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் விக்ரோறியாக்கல்லூரி அணியை எதிர்த்து வட இந்து மகளிர் உயர்தரப்பாடசாலை அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி 8 இலக்கை இழந்து 76 ஓட்டங்களைப்பெற்றது.

77 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய வட இந்துமகளிர் கல்லூரி அணி 9 இலக்கை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

விக்ரோறியாக் கல்லூரி அணி 34 ஓட்டங்களால் வடஇந்து மகளிர் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

பெண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டம் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.


இதில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்துப் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி மோதிக் கொண்டது.

இதில் விக்ரோறியாக் கல்லூரி அணியினர் எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணியை 4:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டனர்.

(ம-23-86)

## விளையாட்டுத்துறை அமைச்சர் முல்லைத்தீவுக்குச் செல்கிறார்

யாழ்ப்பாணம்,மே14



விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இன்று சனிக்கிழமை முல்லைத்தீவுக்குச் செல்கின்றார்.

இன்று முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள 23ஆவது கிரிடா சத்தி பயிற்சி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுக்கு இவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, சிறிரங்கா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-23)

## யாழ்.-மொறட்டுவ பல்கலை அணிகள் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், மே 14

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலிறுதி ஆட்டத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக முகாமைத்துவ வணிக பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கே. அருள்வேல் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## சதுரங்கப் போட்டி

வலி.வடக்கு, மே 14

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான சதுரங்கப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. (ம-86)

## பெண்களுக்கான துடுப்பாட்டம்: மெதடிஸுக்கு மூன்றாம் இடம்

வலி.வடக்கு, மே 14

யாழ். மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்குஇடையேயான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் இடத்தை வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பெற்றுக் கொண்டது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

கார்த்திகா 10, பகீரதி 3 ஓட்டங்களைப் பெற்றனர்.

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மதுசா, ஜானகி தலா 2 ஓவர்கள் பந்து வீசி முறையே 4, 9, ஓட்டங்களைக் கொடுத்து தலா 3 விக்கெட்டுக்களையும் விஜிதா 2 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சாமந்தி 2 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

60 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 7 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கார்த்திகா 2 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மயூரதி ஒரு ஓவர் பந்துவீசி 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கஸ்தூரி 2 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)

## தென்மராட்சி கழகங்களுக்கு இடையில் பல்வேறு போட்டிகள் நடத்த ஏற்பாடு

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் கரபந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் தாச்சி விளையாட்டுப் போட்டிகளை தென்மராட்சி ரீதியில் மிகவிரைவில் நடத்த இருக்கிறது.

இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் தென்மராட்சி எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கைதடிச் சந்தியிலுள்ள டயானா சிகையலங்கரிப்பு நிலையத்திலோ அன்றேல் 0776845740 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் என வளர்மதி விளையாட்டுக் கழகத் தலைவர் நா. பிரதீப் கேட்டுள்ளார். (ஐ-288)

# பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, மே 14

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான கர பந்தாட்டப் போட்டியில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் 15,17,19 வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

* வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை எதிர் கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
* புத்தூர், ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம் எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.
* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் மண்டைதீவு மகா வித்தியாலயம்.
* பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி எதிர் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
* நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணாசலம் மகா வித்தியாலயம்.
* யாழ்ப்பாணம் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.
* மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எதிர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

**17 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலயம் எதிர் கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
* யாழ்ப்பாணம் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
* நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
* ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.
* வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
* சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை.
* நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை இரண்டாம்சுற்றில் இருந்து மோதவுள்ளது.

**19 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் வல்லை மத்திய மகாவித்தியாலயம்.
* வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி றிபேக் கல்லூரி.
* கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் எதிர் காரை நகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.
* பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி எதிர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
* அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
* கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி எதிர் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
* நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் சென்.மேரிஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மோதவுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய், மாகியம்பதி ஸ்ரீ மீனாட்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 17.05.2011 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறும். அங்கத்தவர்கள், உபயகாரர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
12.01.1932

மறைவு
01.05.2011

### தம்பையா இராசலட்சுமி

கடந்த 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (16.05.2011) திங்கட்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (4196) குடும்பத்தினர்.

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே 14

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 868 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "C" என்ற ஆங்கில எழுத்தும் 32/37/57/61 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 56 தெரிவாகியது.

இதன் பிரகாரம் ஆங்கில எழுத்தும் நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு சுப்பர் பரிசாக ரூபா 13,949,997.50 கிடைக்கவுள்ளது.

முதலாம் பரிசு வெல்லப்படவில்லை.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 04 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 309 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,286 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 213,528 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் 31,839 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக் கவுள்ளது. (ற)

## தேவை

நகரப்பகுதியில் சிறிய அலுவலகம் ஒன்றுக்கு எழுதுவினைஞர் தேவை. நகரப் பகுதியிலும் அதனை அண்டிய உள்ள பகுதியிலும் வசிக்கும் ஆண், பெண் இரு பாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 0755285055

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19.02.1921 உதிர்வு 25.04.2010

### கந்தவனம் வல்லிபுரம்

அன்புதனை அருவியாக்கி
பண்புதனை சிகரமாக்கி
பார் போற்ற வாழ வைத்த
அன்புத் தந்தையை
நினைவு கூருகின்றோம்

இந் நாளில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால். (4199) அன்புடன் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்
சின்னமணி சிறீஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் வல்லிபுரம் சின்னமணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலி.வடக்கு பிரதேச சபை,
(576000) காங்கேசன்துறை. (மல்லாகம்)

## மரண அறிவித்தல்

### கந்தையா குகதாசன்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இத்தாலியில் வசித்தவரும் தற்போது குப்பிளானில் வாழ்ந்தவருமாகிய கந்தையா குகதாசன் கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராஜகுமாரியின் அன்புக் கணவரும் நாகம்மா, இரத்தினம், நடராசா, பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் செல்வரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயராசா (கனடா), சந்திரகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமாரி (ஜேர்மனி), இந்திரகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (002) தகவல்: மனைவி,
திரு.திருமதி நடராஜா குடும்பம்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



### அமரர் சோமசுந்தரம் சோமசேகரம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சோமசுந்தரம் சோமசேகரம் அவர்களின் ஆத்மா இறைவனடியில் இன்புற்றிருக்க நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுன்னாகம் கதிரைமலை சிவன்கோயிலில் நடைபெறும் விசேட பூசையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அதிபர், ஆசிரியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தங்களை நேரில் சந்தித்து இந்த அழைப்பைத் தரமுடியாமைக்கு மிக்க மனம் வருந்துகின்றோம்.

இதைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

56, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூரர், யாழ்ப்பாணம். (48,19,50) [illegible]:
பொ.பாஸ்கரசிங்கம், பொ.பாலசிங்கம்.

## சிங்களம்

ஆஷா (கண்டி)

Gr.2-5- Tue(3.pm)
Gr. 6 -O/L-Sat(9.pm)
A/L, வேலைசெய்வோர்
Sun. 9.am.

I.B.S
சுண்டுக்குளி

## அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Accountants, Lecturers, Teachers அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாடு மணமக்கள் உட்பட ஏராளமான மணமக்களில் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற மணமக்களைத் தெரிவு செய்யலாம். [10.30 - 5.00 வரை] இல.3, யாழ்வீதி, சிறாம்பியடி லேன், [ஆரியகுள சந்திக்கு கிட்டவாக, பலாலி வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் லேன்] யாழ்ப்பாணம், தொடர்பு: 021222 9334

## வாடகைக்கு வீடு தேவை

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் இருவர் வசிப்பதற்குகந்த வீடு கோண்டாவில், உரும்பிராய், கோப்பாய் போன்ற பிரதேசங்களில் வாடகைக்குத் தேவை. (முற்பணம் வழங்கப்படும்) உடன் தொடர்பு கொள்ளவும்-
0772887638

## கடை வாடகைக்குண்டு

கே.கே.எஸ் வீதி, தாவடியில் சிறப்பாக இயங்கும் இன்ரநெற்கபே, தொலைத் தொடர்பு நிலையம், ஓடியோ, வீடியோ றெக்கோடிங் ஸ்பொட் இணைந்ததாக கடை வாடகைக்கும் , பொருள்கள் விற்பனைக்கும் உண்டு.
விலை 490,000/- (பேசித் தீர்மானிக்கலாம்)

தொடர்பு-0779852409

## காணி விற்பனைக்குண்டு

பலாலி வீதியில் கோண்டாவில் டிப்போவுக்கு அண்மையில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(சி/575960) தொடர்பு: 0770778512

## எமது சிகிச்சைகள்

புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி, முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு
நீக்குதல் பக்க விளைவுகள்
இல்லை. சிக்கனமான மூலிகை
மருத்துவம்

இனி இல்லை

## நெஞ்சு வலி




இருதய நோயாளர்
எதிர்காலத்தில் நெஞ்சு வலி
இன்றி சுகமாக வாழலாம்.
எமது ஆயுர்வேத
மருந்தினால்
இரத்த ஓட்டம் சீர்பெறும்
வலியிலிருந்து உடல் நலம்
பெருவீர்கள்.

HOTLINE
0777 08310, 011 555 8442

A BOI APPROVED & ISO 9001-2008 QMS CERTIFIED COMPANY

FAIR PHARMA (PVT) LTD

Level 5 East Tower 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 517 897, 5 551 879, 5 558 442
Email - fairpharmasrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com

இலவச மருத்துவ ஆலோசனைகள்

| பருத்தித்துறை | யாழ்ப்பாணம் |
|---|---|
| 16.05.2011 | 17.05.2011 |
| றோயல் ஸ்டார் மெடிக்கல் சென்டர் செட்டி வீதி | கமலா டிஸ்பென்சரி 1207 K.K.S வீதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி பு.சிவஞானவதி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி சுப்பிரமணியச் செட்டியார்**

13.05.2011 ஆம் திகதி காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரிசங்க அங்கத்தவர்களும்.
நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம், தெல்லிப்பழை. (4200)



## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 226 | சீட்டிழுப்புத் திகதி 12.05.2011

வெற்றி இலக்கங்கள்: 06 26 33 56 | சுப்பர் இலக்கம்: 03

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,000,000/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 67504 | ரூ 20/= | ரூ 1,350,080 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 6137 | ரூ 40/= | ரூ 245,480 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 5130 | ரூ 100/= | ரூ 513,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 459 | ரூ 200/= | ரூ 91,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 117 | ரூ 1,500/= | ரூ 175,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 4 | ரூ 3,000/= | ரூ 12,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ 1,000,000/= | ரூ 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ 5,000,000/= | |
| மொத்த எண்ணிக்கை | 79352 | | ரூ 3,387,860/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,203,880/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


# சிவபூமி முதியோர் இல்லத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா

சிவபூமி முதியோர் இல்லத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சிவபூமி முதியோர் இல்லத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திரு முருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் ஆ.சண்முகதாஸ், திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் சிறப்பு அரங்க நிகழ்வுகளாக கோண்டாவில் பாடசாலை மாணவர்களது குழு நடனமும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களினது நாடகமும், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும், சிறப்பு நாடகமும் நடைபெறவுள்ளன. (ம-313)

# கூட்டம்

அரியாலை விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை விவசாய சம்மேளனத் தலைவர் த.சபாரத்தினம் தலைமையில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலய முன்பாகவுள்ள அருளம்பலம் மண்டபத்தில் நடைபெறும்.

அடுத்த பெரும்போக நெற்செய்கையின் போது இப்பகுதி விவசாயிகள் எதிர் நோக்கும் சவால்கள் அதற்குரிய தீர்வுகள் தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


**பிரத்தியேக வகுப்புகள்**

கணிதம்- R.பகீரதன்
ஆங்கிலம்- S.மயூரன், S.ரஞ்சித்
தமிழ்- N.சபேசன்
விஞ்ஞானம்- S.வாகீசன், வரலாறு- T.மதி

GR-06 முதல் O/L வரை

A.V. றோட், அரியாலை
T.P- 0776441291, 0775479273



## STUDY IN CHINA - சீனாவில் கல்வி

ENGLISH MEDIUM - ஆங்கிலத்தில் (1500 - 4000 USD / year)

SPOT ADMISSION AT JAFFNA CITY HOTEL
ON 15TH MAY 2011

நாளை 15.05.2011

- M.B.B.S (SLMC Recognized)
- Engineering (Aeronautical & Telecommunication)
- Business Administration
- Trade Economy & Finance
- Chinese Language

FREE ADMISSION
இலவச அனுமதி

WIN LANKA WORLD (PVT) LTD.
TEL : 0777 813450, 077 514 99 65
E-MAIL : winlanka@hotmail.com



**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த, ரோகினி நட்சத்திரம், கிரகபாவம் 61, உதயத்துச் செவ்வாய், கட்டாரில் இருந்து இலங்கையில் வந்து நிற்கும் மணமகனுக்கு படித்த(உள்நாட்டு/வெளிநாட்டு) மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புக்கு: 0718475326 (4206)



**வீகள், A4 பதிப்பு செய்யும் மெசின்கள் முதற்தர சேவிஸுடன்**

ஓவ்செற் விற்பனைக்குண்டு

தொடர்புக்கு: 077 0760381

ஞாயிறு மட்டுமே பார்வையிடலாம். 2 மட்டுமே உள்ளன.

ரூபா: 1,75,000/=



## 'ஏழிசை' மிருதங்க நர்த்தனாலயம்



புதிய மிருதங்க வகுப்புகள் ஆரம்பமாகின்றன
(வட இலங்கை சங்கீத சபை பரீட்சார்த்திகளுக்கும் பல்கலைக்கழக மாணவருக்குமானது)
ஆசிரியர் : மிருதங்க கலாவித்தகர் க.கண்ணதாசன் BFA
நடன வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்பு: 021 7912751
புங்கங்குளம் வீதி, அரியாலை (காசிப்பிள்ளை கலையரங்குக்கு அருகில்)



**புதிதாக மாட்டு இறைச்சிக் கடை திறப்புவிழா**

பண்ணைச் சந்தையில், மாட்டிறைச்சிக் கடை புதிதாக இன்று சனிக்கிழமை திறக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்பு– மார்க்கண்டு ஞானசேகரம்,
பண்ணைச் சந்தை, NO-01 மாட்டிறைச்சிக் கடை.
சாள்ஸ், இன்பராசா, தொ.பே-0776410785





பயிற்சிக் காலத்தில் ரூபா 5000 ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும்.

யாழ்.நகரில் இயங்கும் முன்னணி வாடிக்கையாளர் நிறுவனமொன்றுக்கு கணக்கியல் துறையில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. முதல் ஆறு மாதங்கள் பயிற்சிக் காலமாகக் கருதப்படும். **HNDA** அல்லது வேறு துறையில் சித்தி பெற்றவர்கள் சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**AGS SHARMA & CO**
*Chartered Accountants*
No- 139, Hospital Road,
Hospital Junction, Jaffna.
email:audit@agsarma.com


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

**கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.**

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** - 14.05.2011-27.05.2011 பி.ப.2 மணிவரை

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி** - 30.05.2011 நண்பகல் 12 மணிவரை

**கேள்வி திறந்து பார்க்கும் திகதி** - 30.05.2011 பி.ப.1.30 மணி

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம்** - தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| சுன்னாகம் கொத்தியாலடி திண்மக் கழிவகற்றுமிடம் சுற்றுமதில் அமைத்தல் | 14500.00 | 560.00 | M8/C7 |
| சுன்னாகம் கப்பம்புலம் வீதி மின் தாரிடல் | 13500.00 | 560.00 | M8/C7 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்துக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படு கின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம்.
13.05.2011

திருமதி சு.முருகநேசன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி/575998)(39)




புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...

# சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
(பின் வீதி),
யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# வலித்தூண்டல் கடலில் தொழில் செய்ய பிரதேச மக்களுக்கு அனுமதி வழங்குவேன்

## தளபதி ஹத்துருசிங்க நேற்று சரவணபவன் எம்.பியிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே14

கீரிமலை வலித்தூண்டல் பகுதி மக்கள் அந்தப் பகுதிக் கடலில் கடற்றொழில் மேற் கொள்வது தொடர்பாக நாளை மறுதினம் 16ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறும் பாதுகாப் புக் கூட்டத்தில் பிரஸ்தாபிப் பேன். அந்தப் பகுதிக் கடலில் அந்தப் பிரதேச மக்கள் தொழில் செய்ய நடவடிக்கை எடுப்பேன்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்து ருசிங்க மேற்கண்டவாறு தெரி வித்தார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கும் தளபதிக் கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் பலாலி படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

வலித்தூண்டல் கடற்றொழி லாளர் பிரச்சினை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சர வணபவன் பிரஸ்தாபித்த போதே தளபதி மேற்கண்ட வாறு கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் 56 ஆயி ரத்து 870 பேர் இன்னமும் மீள் குடியமர்த்த வேண்டும் என அரச அதிபர் தகவல் வெளியிட் டுள்ளார். தாங்கள் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்த புள்ளி விவரம் குறைவாக இருந்தது என்று சர வணபவன் பிரஸ்தாபித்தார்.

இராமாவில் முகாமில் தங்கி யுள்ள வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 333 குடும்பங்கள் குறித்தே பிரஸ்தாபித்திருந்தேன். இம் மாத இறுதிக்குள் அங்குள்ளவர் கள் சொந்த இடங்களில் குடி யமர்த்தப்பட்டு விடுவார்கள். அதனுடன் அந்த முகாமையே மூடிவிடுவேன் என்று தளபதி பதிலளித்தார்.

அத்துடன் குடாநட்டின் பல் வேறு விவகாரங்கள் குறித்தும் தளபதியும் நாடாளுமன்ற உறுப் பினரும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர். (ஒ-ஐ)

# வவுனியாவில் நூல் வெளியீட்டு விழா இன்று

வவுனியா,மே14

'பெய்யெனப் பெய்யும் மழை', ஒருங்கிருக்கை (யோகா சன) நெறி ஆகிய இருநூல் களின் வெளியீட்டு விழா வவு னியா சுத்தானந்த இந்து இளை ஞர் சங்க மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரி துணை முதல்வரும் தமிழ் சங் கத்தின் கல்விக் குழுவின் செய லாளருமான மா.கணபதிப் பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரி யர் சி.சிவலிங்கராஜாவும் கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூ ரியின் முன்னாள் தலைவர் செ. திருநாவுக்கரசு, மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளாரும் வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவரும் வவு னியா மத்திய கல்லூரி ஆசிரிய ருமான த.சிவகுமாரன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஒ-எ)




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவு வதற்கான சாத்தியம் உள்ளது.

# வெசாக்கை முன்னிட்டு மதுபான, இறைச்சி விற்பனைக்குத் தடை

யாழ்ப்பாணம்,மே14

வெசாக் தினத்தை முன் னிட்டு நாளை மறுதினம் திங் கட்கிழமை முதல் மூன்று நாளைக்கு மாவட்டத்தில் உள்ள மதுபானக் கடைகள், ஊன் அறுக்கும் நிலையங்கள், பந் தய நிலையங்கள், சூதாட்டக் கூடங்கள் மற்றும் கழகங்கள் அனைத்தையும் மூடுமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள் ளார்.

திங்களும், செவ்வாயும் இறைச்சிக்கடைகளை மூடு மாறும் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்து மாறும் அரச அதிபர் கேட்டுள் ளார். (ஒ-ஐ)

# சங்கானைக் கடையில் பட்டப் பகலில் திருட்டு; இளைஞர் மறியலில்!

பட்டப்பகலில் திறந்திருந்த கடையிலிருந்து சுமார் 10 ஆயி ரம் ரூபா பெறுமதியான மின் சாரப் பொருள்களைத் திருடிச் சென்ற இளைஞர் ஒருவர் பொலி ஸாரிடம் அகப்பட்டுக் கொண் டார். பொருள்களைக் கைப்பற் றிய பொலிஸார் வாலிபனைக் கைது செய்து மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிவான் குறித்த நபரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

சங்கானை ஓடக்கரை வீதி யிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றி லேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

எவரும் இல்லாத நேரம் பார்த்து திறந்திருந்த கடைக்குள் சென்ற திருடன் அங்கிருந்த 10 ஆயி ரத்து 400 ரூபா பெறுமதியான மின் சாரப் பொருள்களைத் திருடிச் சென்றுவிட்டான். இத் திருட் டுப் பற்றிக் கடை உரிமையா ளர் மானிப்பாய் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்தார்.

அதை அடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல் லாகம், கான்ஸ்டபிள் பியசேன, அரிச்சந்திரா ஆகியோர் அராலி யிலுள்ள ஒரு வாலிபனைக் கைது செய்து விசாரணை செய்தனர். அவனிடம் இருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன. (ஒ-115)

## யாழ். வணிகர் கழகத்தினர் குடாநாட்டில்

# 150 குடும்பங்களைத் தெரிவுசெய்து கோழி வளர்ப்புக்கு உதவ ஏற்பாடு

## 30 குஞ்சுகள், தீவனம், கூடு வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,மே14

யாழ். வணிகர் கழகம் யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட் டின் கீழ் வாழும் தெரிவு செய் யப்பட்ட 150 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக பயனா ளிகளாக 150 குடும்பங்களை வணிகர் கழகம் தெரிவுசெய் துள்ளது. தெரிவு செய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் 30 கோழிக் குஞ்சுகள், கோழித்தீவனம், கோழிக் கூடு உள்ளிட்டவை வழங்கப்படவுள்ளன. பிரதேச செயலர், உதவி அரசாங்க அதி பர் ஆகியோரை உள்ளடக்கியதாக கிராம மட்டத்திலுள்ள தலை வர்களால் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளதாக வணிகர் கழகத் தலைவர் தெரிவித்தார்.



மருதங்கேணியில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு உதவி வழங்கப்படுகிறது

வணிகர் கழகத்தினால் முன் னெடுக்கப்படும் இந்த வாழ் வாதார திட்டத்தின் அங்குரார்ப் பண நிகழ்வு நேற்று மருதங் கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெற்றது.

உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது பத்துக் குடும்பங்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த உதவி வழங்கப்பட்டது. இதன் போது யாழ் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், செயலாளர் ஜனக்குமார், முன் னாள் துணைவேந்தர் பேராசி ரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, விரிவுரையாளர் திருமதி நாச்சி யார் செல்வநாயம், மருதங் கேணிப் பகுதிக்கான சிவில் இராணுவ அதிகாரி கேணல் சில்வா உள்ளிட்ட வணிகர் கழக அங்கத்தவர்கள் இதன்போது கலந்து கொண்டனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு லிங்கநாதன் தனது தலைமையு ரையின் போது யாழ் வணிகர் கழகம் வறுமைக் கோட்டின் கீழ் வருமானமின்றி வாழும் குடும் பங்களுக்கு உதவ முன்வந்துள் ளமை வரவேற்கத் தக்கதாகும்-என்றார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிர தேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கள் தோறும் தலா பத்துக் குடும் பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள் ளன. அந்தக் குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் கோழிக் குஞ்சு, கோழிக்கூடு கையளிக் கும் திட்டம் நிறைவுபெறும் என்றும் வணிகர் கழகத் தலை வர் தெரிவித்தார். (ஒ-14)

# நிகழ்வுகள்

### கவிதை நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மே.14

மட்டுவில் ஞானகுமரனின் ''சிறகு முளைத்த தீயாக'' என்னும் கவிதை நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்து ரையை சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனும் சிறப்பு ரையை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும், மதிப்பீட்டுரையை எஸ்.ரமேஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ற-313)

### சகாய நிதிச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.14

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலை விளான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய அந்திய கால சாகாய நிதிச் சங்கத்தின் 55 ஆவது வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறும்.

சங்கத் தலைவர் க.தர்மநாயகம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (ஒ-ஐ)

### விசேட பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.14

கொல்லங்கலட்டி ஞான வைரவர் ஆலய பரி பாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றி லில் நடைபெறவுள்ளது என்று பரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர். (ற)

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

சுழிபுரம், மே.14

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் சி.கைலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய தேர் கட்டுதல், தேர்த் தரிப்பிடம் தொடர்பாகவும் ஆல யப் பெருந்திருவிழா தொடர்பாகவும் கலந்து ரையாடப் படவுள்ளன. (ற-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகலப்பில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட

# யாழ். பல்கலை மாணவர்கள் 13 பேரும் கடும் எச்சரிக்கையுடன் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், மே 14

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர்களிடையே கடந்த 7 ஆம் திகதி நடந்த கைகலப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 13 மாணவர்கள் கடுமையாகக் எச்சரிக்கப்பட்டு யாழ். நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

யாழ். பதில் நீதிவான் மு. திரு நாவுக்கரசு முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசார ணைக்கு எடுக்கப்பட்டது.

ஏற்கனவே விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த இரு மாணவர்களுடன் மேலும் 11 மாணவர்கள் நேற்று பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்டனர்.

நேற்றைய விசாரணையில் யாழ். பல்கலைக் கழக வணிக, முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். வேல் நம்பி மாணவ ஆலோ சகர் ஏ.என். சரவணபவன், யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரத்ன , பிரதான பொலிஸ் அதிகாரி சமன்சி கேரா ஆகியோர் பிர சன் னமாகியிருந்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு மாணவர்களுக்கு எச்சரித்து அறிவுரை வழங்குகையில் தெரிவித்ததாவது:-

பல்கலை மாணவர்கள் பொறுப்புடன் கல்வி கற்று சமூகத்துக்கு உதவுபவர்களாக மிளிரவேண்டும். அதை விடுத்து அடி, தடி கலாட்டா, கோஷ்டி மோதல் என்று அநாகரிகமற்ற முறையில் நடந்து யாழ். பல் கலைக்கழகத்தின் தரத்தையும், நம்பிக்கையையும் அழித்து விடம நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களையும், கலாசார விழுமியங்களைக் காக்க வேண்டியவர்களில் யாழ். பல்கலை மாண வர்களுக்கும் முக்கியமான பங்கு உண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

இனிவரும் காலங்களில் இத்தகைய அநாகரிகமான செயல்களில் நீங்கள் ஈடுபடு வீர்களானால் சுலபமான முறையில் விடுதலை செய்யப்படமாட்டீர்கள், விசாரணைகள் முடியும் காலம் வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுவீர்கள்- என்று தெரிவித்தார்.

ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு மாணவர்களையும் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட 11 மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைகலப்பின் பின்னர் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் ஆகியவற்றை உரியவர்களிடம் ஆவணப் பரிசீலனை செய்து ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-ஐ-9-319)

அகதிகளுடன் கனடா சென்ற

# 'ஓஷன் லேடி'யின் நகர்வுகளை அமெரிக்கா அவதானித்துவந்தது

கொழும்பு, மே 14

இலங்கை அகதிகளுடன் கடந்த 2009ஆம் ஆண்டு கனடா சென்ற 'ஓஷன் லேடி' கப்பல் விவகாரத்தை கனடா எவ்வாறு கையாளுகிறது என்பதை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வந்தது என்று உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 'விக்கி லீக்ஸ்' இணையம் தகவல் வெளியிட்டது.

2009ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் 28 என திகதியிடப்பட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல் பரி மாற்று ஆவணத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது என 'விக்கி லீக்ஸ்' தெரிவித்தது.

இந்தக் கப்பல் முதலில் ஆஸ்திரேலியா செல்வதாக இருந்தது. எனினும், ஆஸ்திரேலியாவுக்கு ஏற்கனவே அதிகளவான தமிழ் அகதிகள் சென்றுள்ளதால், 'ஓஷன் லேடி' அகதிகள் கன டாவை நோக்கிச் சென்றனர்.

இந்த நிலையில், பிரஸ்தாப கப்பல் விவகாரத்தை ஆஸ்திரேலியாவும், கனடாவும் எவ்வாறு கையாளுகின்றன என அமெரிக்கா தனித்தனியாக ஆராய்ந்துள்ளது என்றும் 'விக்கி லீக்ஸ்' சுட்டிக் காட்டியுள்ளது.

'ஓஷன் லேடி' மூலம் கனடா சென்ற அகதிகளை அந்த நாட்டு அரசு முறைப்படி விசாரணை செய்து விடுவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறுஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் 'தயவு செய்து எமது உறவுகளைத் தேடித் தாருங்கள்' என்று கோரி கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக திருகோணமலை கடற்படைத்தளவீதி தற்காலிகமாக மூடப்பட்டது.

தந்தையைப் பிரிந்து தவிக்கும் குழந்தைகள், கணவனைப் பிரிந்து வாழும் மனைவியர் உட்படப் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். சிலர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதமையைக் காணக்கூடியதாக இருந்தது.

## தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்பெக்ராம் ஊழல், ஈழத் தமிழர் பிரச்சினை, மணல் கொள்ளை, குடும்ப ஆட்சி, சினிமா ஆதிக்கம் ஆகியவையே தி.மு.கழகத்தின் படு தோல்விக்குக் காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் கடந்த 13ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது தெரிந்ததே. வாக்கு எண்ணும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. அ.தி.மு.க. 160 தொகுதிகளில் போட்டி இட்டது. அதன் தோழமைக் கட்சிகள் எஞ்சிய 74 தொகுதிகளில் போட்டியிட்டன.

கலைஞரின் தி.மு.க. 119 தொகுதிகளில் போட்டியிட்டது. அதன் தோழமைக் கட்சிகள் 115 தொகுதிகளில் போட்டியிட்டன.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 147 இடங்களுக்கும் அதிகமாகப் பிடித்து தனிப் பெரும்பான்மை பெற்றுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வரும் 15 ஆம் திகதி முதல்வராகப் பதவியேற்கிறார்.

இதன்மூலம் 3ஆவது முறையாக ஜெய லலிதா பதவியேற்கவுள்ளார்.

அவரது பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்த மூத்த பொலிஸ் அதிகாரிகள் நேற்று ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது 15 ஆம் திகதி ஆளுநர் மாளிகையிலேயே பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து அன்றைய தினம் சென்னை கிண்டி ராஜ்பவனில் ஜெயலலிதா பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அவருக்கு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

ஜெயலலிதாவுடன் அமைச்சர்கள் சிலரும் பதவியேற்பர் என்று தெரிகிறது.

மே 16 ஆம் திகதி தற்காலிக சபாநாயகர் தேர்வும், அன்றைய தினமே எம்.எல்.ஏக்கள் பதவியேற்பும் நடக்கும் என்று தெரிகிறது.

## வயம்பவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 14

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வயம்ப பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக அரசு தொடர்ந்து முன்னெடுக்கும் அடக்குமுறையைக் கண்டித்து கோஷங்களை எழுப்பிய வண்ணம் மாணவ, மாணவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக வயம்ப பல்கலைக்கழக வளாகத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. அது மட்டுமின்றி, பல்கலைக்கழக வளாகத்தில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதேவேளை, அரசின் இந்த இராணுவப் பயிற்சித் திட்டத்துக்கு எதிராக நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் எதிர்வரும் காலங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சஞ்சீவ பண்டார நேற்று தெரிவித்தார்.

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக நான் பலமுறை விளக்கி யுள்ளேன். இது ஒரு சர்வ தேசப் பிரச்சினை. எனவே தமிழக அரசால் குறிப் பிட்ட அளவில் மட்டுமே செயற்பட முடியும். அதற்கு மேல் செயற்படுவதானால் அது மத்திய அரசால் மட்டுமே, அதாவது இந்திய அரசால் மட்டுமே செயற்படமுடியும்.

இருப்பினும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நான் இரண்டு தீர்வுகளை முன்வைக்க விரும்புகின் றேன். போர்க் குற்றம் புரிந்தார் எனத் தெரிவிக்கப்படும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க்குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம். அதைச் செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்து வலியு றுத்துவேன்.

இரண்டாவதாக, இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, சுதந்திரமான வாழ்க்கை வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும். அதைச் செய்ய இலங்கை ஜனாதிபதியும் அவரது அரசும் மறுத்தால், இலங்கை மீது இந்தியா மற்றும் சர்வதேசம் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்.

அப்படிச் செய்தால், இலங்கை அரசு பணிவதைத் தவிர வேறு வழியில்லை. இதைச் செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயஸ் தோட்டத்துக்கு முன்னால் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடினர்.

சென்னைத் தெருக்களிலும் ஏனைய நகரங்களிலும் கிராமங்களிலும் வெடிகள் கொளுத்தி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இனிப்புகளைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்த வெற்றிக்காக தமிழ்நாட்டு மக்களுக்குத் தான் நன்றி தெரிவிப்பதாக கூறிய ஜெயலலிதா, தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றப் படும் என்று கூறினார்.

தங்களது ஆட்சியில் அரசு நிர்வாகத்தை மறுசீரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், அதன் பிறகு தமிழகத்தின் பொருளாதாரத்தை மறுகட்டமைப்புச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறிய ஜெயலலிதா, அது அவ்வளவு எளிதான செயல் அல்ல என்று கூறினார். (ஒ-சி)

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அ.தி.மு.கவுடன் நாங்கள் நேரடியான பேச்சுகளை நடத்துவோம்.

ஏனெனில், தமிழகத் தேர்தல் பிரசாரங்களின்போது ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அவர்கள் தேர்தல் வாக்குறுதிகளை அளித்திருந்தார்கள்.

எனவே, அதன் அடிப்படையில் ஆட்சி பீடம் ஏறும் அ.தி.மு.கவுடன் பேச்சுகளை நடத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்ப்பை பெற்றுக் கொடுக்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வலியுறுத்துவோம் . ஈழத்தமிழர்கள் அனுபவித்த துயரங்கள், வேதனைகளை விலாவாரியாக அறிந்துகொண்டுள்ள ஜெயலலிதா அரசியல தீர்வு குறித்து இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை என்றும் மாவை சேனா திராசா நம்பிக்கை வெளியிட்டார். (ஒ-சி)

## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது சுற்றில் எடுத்துக்கொள் ளப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக ஒருங்கிணைந்து முடிவுகளை எட்டுவதற்காக சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதாகவும் மற்றும் முக்கியமாக இரண்டாவது சபையை உருவாக்குவதற்கான அடிப்படைத் திட்ட வரைபை சகல கட்சிகளுக்கும் அனுப்பி அவர்கள் கருத்துக்களை அறியவுள்ளதாகவும் அரச தரப்பினால் கூறப்பட்டதுடன் இந்த திட்ட வரைவு குறித்து பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேநேரம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறுபவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் முக்கியமாக இங்கு ஆராயப்பட்டது.

குறிப்பாக நில உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல் லாத குடும் பங்கள் வீட்டுத் திட்டங்கள் கிடைக்காத நிலைமைக்கு தள்ளப்படுவதாகவும் இவர்களுக்கு மாற்று வழி முறை ஆராயப்பட வேண்டும் ஈ.பி.டி.பி தரப்பால் வலியுறுத்தப்பட்டது.

இக்குடும்பங்களின் விவரங்கள் அரச தரப்பால் பெறப்பட்டு இதற்கான முடிவு எட்டப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது - என்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் (அசோக்), அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் கே. தயானந்தா, அமைச்சரின் இணைப்பதிகாரி ராஜ்குமார் ஆகியோரும் அரச சார்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

1. Office Assistant (male)

தகைமை:
க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

2. Graphic Designer (male) & Video Editor



தகைமை:
Ms Office, Photoshop, CorolDrow, Video Editing மற்றும் Graphic Desining Software களை கையாளத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிரந்தர வேலை வாய்ப்பு (EPF, ETF) உள்ளடங்கலாகக் கவர்ச்சிகரமான சம்பளம்

தகைமையுடையோர் தமது விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

NALIN Information Technologies Pvt Ltd.

**Nalin information Technologies**
195/ 4, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
021 222 1166, 0777667974
(48,20,50)

# மூனின் குற்றச்சாட்டுக்கு பதிலளிப்பாராம் பொன்சேகா

கொழும்பு, மே 14

ஐ.நா செயலாளர் பான் கீ மூன் தன்மீதும் இராணுவத்தினர் மீதும் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

நேற்று மருத்துவப் பரிசோதனைகளுக்காக கொழும்பு நவலோக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட போது அங்கு வைத்து இதனை அவர் தெரிவித்தார்.

இதன் போது நிபுணர் குழு அறிக்கையூடாக சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு அனுமதித்தால் தான் பதிலளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் நேற்று முன் தினம் வழங்கப்பட்ட அனுமதி யுடன் மருத்துவ ஆவணங்களைப் பெற்று சிகிச்சை பெற வந்த இவர் நாளைமறுதினம் திங்கட்கிழமை மருத்துவச் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-10)

## German Institute

German, Swiss மொழிகள், தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. அடுத்த வகுப்பு June முதலாம் திகதி ஆரம்பம். தொடர்புகளுக்கு 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

## வெளிவந்து விற்பனையாகிறது

தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான

**அமுதம்**

புத்தக பை
ஆக்கம்:- ந. சந்திரகுமார் (மட்டக்களப்பு)

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## விற்பனையாகிறது
## S.L.A.S - S.L.E.A.S

போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்கள்

| | |
|---|---|
| 1. நா. தணிகாசலம் பிள்ளை | 375/= |
| 2. P. உமாசங்கர் | 900/= |
| 3. த. தவசேகர் | 450/= |
| 4. பா. தனபாலன் | 300/= |
| 5. அஸ்ரான் பதிப்பகம் | 700/= |
| 6. சகாணியா பதிப்பகம் | 400/= |
| 7. வே.தபேந்திரன் | 75/= |

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம். | வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## வேலைக்கு ஆள் தேவை

புத்தகம், ஸ்ரேசனரிப் பொருள்கள் வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள சிட்டை எழுதுநர், விற்பனையாளர் தேவை.
(ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது)

* வேலை பழக ஆர்வமுடையோரும் வேண்டப்படுகின்றனர்.
* கவர்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
* தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஹாட்வெயர்ஸ் விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

I. விற்பனையாளர்கள்.
II. சிற்றூழியர்கள்.

★ அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது
★ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குதங்கள் சுயவிவரத்தினை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம்: 4143 C/O உதயன்
(4160) **361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.**

## கொள்முதல் செய்யப்படும்

பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்புகளுக்கு: 0777769869
0757846846
(c/578138) 0772357667.

## SANEYA HERBAL CARE

செம்மணி வீதி, நாயன்மார்கட்டு
ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்

* ஒரே வாரத்தில் உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!!
* முகப் பருக்கள், முகச்சுருக்கம், கரும் புள்ளிகள், கருவளையம், கழுத்து கருமை நீக்கம், உதடு கருமை நீக்கம்,
* உடல் அழகுச்சிகிச்சைகள்
* முடிஉதிர்வு, இளநரை, பொடுகு சிகிச்சைகள்
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்

பெண்களுக்கான 'ஜிம்' பயிற்சிகள்
முற்றிலும் இயற்கை மூலிகைச் செடிகள்
" WE CARE ALWAYS"
முற்பதிவுகளுக்கு
0777351954, 0774011129

# மரண அறிவித்தல்

### திருமதி செல்வானந்தம் செல்வநாயகி (தங்கச்சி)



புங்குதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும், முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி செல்வானந்தம் செல்வநாயகி கடந்த (12.05.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- ஆச்சிக் குட்டி தம்பதியரின் அன்பு மகளும், சின்னம்மா வின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- அமிர்தம் தம்பதியரின் மருமகளும் பகீரதி (ரதி, லண்டன்), ராதிகா (உஷா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிராஜ் (லண்டன்), ஸ்ரீரூபன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), தளையசிங்கம் (பிரான்ஸ்), பாலசிங்கம் ( பிரான்ஸ்), சித்ராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சினி, தேவிகா, தபோநிதி, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், புளோறா, டீலன், புளோறன், றபீனா, டிலக்ஷன், சாருஜன், சர்மிகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.05.2011) சனிக்கிழமை காலை 9 மணி முதல் பொரள்ளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

141/1, மாயா அவனியூ, (சி/578331)
கொழும்பு-06

தகவல்:
தாயார், மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார்

(இளைப்பாறிய அதிபர், யா/உடுப்பிட்டி குணபாலன் வித்தியாலயம்)



CMS லேன், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார் நேற்று (13.05.2011) வெள்ளிக்கிழமை பி.ப 02 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CMS லேன், கொக்குவில்
மேற்கு.0213217979
0789303402 (4207)

தகவல்:
குகன், டாலி,லீலா
(பிள்ளைகள்)

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
## சிவகுரு கந்தசாமி



தாயின் மடியில்
10.05.1936
மருதடியான் திருவடியில்
14.04.2011

அன்பிற்கோர் ஆலயமாய் அறிவிற்கோர் ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார்புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் வாழ இனிதே வழி காட்டினீரே
அழகான நேரங்களை வாழ்நாளில் எமக்களித்து
அழியாத சோகங்களை இமைப்பொழுதில் தந்து மறைந்தீர்களே அப்பா
எம்முடன் நீங்கள் வாழ்ந்த காலங்களை எண்ணி மகிழ்கையில்
மறைந்த அக்கணப்பொழுதே எம் கண் கலங்கவைக்கிறதே அப்பா
நெஞ்சிருக்கும் வரை என்றும் மறவோம் உங்கள் நீங்கா நினைவுகளை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தீபம் அமரர் சிவகுரு கந்தசாமி அவர்கள் இறைவனுடன் சங்கமித்த வேளையில் எமது துயரத்தில்பங்கு கொண்டோர் தொலைபேசி, கடிதம் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், உடன் நின்று உதவிகள் புரிந்தோர், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் மற்றும் அனைத்து கிரியைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (14.05.2011) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குருந்தடிப் பிள்ளையார் கோயிலடி,
விளாத்தியடி வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (49,22,27)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



தானியங்களை உடைத்து, தீட்டி, அரைத்து, நொருக்கி, பிழியும் இயந்திரங்கள் நம்பமுடியாத விலையில்...
2 வருட உத்தரவாதம்

**ஆர்க் என்ரப்பிறைசஸ்**
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

## அடிப்படை சுகாதார மருத்துவ கற்கை நெறி

| | |
|---|---|
| அடிப்படைத் தகைமை | : G.C.E O/L சித்தியடைந்திருத்தல். |
| பயிற்சிக்காலம் | : 6 மாதம் (வார/ வார இறுதிநாள்கள்) |
| பயிற்சிக் கட்டணம் | : 8,000/= |
| விண்ணப்ப முடிவுதிகதி | :- 25.05.2011 |
| அனுப்ப வேண்டிய முகவரி: | இணைப்பாளர் [சுகவாழ்வுக்கான பயணம்] 3ஆம் ஒழுங்கை, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |

* குறிப்பிட்ட தனியார் வைத்தியசாலைகளில் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.
* இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்குச் சுகாதாரத் துறையில் தொழில் வாய்ப்பு உள்ளது.
* பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* மருத்துவ அறிவையும் திறன்களையும் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொலைபேசி இலக்கம்
021 321 6436 (3802)(41) **இணைப்பாளர்.**

## ஆங்கில வகுப்பு

1944ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு இருப்பவரும், 1950 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்தவரும் கடந்த 39 வருடங்களாக புகையிரத நிலைய அதி காரியாகக் கடமையாற்றி தற்சமயம் ஓய்வு பெற்று இருப்பதால் மாணவர்களின் எதிர்கால நன்மை கருதி ஆசிரியர்கட்கு மட்டும் ஆங்கிலம் கற்பிக்கப்படும். விரும்பியோர் விண்ணப்பங்களை அனுப்பி என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.

J.S. [illegible]
139, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்14.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.